...நகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 30 ஞாயிற்றுக்கிழமை (14.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 108

## நாடாளுமன்றத் தேர்தலில்

# வாக்கு எண்ணும் நிலையங்களில் சர்வதேச கண்காணிப்பாளர்கள்

### கட்சிச் செயலாளர்கள் கூட்டத்தில் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு,மார்ச்14

அடுத்த மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், வாக்கு எண்ணும் நிலையங்களில் பணியாற்றுவதற்குக் கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

இதுவரை காலமும் வாக்களிப்பு நிலையங்களில் மட்டுமே சர்வதேச கண்காணிப்பாளர்கள் பணியாற்ற வசதி செய்யப்பட்டது.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களை வாக்கு எண்ணும் நிலையங்களிலும் பணியாற்ற அனுமதிப்பது என்ற முடிவை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்களின் கூட்டத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா வெளியிட்டார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தாயாரை இந்தியா கூட்டிச் செல்ல இப்போது முயற்சிகள்

கொழும்பு,மார்ச் 15

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் தாயார் பார்வதி வேலுப் பிள்ளையை மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர் பாரிச வாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மக்களில் 46ஆயிரம் பேருக்கு தற்போதுள்ள இடங்களில் வாக்களிக்க அனுமதி

கொழும்பு,மார்ச் 14

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெயர்ந்தவர்களில் 46ஆயிரம் பேருக்கு அவர்கள் தற்போது வசிக்கும் இடங்களில் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்தவர்கள் தாங்கள் தங்கியுள்ள இடங்களிலேயே வாக்களிக்க வசதி செய்யும் முகமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

52ஆயிரம் பேர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்தனர். இவற்றில் 6 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட 46ஆயிரம் பேரும் வாக்களிக்க வசதியாக அவர்கள் தற்காலிகமாக

(28ஆம் பக்கம் பார்க்க)

## சுவரொட்டிகள் நாளை தொடக்கம் அகற்றப்படும்

கொழும்பு,மார்ச் 14

நாடாளுமன்றத் தேர்தலுக்காகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ள பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை நாளை முதல் அகற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர்

(28ஆம் பக்கம் பார்க்க)

## தங்கத்தின் இறக்குமதி மீதான அனைத்து வரிகள், தீர்வைகளும் நீக்கம்

### சந்தையில் விலையில் பெரும் வீழ்ச்சி

கொழும்பு,மார்ச்14

தங்கத்தின் இறக்குமதி மீதான அனைத்து வரிகளும் மற்றைய தீர்வைகளும் கடந்த முதலாம் திகதியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தங்கத்தின் இறக்குமதிகள் மீதான ஏற்புடையதான அனைத்து இறக்குமதி வரிகளும் மற்றைய

(28ஆம் பக்கம் பார்க்க)

## 'டிங்கிப்' படகின் அடிப்பாகத்திலிருந்து தற்கொலை அங்கிகள், வெடிபொருள்கள்

### மீட்கப்பட்டதாக கடற்படையினர் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 14

வடபிராந்திய கடற்பரப்பில் டிங்கிப் படகு ஒன்றில் இருந்து தற்கொலை அங்கிகள் மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த ஒருவருக்கு சொந்தமான இந்தப் படகின் அடிப்பாகத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருந்த 3 கிலோ நிறையுடைய சி-4 ரக வெடிபொருள்கள், ஐந்து தற்கொலை

(28ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தற்கொலைத் தாக்குதல் அச்சுறுத்தல் கொழும்பில் இல்லை

### குற்றப் புலனாய்வுப் பணியகம் அறிவிப்பு

கொழும்பு,மார்ச்14

கொழும்பில் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் அச்சுறுத்தல் இல்லை என்று குற்றப்புலனாய்வு பணியக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடத்தில் யுத்தகாலத்தில் சுமார் நூறு தற்கொலைப் படையினர்

(28ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ்தீவில் இருந்து தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப ஆஸ்திரேலிய அரசாங்கம் முடிவு

மெல்போர்ன்,மார்ச்14

கிறிஸ்மஸ்தீவில் இருந்து இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு நாடு கடத்தும் நடவடிக்கைகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அதன் முதற்கட்டமாக 3 தமிழர்களை கிறிஸ்மஸ்தீவில் இருந்து இலங்கைக்கு அனுப்ப ஆஸ்திரேலிய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்மஸ்தீவில் தொடர்ந்தும் அகதிகளை வைத்திருப்பதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோத குடியேறிகள் வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவித்தே அந்நாடு இந்த முடிவை எடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (28ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (T.N.A)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 6
நீங்கள் குண்டடிபட்ட போது, அகதிகளாக அலைப்பட்டபோது
பல அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு அந்தரித்த வேளை –
கடந்த கால் நூற்றாண்டு காலமாக –
உங்களில் ஒருவனாக நின்று உங்களுக்காக குரல் கொடுத்த
உதயன் நிர்வாக இயக்குநர்
தொழில் அதிபர்
ஈ.சரவணபவன்


சுண்ணம்புக்கல் கலவையற்றதால்
நிப்போன் சிமெந்து நன்கு
பற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது


MITSUI CEMENT
தற்போது
NIPPON CEMENT
வாழ்வோடு இணைந்தது
SLS 107
TOKYO CEMENT GROUP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்
குருகுல கலாசாலை, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
நடத்தும்

**கௌரவிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் விகிர்தி வருட விரத நாள்காட்டி வெளியீடும்**

காலம் : இன்று (14.03.2010) ஞாயிறு பிற்பகல் 2மணி
இடம் : குருகுல கலாசாலை மண்டபம், ஆனைப்பந்தி.

நிகழ்ச்சிகள்

மங்கள விளக்கேற்றல், வேதபாராயணம்.
வரவேற்புரை : சிவஸ்ரீ. பரமேஸ்வர மனோகரக்குருக்கள், தலைவர்
ஆசியுரை : அதிவந்தனிய சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள், குருபீடாதிபதி.
தலைமையுரை : வாழ்நாள்பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயர்.
பிரதமவிருந்தினர்: திருமதி அ.வேதநாயகம் அவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்.
சிறப்பு விருந்தினர்கள்: பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர், பிரதிப்பதிவாளர் நாயகம்.
வாழ்நாள்பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் துணைவேந்தர்.
சிரேஷ்ட சட்டத்தரணி திரு. பா.தவபாலன்.
செஞ்சொற்செல்வர் திரு. ஆறு.திருமுருகன், பிராந்திய செயலர், இந்துமாமன்றம்.
கௌரவிப்பு: பிரதிப் பதிவாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்ற
பிரம்ம ஸ்ரீ ந.சதாசிவஐயர் அவர்களையும், அந்தண குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் புதிய சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்திருக்கும்
பிரம்ம ஸ்ரீ ஜோதீந்திரக்குருக்கள் சிவராமசர்மா அவர்களையும் எமது சமூகத்தின் சார்பில் கௌரவித்தல்.
சான்றிதழ் வழங்கல்: 2009ஆம் கல்வியாண்டு வேத, ஆகம பரீட்சையிலும், கணிப்பரீட்சையிலும் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்.
விரத நாள்காட்டி வெளியீடு : விகிர்தி வருட நாள்காட்டி வெளியீடு.
நன்றியுரை.

**அனைத்து அந்தணப் பெருமக்களையும், ஆலய நிர்வாகிகளையும், மாணவர்கள், பெற்றோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

விளம்பர அனுசரணை: ராம் கங்காதரக்குருக்கள், அல்லையம்பதி, துன்னாலை.
(C/565710)



**காணியும் வீடும் விற்பனைக்கு**

சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வர ஆலயத்திற்கு அண்மையில் 2பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776900160
(தரகர் எவரும் தேவையில்லை)
(95881)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### இராசையா தெய்வபுலேந்திரா
(நெல்லியடி)
[தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்]

அண்ணா! கண் மூடித்திறந்த கணம் உங்கள் உயிர் பிரிந்த கதை நம்பமுடியவில்லை... நம்ப முடியவில்லை
இப்பொழுதுதானே எங்களுடன் பேசினீர்கள்
அதற்குள் எப்படி ஆவி பிரிந்தது?
"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

நெல்லியடி. ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் : தம்பி- து.சீலன்.
(95885)

## மரண அறிவித்தல்



திருமதி
### சுந்தரலிங்கம் நாகமுத்து
(ஓய்வுபெற்ற பரிசாரகர், நயினாதீவு )

நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும், நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் நாகமுத்து நேற்று (13.03.2010) சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதர்-சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகளும், சுந்தரலிங்கத்தின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோதிட கலாநிதி சுந்தரன்ஐயாத்துரை-கமலாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகளும், நாகம்மா (இந்தியா), பூரணம், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, நகாரத்தினம், தெய்வேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கலைவாணி (பிரதேசபை, நயினாதீவு), சத்தியபாமா, கமலாகரன் (நோர்வே), நாகபூஷணி (முன்னாள் சமுர்த்தி முகாமையாளர், வவுனியா, பிரான்ஸ்), தயாநிதி (முன்னாள் ஆசிரியை, நயி/கணேச கனிஷ்ட வித்தியாசாலை), உமாதேவி (சுவிஸ்), கிருபா ஐயாத்துரை (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகலிங்கம் (ஓய்வூதியர், பிரதேசசபை, நயினாதீவு), தனிநாயகம் (ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவக வலயம், வேலணை), யோகமலர் (நோர்வே), குகநேசன் (பிரான்ஸ்), அகிலன் (லண்டன்), நந்தினி (நோர்வே) மற்றும் காலஞ்சென்ற சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், அம்பிகைரூபன், அம்பிகை, சிவமங்கை, ராம்காந்த், நிவேதிதா, துஜிகாந்த், அபிராமி, தனுஷா, அனுஷியா, ஆர்த்தி, ஜனனி, ரதீபன், ரதீசன், சரண்யா, சங்கவி, பிரதீப், காவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அட்ஷராவின் அன்புப் பூட்டியுமாவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் இல 427, கோயில் வீதி, நல்லூரில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 427, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே. 0212227632
(95898)
தகவல்: குடும்பத்தினர்.


**சுதா ஆட்ஸ்**

கிறைனட் கல் எழுத்து பொறித்தல், கட்டடத் திறப்பு விழா, நினைவுத் தூபிகள், நினைவுக் கல்லறைகள் போன்றவற்றிற்கு கிறைனட் கல்லில் சிறந்த முறையில் எழுத்துக்கள் பொறித்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0771509295
(95892)



**பிரசாரத்திற்கு பிரசுரம்!**
**பிரசுரத்திற்கு**
**பிள்ளையார் அச்சகம், நல்லூர்.**
(C/565708)



**தேவை**

கொம்பியூட்டர் ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளை தேவை.
ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.
தொடர்பு: 0770343521



**வேலையாள்கள் தேவை**

சாவகச்சேரியில் ஆரம்பிக்கும் சைவ உணவகத்துக்கு சமையலாளர், உதவியாளர், றொட்டி தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர் தேவை.
தொடர்பு: நேரில்
0777177592, பிரதேச செயலகம் முன்பாக A9 சாலை, சாவகச்சேரி.



**வேலையாள்கள் தேவை**

★சமூக மேம்பாட்டைக் கருப்பொருளாகக் கொண்ட நிறுவனமொன்றிற்கு விவசாய கால்நடை வளர்ப்பு சம்பந்தமான வேலையாள்கள் தேவை.
★ தகுதியான, சேவை மனப்பாங்குள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்க்ள் கோரப்படுகின்றன.
★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
★ பராமரிப்பு உதவியாளர்
★தோட்டத் தொழிலாளி
★காவலாளி

விண்ணப்ப முடிவு திகதி : 21.03.2010
திருநெல்வேலி பகுதியை வதிவிடமாகக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது.

விளம்பர இல.3998
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்.



**ஐங்கரன் திருமண சேவை**

எங்களிடம் யாழ். இந்து கௌரவ குடும்பம் UK Citizen 28, 31, 33, 35, 38, 40 வயது, Canada Citizen 30, 33, 37 வயது, அமெரிக்க Citizen 38 வயது, சுவிஸ் Citizen 35, 38 வயது, ஜேர்மன் Citizen 27, 30 வயது, அவுஸ்திரேலிய Citizen 34 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக்கட்டணம் இல்லை.
லண்டன் தொடர்பு: 00447508295863, 00447535384166
Fax No: 00442086720673
E.mail: www.aynkaran wedding @ yahoo.com



**மணமகள் தேவை**

28 வயதுடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும் ஐரோப்பாவில் பிராஜா உரிமை உள்ளவரும் எவ்வித தீய பழக்கங்கள் அற்ற நற்குணமுள்ள மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் தேவை. போட்டோ, Telephone No. ஏனைய விவரங்களை கீழ்க்காணும் E mail க்கு அனுப்பி வைக்கவும்.
Email: Thavaraja77@yahoo.com


## மரண அறிவித்தல்

### முருகேசு செல்வராசா

சாவகச்சேரி, கல்லடி வீதியை பிறப்பிடமாகவும், வவுனியா, ஆசிகுளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்களான முருகேசு-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனான முருகேசு செல்வராசா 13.03.2010 அன்று காலமானார்.

அன்னார் தமயந்தியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், ஆசிகுளம் அ.த.க.பாடசாலை) அன்புக் கணவரும், லவன், லக்சன், நிரோஜா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வையாபுரிநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், C.C.T.M.S), காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவசுப்பிரமணியம், சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (15.03.2010) திங்கட்கிழமை முற்பகல் 10மணியவில் ஆசிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. இல: 0244921420
தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

மதிப்பிற்குரிய பிரதேச செயலரும் எமது நலன்புரிசங்கத் தலைவருமான செ.ஸ்ரீநிவாசன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி குமாரு மீனாச்சி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், சாவகச்சேரி.
தென்மராட்சிப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்.
(C/565699)

## மரண அறிவித்தல்கள்

### பூலோகசுந்தரம் மயில்வாகனம்

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொட்டடி, சீனிவாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பூலோகசுந்தரம் மயில்வாகனம் நேற்று (13.03.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
(95896)
தகவல்: துரைரத்தினம் (மகன்), கணேஸ்வரி (மகள்).

### நடராசா பத்மநாதன் (பாலு)



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பத்மநாதன் (11.03.2010) வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்ல்ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்திரமேழி, இளவாலை.
(95891)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி கந்தையா நாகரத்தினம்



காரைநகர், S.M. கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகரத்தினம் 11.03.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரியின் (சித்திரா- லண்டன்) அன்புத் தாயாரும் தேவானந்தின் (லண்டன்) அன்பு மாமியும் ரம்யா, சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.03.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S.M. கேணியடி, காரைநகர்.
(சி-565706)
தகவல்: திருமதி தேவானந்தம் சித்திரா (மகள்), பெறாமகள்.
(ரூபா பன்முக வர்த்தகம்)

### திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளை



வரணி-இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் குடமியன், வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வள்ளிப்பிள்ளை 12.03.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சீதை தம்பதியரின் மருமகளும் கந்தையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, வல்லிபுரம் மற்றும் கண்ணகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் உதயகுமார் (ஜேர்மனி), சூரியகுமார், (சுவிஸ்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் வசந்தகுமாரி (லண்டன்), செல்வகுமார் (ஜேர்மனி), விஜயகுமார் (லண்டன்), சிவகுமார் (ஜேர்மனி), சகுந்தலா (லண்டன்) ஆகியோரின் பாமிகு தாயாரும் கதிர்காமு, சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி, சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனியும் இந்துமதி, மாலதி (சுவிஸ்), செல்வராசா (லண்டன்), மங்களேஸ்வரி (ஜேர்மனி), சுபாசினி (லண்டன்), துவாரகா, சுதர்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடமியன், வரணி.
( 95969)
தகவல்: கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத் தேர்தல்....!!

அண்மைக்காலத்தில என்றுமில்லாதவாறு இம்முறை யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் திருவிழா கோலாகலமாக ஆரம்பமாகியிருக்கின்றது. இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த மாதம் 8ஆம் திகதி நடைபெறுகின்றது.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இம்முறை 324 பேர் வேட்பாளர்களாக களம் இறங்கியிருக்கின்றார்கள்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 15 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 27 குழுக்கள் தேர்தலில் குதித்துள்ளன. தமிழ் மக் களுக்கு நன்கு பரீட்சயமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியின் பெயரில் வீட்டுச் சின்னத்தில் மாவை சேனாதிராஜா தலைமையில் களத்தில் இறங்கியிருக்கின்றது. மற்றொரு மிக முக்கியமான கட்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பு வெற்றிலைச் சின்னத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர் குழுவொன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பெயரில் சைக்கிள் சின்னத்தில் பிரபல பொருளியல் ஆசிரியர் வரதராஜன் தலைமையிலும், ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் துணைவியார் விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலும், புதிய இடதுசாரி முன்னணி தமிழ்த்தேசியக் கூட்டமைப் பில் இருந்து பிரிந்து சென்ற எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையிலும் போட்டியிடுகின்றன.

யாழ். தேர்தல் மாவட்டத்தின் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக இம்முறை தான் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களை கூறப்போனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவோரில் முன்னாள் எம்.பி களான மாவை. சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், அப்பாத்துறை விநாயகமூர்த்தி ஆகியோர் அடங்கியுள்ளனர். தமிழ்க் காங்கிரஸின் பட்டியலில் முன்னாள் எம்.பி.களான பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் உள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திக் கூட்டமைப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவாந்தா, புதிய இடதுசாரி முன்னணியில் சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா ஆகியோர் முன்னாள் எம்.பி.கள் ஆவார்.

ஏற்கனவே அரசியல் புலத்தில் இருந்தவர்களை விட மிகக் கூடுதலான வேட்டபாளர்கள் இம்முறை புதிதாகக் களமிறக்கப் பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்தின் கல்விமான்கள் , எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், தொழிலதிபர்கள், இளைஞர்கள் எனப் பலர் இந்தத் தேர்தல் களத்திற்குப் புதியவர்களாக உள்ளனர்.

கடந்த காலத் தேர்தல்களை. விட இம்முறை நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிகளவிலான சுயேச்சைக் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் இப்பொழுதான் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசாரம் சற்று சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. வீதிகள், மதில்கள், பொதுக் கட்டடங்கள், மின்கம்பங்கள் என பார்க்குமிடமெல்லாம் இப்போது தேர்தல் சுவரொட்டிகள் தான். பெரும்பாலான போக்குவரத்து வாகனங்களின் முன், பின் பக்கக் கண்ணாடிகளை வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்கள் அலங்கரிக்கின்றன.

யாழ். மாவட்டத் தேர்தல் களத்தில் இம்முறை பல சுவாரஸ்யமான சம்பவங்களுக்கும் பஞ்சமில்லை. தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் பட்டியலுடன் வேட்புமனுவைத் தாக்கல் செய்ய கடந்த மாதம் 23ஆம் திகதி யாழ். செயலகத்திற்கு சென்ற சுயேச்சைக் குழுவொன்று தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்தை தேடித் திரிந்தமை அதில் ஒன்று. அந்தச் சமயத்தில் அங்கு நின்ற ஊடகவியலாளர் ஒருவரிடம் வந்த அந்தச் சுயேச்சைக் குழுவின் தலைமை வேட்பாளர், வேட்பு

## நூதனங்கள் இம்முறை பலரகம்....!!

மனுவை எங்கே கொடுப்பது என்று கேட்டுள்ளார். ஊடகவியலாளருக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை. ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்தைக் காண்பித்திருக்கின்றார். அந்தச் சுயேச்சைக் குழுவில் வந்த வேட்பாளர்களில் பலருக்கு தாம் எங்கு செல்கின்றோம் என்பது கூடத் தெரியாது. வேட்புமனுவைக் கையளித்த சந்தோஷத்தில் அவர்கள் முகமலர்ச்சியுடன் யாழ். செயலக வளாகத்தைவிட்டு வெளியேறியதையும் அந்த ஊடகவியலாளர் பார்த்துக் கொண்டிருந்தார்.

வேறு சில சுயேச்சைக்குழுக் களில் போட்டியிடும் சிலருக்கு தாம் தேர்தலில் போட்டியிடு கிறோம் என்பது கூடத் தெரியாதாம். பத்திரிகைகள் மூலம் வேட்பாளர்களின் விபரங்கள் வெளியான பின்பே தம்முடைய பெயர்களும் அதில் அடங்கியிருப்பதைப் பலர் கண்டு கொண்டனர். இந்தச் சுயேச்சைக் குழுக்களின் தேர்தல் திருவிழாவுக்குள் தாமும் புகுந்துவிட வேண்டும் என்ற ஆசையில் பல இளவல் வட்டங்கள் வேட்பாளர் பட்டியிலில் என்னைப் போடு, உன்னைப்போடு எனப் போட்டி போட்டுக்கொண்டு அலைந்தமை சுவாரஸ்மான சம்பவங்களில் மற்றொன்று.

சுயேச்சைக் குழுக்கள் மட்டுமன்றி பிரதான அரசியல் கட்சிகளின் வேட்பாளர் தெரிவுகளிலும் குத்துவெட்டுக்களும், இழுபறிகளும் நடந்தமையையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் இல்லாதமை பலருக்கும் ஏமாற்றத்தை அளித்தது. இறுதி நேரத்தில் பல்கலைக் கழக மாணவர் ஒருவரும் அதில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நடைபெறவேயில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தமட்டில் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதி நாள் வரை வீணையா? வெற்றிலையா? என்ற இழுபறி நீடித்தது. இறுதியில் அரசதரப்புடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட அவர் தீர்மானித்தார். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரை முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் துணைவியார் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலிலா? யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலிலா? என்ற எதிர்பார்ப்பு நீடித்தது.

யாழ். மக்கள் இதுவரை தெரிந்திராத பெரும்பான்மைக் கட்சிகள் பலவும் இம்முறை யாழ். தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றன. அவை எங்கிருந்தன? அவற்றின் செயற்பாடுகள் என்ன? என்ற விடயங்கள் எதுவுமே யாழ்.வாக்களர்களுக்குத் தெரியாது. அந்தக் கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்களில் யாழ். வாசிகளும் இடபிடித்துள்ளமை வேடிக்கையானது.

இவ்வாறு இழுபறிகளுக்கு மத்தியில் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு இப்போது தேர்தல் பிரசாரம் சிறிது சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. முன்னைய தேர்தல்களில் குறைந்தளவிலான வேட்பாளர்கள் போட்டியிட்டமையால் வாக்காளர்கள் தம்க்கு விருப்பமான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதும் இலகுவாக இருந்தது. ஆனால் நிலைமை இம்முறை அவ்வாறில்லை. காரணம் வேட்பாளர்களின் எண்ணிக்கையும் சின்னங்களும் அதிகமானதே.நூதனங்கள் பல கொண்ட தேர்தலாகவும் இது அமையப் போகின்றது.....!!

இதனால் வாக்களிப்பதில் ஒரு திண்டாட்டமான நிலைமையும் யாழ். வாக்களார்களுக்கு ஏற்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. வாக்குச் சாவடிக்குச் செல்லும் ஒருவர் வாக்குச்சீட்டை பெற்று அதனை நன்கு அவதானித்து தான் விரும்பும் கட்சியைக் கண்டுபிடித்து வாக்களிக்க பல நிமிடங்கள் எடுக்கும். யாழ். வாக்களர்களைப் பொறுத்தமட்டில் இம்முறை அது ஒரு சோதனை தான்.

தேர்தல் பிரசாரம் தற்போது மும்முரமாக ஆரம்பித்திருக்கின்றது. சுவரொட்டிகளை ஒட்டுவதில் இப்போது ஒரு போட்டி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. யார் முந்துகிறார்களோ அவர்கள் அந்தச் சுவர் முழுக்க தங்களது கைவரிசையைக் காட்டி விடுகின்றார்கள். ஆனால் சற்று நிமிடத்தில் அங்கு வரும் அடுத்த கட்சிகள் அந்தச் சுவரொட்டிகளின் மேல் தங்கள் வித்துவத்தனத்தை காட்டிவிட்டுச் செல்கின்றன. இதனால் பல இடங்களில் கட்சி ஆதரவாளர்கள் இடையே மோதல் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. முன்னைய தேர்தல்களில் சுவர்களில் மட்டும் தான் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட காலம் போய் இப்போது மட்டைப் படலைகளிலும், மின் கம்பங்களிலும், அவை ஒட்டப்படுகின்றன.

கிராமப் புறங்கள் உட்பட பல்வேறு இடங்களிலும் வீடுவீடாகச் செல்லும் வேட்பாளர்கள் வாக்குறுதிகளை அள்ளிவீசி வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றார்கள். சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்கள் இப்போது தாராளமாகக் கிடைக்கின்றனவாம். ஒவ்வொரு வேட்பாளர்களும் தாம் தேர்தலில் வென்றால் அல்லறபட்டு- சின்னா பின்னமாகிப் போய் நிற்கும் இந்தத் தமிழ் இனத்துக்கு என்ன செய்வார்கள்? என்பதை விபரிக்கும் துண்டுப்பிரசுரங்கள் தாராளமாக விநியோகிக்கின்றார்கள். சுயேச்சைக் குழுக்கள் உட்பட அனைத்து வேட்பாளர்களும் சுவரொட்டிப் பிரசாரத்துக்காக என்றுமில்லாதவாறு பெருந்தொகைப் பணத்தை வாரி இறைக்கின்றமை மற்றொரு அம்சமாகும். சுயேச்சைக் குழுக்களுக்கு இவ்வாறு பெருந்தொகைப் பணம் எங்கிருந்து வந்தது? எல்லோருக்கும் தெரிந்தாலும் அவர்கள் அதனைத் தெரியாதது போலவே காட்டிக்கொள்கின்றார்கள். என்றாலும் சிலர் வாங்கிய பணத்திற்கு வஞ்சகம் செய்யாமல் வக்காலத்து வாங்கும் விளம்பரங்களையும் வரிசையாக வெளியிடுகின்றனர்.

எனவே இம்முறை நாடாளுமன்றத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தும்- மக்களின் இன்னல்களை உள்ளபடி துணிச்சலுடன் வெளிப்படுத்தும்- இனப்பிரச்சினைக்கான தீர்வினை விரைவில் எட்டுவதற்கு வழியமைக்கும் பிரதிநிதிகளை சரியாக இனங் கண்டு புத்திசாதுரியமாக நடந்து கொள்ள வேண்டிய ஒரு பொறுப்பும் கடப்பாடும் யாழ்ப்பாண வாக்காளர்களுக்கு உண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பெரும் எண்ணிக்கையில் இம்முறை களமிறங்கியுள்ள வேட்பாளர்களை இனங்கண்டு தெரிவுசெய்வதில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதனை இப்போது நாடிபிடிக்க முடியவில்லை.........! நாள்கள் கழியக் கழியத்தான் காரியங்கள் கனமாகும்! ********

-அதிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பரமேஸ்வரன் றெசாயினி

திதி: சதுர்த்தசி (14.03.2010)

தோற்றம் 04.12.1996 | மறைவு 25.02.2009

துள்ளித் திரிந்து பள்ளிக்குச் - செல்லும் பராயத்திலே
கொடிய செல் வந்து பறித்ததுவோ - உன்னுயிரை
ஆறவில்லை எம் மனம்! எப்படித்தான் ஆறுமம்மா
உன் ஆத்மா சாந்திக்காய் இறைவனைப் இறைஞ்சுகின்றோம்

இவரின் நினைவுப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

த.மு.: ஸ்ரேசனடி, மிருசுவில்.
நி.மு.: விசுவமடு சந்தி,
விசுவமடு. (95883)

தகவல்:
ஜெசி (அத்தான்), றொவிதா (அக்கா).

## மரண அறிவித்தல்கள்

### அருணி சீவரட்ணம் (ஜீவா)



ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணி சீவரட்ணம் (07.03.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் அருணி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் பொன்னர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் வசந்தாதேவி (டென்மார்க்), சுசிலாதேவி (சுவிஸ்), நிர்மலாதேவி (டென்மார்க்), மஞ்சுளாதேவி (இலங்கை), கேதீஸ்வரன் (ஜேர்மனி), சுரேந்திரன் (டென்மார்க்), சர்மிலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரட்ணம் (டென்மார்க்), செல்வரெட்ணம் (சுவிஸ்), குலசிங்கம் (டென்மார்க்), அன்ரன் றொபேட் (இலங்கை), உதஜெனி (டென்மார்க்), தமயந்தி (ஜேர்மனி), தனேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரான்ஸில் வசிக்கும் தனபாலசிங்கத்தின் அன்புச் சகோதரனும் தெல்லநாயகியின் மைத்துனரும் திரு.திருமதி யசீலன் - சுகன்யா, தர்ஜன், டனியன், டிலக்ஷன், சரித் சைத்தவி, செள்மியா, சருஸ்யன், பிரியந்தியா, திருமதி குயின்ரீனா - பிரதீபன் டென்சி, டென்சன், டினேஸ் சானுயா, சாரிஸ்டின் ஆகியோரின் பேரனும் வானில வனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.03.2010) செவ்வாய்க்கிழமை அவரது ஜேர்மனியில் உள்ள இல்லத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் றொபேட் (மருமகன்),
குடும்பத்தினர்.
077 0711882, 021 222 9409,
496109698520, 491603009790.

குருசு மதவடி,
ஆனைக்கோட்டை.

### காசிநாதர் சின்னத்துரை



மண்டைதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 383/2, நாவலர் றோட், ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட காசிநாதர் சின்னத்துரை 11.03.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் - வேலாசியா தம்பதியினரின் அன்பு மகனும் இளையகுட்டி - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், தங்கச்சியம்மா, செல்லையா ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சுந்தரமூர்த்தி (ஜேர்மனி), சரவணபவன்(வேலணை ப.நோ.கூ.ச.), நாகேஸ்வரி (ஜேர்மனி), மகேஸ்வரி (லண்டன்), செல்வராசா (சுவிஸ்), புவனேஸ்வரி (ஜேர்மனி), சாருகாசினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருநீலகண்டன் மற்றும் தவானந்தராசா (தருமு), நவநீதரம்பை (நல்லூர் பிரதேசசபை), காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் இந்திராணி, ஆனந்தராசா(ஜேர்மனி), தனபாலசிங்கம் (லண்டன்), தாமரைச் செல்வி (சுவிஸ்),தர்மகுலசிங்கம் (ஜேர் மனி), பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருவருட்செல்வன் (சுவிஸ்), செல்வக்குமார், பத்மாவதி (சுவிஸ்), ஜெயச் சித்திரா (இந்தியா), வத்ஸலா (கிளி/இரணைதீவு றோ.க.த.க.பா.), கௌரிகரன் (லண்டன்), ஸ்ரீவித்தியா, தர்சிகா, விபூஷன், கேசவநாத், கனிமொழி, தர்சினி(சுவிஸ்), கிருஷ்ணராஜா (ஜேர்மனி), சுரேசினி (லண்டன்),கபிலராணி(கிளி/கரியாலை நாகபடுவான் இல.2. அ.த.க.பா.), சிவகௌரி, றஜனிக்காந்தன் (பெல்ஜியம்), சர்மிளா, கஜாநிதி, றஜிக்காந்தன், றம்மியா (ஜேர்மனி), அரவிந் (ஜேர்மனி), தனலக்சி (லண்டன்), யோபிகா (லண்டன்), அரவிந் (சுவிஸ்), காஞ்சனா (சுவிஸ்), காஞ்சிகா (சுவிஸ்), நிதர்சன் (ஜேர்மனி),நிரோசன் (ஜேர்மனி), நிஷாங்கா (ஜேர்மனி), கிஷானா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் வித்தியா, பிரசாந், ஜதிசன், சாரினி, தாருகன், சுஜித்தன், கஜீவன், நிவேதன், மதுஷன், அக்சயா, தருண், லுஜித், கரிஸ், கம்சி, கிதுசியா, றம்மியா, மதீசன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 383/2, நாவலர் றோட், (சி/565691)
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## பன்னிரு திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டுமக்கள் சாந்தி, சமாதானத்துடன் நிம்மதியாக வாழவேண்டுமென பிரார்த்தித்து வருடம் முழுவதும் மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதலென பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதிவருகிறது.

இந்த வகையில் நாளை பங்குனி மாதப்பிறப்பன்று நல்லூர் ஸ்ரீ மூத்த விநாயகர் கோயிலில் ஆலய தர்மகர்த்த சபையினரின் அனுசரணையுடன் பிற்பகல் 4 மணிக்கு விசேட பூசை நடைபெற்று அழகிய சுந்தரமுத்துப் பல்லக்கில் நாயன்மார் நால்வர் எழுந்தருளி காரைநகர் மருதடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தைச் சென்றடையும். ஆலய அறங்காவல் சபையினரின் அனுசரணையுடன் பூசை வழிபாடுகள் நடைபெற்று மன்றத்தலைவர் பண்டிதர்வ.பேரின்பநாயகம் தலைமையில் பன்னிரண்டாந் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும்.

இம் முற்றோதல் தினமும் மாலை ஆலயப் பூசையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கின்றார். (1)


## பிறின்சி போல்றி பாம்

புறொய்லர் குஞ்சு, (நியூ பேணாட்ஸ்), முட்டைக்குஞ்சு, கோழி இறைச்சி, கால்நடைத்தீவனம் என்பனவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: 23.03.2010 அன்று குஞ்சு விநியோகம் நடைபெறும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

380, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்,
இ.பீற்றர்தாஸ்-0776095749

## வயற்காணி விற்பனைக்கு

மறவன்புலோவில் 60 பரப்பு வயற்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6440617

## விற்பனைக்கு

Ashok Leyland HN xxxx இலக்கமுள்ள ரிப்பர் விற்பனைக்குண்டு.

தொ.பே.077 1754667

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே. சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த, புகழ் பூத்த-சுயதெரிவு முறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:2360488, 2360694, 4873929

## வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு

சகல விதமான,வளர்ப்பு மீன்கள்,தொட்டிகள், ஒட்சிசன் மோட்டர், மீன் தொட்டி அழகு பொருள்கள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு.

SOMASUNDARAM AQUARIUM,
22,சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 0777-903090

## தேவை

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கனேடிய இணைநிறுவனத்திற்கு (யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற) முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவு (8000-12000) பயிற்சியின் பின்னர் (35000-50000) EPF, ETF உள்ளடங்கலாக.

தொடர்புகளுக்கு:
K.T.Nathan: 0776795940,0712088285


## தவறிவிட்டது

மகேந்திரராசா வினோதன் என்பவரது தே.அ.அட்டை (842595266V), விசேட அ.அட்டை, சிறுதொகைப் பணம் என்பன உள்ளடங்கிய பேர்ஸ் நவக்கிரிக்கும், புன்னாலைக் கட்டுவன் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பி.வ முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஏழுகோவிலடி, ஏழாலை மத்தி, ஏழாலை.


## விற்பனைக்கு

டோகாவிலிருந்து கொண்டுவரப்பட்ட எலக் ரோனிக் புதிய பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

1.DVD PLAYER (GEEPAS)
2.SONY(12300W.P.M.PO., DVD) CHANGER
3.LG L.C.D 32" T.V
4.ARTEC.SCAN
5.DATASWITCH
6.HR. 2440 DRILL (Thakita, Japan)
7.PORTABLE (DVD Player 10 LCD)
8.CANON (CAMARA DIGITAL) Eos (1000D), (E.F 518-55)
9.V.C.R.PLAYER
10.ULTRA (TOPGRIENDER)
11.BLACK DECKER (COOKER)
12.MIXING MADE (Silver cookiemaker)

மேலதிக தொடர்புகளுக்கு:
0776989864


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 . 07 . 1985



இறப்பு 25 . 03 . 2009

### திருமதி நிசாந்தி சர்வானந்தகரன்

(அம்பன், குடத்தனை)

திதி : சதுர்த்தசி 14.05.2010

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பரிணமித்த என் துணையே
உற்றவர் பார்த்திருக்க
சுற்றவர்கள் சூழ்ந்திருக்க
மழலைகள் துடிதுடிக்க
காலனவன் எறிகணையாய்
வந்து உன்னுயிரை
எடுத்தானோ?
ஆண்டொன்று ஆனாலும் - அம்மா
ஆறாது உன் துயரம்
அனுதினமும் பார்த்திருப்போம்
மீண்டும் நீ வருவாயென...!

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்

அம்பன்,
குடத்தனை. (95879)

கணவர்:சர்வானந்தகரன்
பிள்ளைகள் : ரேந்தினி,
வர்ஷாயினி மற்றும் உறவினர்.

## மரண அறிவித்தல்கள்



### பொன்னையா பார்பதி

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பார்பதி நேற்று (13.03.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, அன்னம்மா மற்றும் பொன்னுத்துரை, முத்தாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கந்தையா, சண்முகம், இரத்தினம், தில்லையம்பலம், செல்வராணி மற்றும் சொக்கலிங்கம் (பரமு) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புன்னம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சரவணை கிழக்கு,
வேலணை. (95880)

தகவல்:
மனோகரன் (பெறாமகன் - தேவா)

### திருமதி விசாலாட்சி கனகராசா (கொழும்பு)



கொழும்பைப் பிறப்பிடமாகவும், ஸ்காபரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி கனகராசா 11.03.2010 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், கனகராசாவின் (நாரந்தனை - கனடா) அன்பு மனைவியும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இராமச்சந்திரன், மகேஸ்வரி, நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் சுதேஸ்குமார் (பபா - கொழும்பு), மோகனாம்பிகை (கனடா), சதீஸ்குமார் (கனடா), கமலாம்பிகை (ரஞ்சனி - இங்கிலாந்து), ஞானாம்பிகை (கனடா), குலசெல்வம் (செல்வம் - கனடா), கிருஸ்ணகுமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் அனுலா (கொழும்பு), சிதம்பரநாதன் (ரவி-கனடா), மோகனாவதி (கனடா), நடனகாந்தன் (இங்கிலாந்து), சிவகுமார் (கனடா), மதனிக்கா (கனடா), நர்மதா (கனடா) ஆகியோரின் பாசமுள்ள மாமியாரும் , கனடாவில் வசிக்கும் வினோத், அஜினி, நிதிலா, இன்னிலன், அக்ஷயா, மாவலன், அஞ்சனி, சுவேதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13.03.2010 சனிக்கிழமை அன்றும் 14.03.2010 ஞாயிற்றுக்கிழமை அன்றும் மாலை 5மணி முதல் 9 மணிவரை பார்வைக்காக Ogden Funeral Home 4164, Sheppard Ave East (Midlland/Shepperd)இல் வைக்கப்பட்டு திங்கள் காலை 8 மணி தொடக்கம் 10.00 மணிவரை அதே மண்டபத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மதியம் 12 மணிக்கு சென்.ஜேம்ஸ் மயானத்தில் (Wellesley/Parliament) தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகராசா (கணவர்) 416-3212073
பபா (மகன்) 01194-777827438
ரவி (மருமகன்) 416-2583923
சதீஸ் (மகன்) 416-4977115
ரஞ்சி (மகள்) 0044-2086903703
செல்வம் (மகன்) 416-7226156
குமார் (மகன்) 416-6177005
சிவகுமார் (மருமகன்) 647-2941966
(சி/565471)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமிட விடுதிகளால் தவிக்கும் மக்கள்; பூனைக்கு மணி கட்டுவது யார்?

நின்ற வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போன கதையாக யாழ்ப்பாணத்தின் பல வீடுகளின் நிலை மாறியிருக்கிறது. கொஞ்சக்காலத்துக்கு முன்னர் - போர் உக்கிரமடைந்திருந்த போது - யாழ்ப்பாணத்தில் யாருமே தேடுவாரற்று பல வீடுகள் வெறிச்சோடிக்கிடந்தன. வன்னியில் மூண்ட யுத்தம் யாழ்ப்பாணத்திலும் தாக்கங்களை உண்டுபண்ணும் என்பதாலும் இங்கிருப்பதை காட்டிலும் கொழும்பிலோ அல்லது வேறுநாடுகளிலோ தங்கிருப்பதே பாதுகாப்பானது என்ற உணர்வு எல்லோரிடமும் தொற்றிக் கொண்டதால் பலரும் யாழ்ப்பாணத்தை 'அம்போ' என்று விட்டுவிட்டு தமது உயிர் வாழ்தலைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பறந்தோடினர். உரிமையாளர்கள் வீட்டில் இல்லாவிட்டால் உரிய பராமரிப்பு இன்றி கால்நடைகளின் கூடாரமாகத் தமது வீடுகள் மாறிவிடக்கூடும் என்ற எண்ணத்தில் பலரிடமும் காலில் விழாத குறையாக மன்றாடி தமது வீடுகளில் தங்கியிருக்குமாறு உரிமையாளர்கள் வேண்டிக் கொண்டனர். இதற்கு ஒருபடி மேலே சென்ற சிலர் தமது வீடுகளில் தங்கியிருந்து அங்குள்ள மரம் செடிகளைப் பராமரித்தால் அதற்கு ஒரு குறித்த தொகைப் பணத்தையும் மாதாமாதம் வழங்குவதற்கு முன் வந்தனர்.

எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிவிட்ட சில அரசியல், களநிலை மாற்றங்களால் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை மண்ணில் மையம் கொண்டிருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் தான் யாழ்ப்பாண வீடுகளுக்கு திரும்பவும் மவுசு ஏற்படத்தொடங்கியது. யுத்த பயம் இல்லாமல் போன காரணத்தால் மீளவும் தமது சொந்தவீடுகளுக்குப் பலரும் திரும்பத் தொடங்கினர். இது தவிர வன்னியில் இருந்து வெளியேறி நலன்புரி நிலையங்களில் முடங்கிக் கிடந்த மக்கள் கட்டம்கட்டமாக விடுவிக்கப் படத் தொடங்கினர். இவர்களில் பெரும்பாலானோர் வன்னியைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தபோதும் அங்கு உடனடியாக மீளக்குடியமர்வதற்கு எந்தவிதச் சாத்தியங்களையும் பாதுகாப்புத் தரப்பு வழங்குவதற்கு முன்வரவில்லை. ஏனவே வேறுவழியின்றி யாழ்ப்பாணத்தில் உள்ள தம்முடைய உறவினர்கள், மற்றும் நண்பர்களின் வீடுகளில் நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் ஒண்டிக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும் எத்தனை நாளைக்குத் தான் 'பிறத்தியாரின்' வீட்டிலேயே காலத்தைக் கழிக்கமுடியும்? மருந்தும் விருந்தும் மூன்று நாளைக்குத்தான்.

உறவினர், நண்பர்கள் வீடுகளிலே தங்கியிருந்தவர்களுக்கு மெல்லமெல்ல சில பிரச்சினைகள் தலைதூக்கத் தொடங்கின. இவற்றினை நிவர்த்திப்பதற்கு அவர்களுக்கு இருந்த ஒரே வழி வாடகைகொடுத்தென்றாலும் தனியே வேறொரு வீட்டில் வசிப்பது தான். எனவே வீடு தேடும் படலத்தில் இவர்கள் இறங்கினர். தவித்த முயல் அடிப்பதில் வல்லவர்களான நம்மவர்கள் இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடத்தயாராகஇல்லை. அது நாள் வரையும் சீண்டுவார் அற்றுக் கிடந்த பல வீடுகளுக்கு ஆயிரக்கணக்கில் வாடகை நிர்ணயிக்கப்பட்டது. எப்படியாவது தனி வீட்டுக்கு வந்துவிடவேண்டும் என்ற தவிப்பில் இருந்தவர்களுக்கு வாடகை ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. வன்னியிலே எல்லாவற்றையும் இழந்துவிட்டுவந்த அவர்களுக்கு மிக அதிகமான பொருளாதார நெருக்குவாரங்கள் இருந்தபோதும், நண்பர்கள், உறவினர் வீடுகளில் உண்டாகக்கூடிய பிரச்சினையைத் தவிர்ப்பதற்காக அவர்கள் வாடகையைப் பற்றி கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் எல்லா வீடுகளிலும் மீண்டும் மனித வாடை வீசத்தொடங்கிற்று.

இந்த நிலையில் தான் ஏ-9 வீதியினூடான போக்குவரத்தில் இருந்த எல்லாத் தளைகளும் திடீரென ஒரு நாள் அறுந்துபோனது. 24 மணிநேரமும் யாரும் எப்போதும் எங்கும் ஏ-9 வீதியூடாகப் பயணிக்கும் நிலை 30 வருடங்களுக்குப் பின்னர் சித்தித்தது. குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்குச் செல்பவர்களை விடவும் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் படையெடுப்போரின் எண்ணிக்கை மிக அதிகளவிலேயே இருந்தது. ஆனாலும் அவ்வாறு வருகின்ற தென்னிலங்கைப் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப இங்குள்ள தங்குமிட வசதிகள் மிகக்குறைந்தளவிலே இருந்தன.

இதற்குமுன்னர் சுற்றுலாப்பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யவென யாழ்ப்பாணத்தில் இருந்த சுபாஷ் ஹோட்டல், அசோகா ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் என்பன படைத்தரப்பின் பாவனையில் இருந்தபடியால் பயணிகளின் தங்குமிடப்பிரச்சினை அதிகளவில் நிகழத் தொடங்கியது. இதனால் துரையப்பா விளையாட்டரங்கு, வீரசிங்கம் பொதுமண்டபம் போன்ற பொது இடங்களே இவர்களின் தற்காலிக தங்குமிடமாகிப்போனது. எதையுமே வியாபாரமாக்குவதில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு நிகர் யாழ்ப்பாணத்தவர்களேதான். எனவே இத்தகைய தங்குமிடப் போதாமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் சிறுசிறு தங்குமிட விடுதிகளை அமைக்கத் தொடங்கினர். எல்லாத் தொழில்களையும் விட அதிகளவு இலாபத்தினை ஈட்டித்தருகின்ற துறையாக 'லொட்ஜ்'கள் மாறிப்போனமையால் இந்தத் துறையில் பலரும் கால்பதிக்கத் தொடங்கினர். ஆனாலும் சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்? ஏற்கனவே மீளக்குடியேறியோரால் எல்லா வீடுகளும் நிரம்பிவழிந்துகொண்டிருக்கும் சூழலில் புதிதாக முளைக்கும் 'லொட்ஜ்'களுக்கு எங்கே வீடுகளைப் பெறுவது என்ற பிரச்சினை தலைதூக்கத்தொடங்கியது. புதிதாகக் கட்டடங்களை அமைப்பதோ அல்லது ஏற்கனவே இருக்கும் சிறு கட்டடங்களைப் பெரிதாக்குவதோ உடனடிச்சாத்தியமான காரியங்கள் அல்ல. அவற்றுக்கு நீண்ட காலம் தேவைப்படும். ஆனாலும் 'லொட்ஜ்'காரர்களுக்கு அவசர அவியல் ஒன்று தேவைப்பட்டது. அவர்கள் எவருமே ஆக்கப் பொறுத்தளவிற்கு ஆறப்பொறுக்கவில்லை. எனவே புதிய மாற்றுவழிகுறித்த தேடலுக்கே அவர்கள் செல்லவேண்டியிருந்தது. இந்நிலையில் தான் அவர்களுக்கு பிரதான வீதிகளில் ஓரமாக அமைந்திருந்த வீடுகள் பலவும் வாடகைக்கு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ள விடயம் மூளையில் உறைத்தது. கையிலே வெண்ணையை வைத்துக் கொண்டு ஊரெங்கும் அலைவான் ஏன்? என்ற நினைப்பில் வீட்டு உரிமையாளர்களிடம் குறித்த வீடுகளை முன்னரைக்காட்டிலும் பல மடங்கு அதிகதொகை வாடகைக்குத் தருவதாகவும், இதற்கு வீட்டிலே குடியிருப்போரை விரைவில் அகற்றித்தரும்படியும் அவர்கள் தூதுமேல் தூதாக விட்டுக்கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் இது குறித்துப் பெரிதாக அலட்டிக்கொள்ளாத வீட்டு உரிமையாளர்கள் நாளடைவில் மிகப்பெருந்தொகையை ஏன் வீணாக இழக்கவேண்டும்? என்ற எண்ணம் வரப்பெற்றவர்களாக சம்மதித்தார்கள்.

தென்னையிலே தேள் கொட்ட பனை மரத்துக்கு நெறிகட்டியது போல அதிகரித்த தென்னிலங்கைப் பயணிகளின் வருகை வாடகைக்குக் குடியிருந்தோரின் வாழ்விடத்தை அசைக்கத் தொடங்கியது. வீட்டு உரிமையாளர்கள் சாம, தான, பேத, தண்ட வழிகளை உப யோகித்து வாடகைக்கு இருந்தவர்களை மிகக்குறைந்த கால அவகாசத்தில் வெளி யேற்றினர். இத னால் புற்றீசல் களாய் வீதிகள், ஒழுங்கைகள் எங்கும் புதிது புதிதாகத் தங்குமிட விடுதிகள் பெருகத் தொடங்கின. வழமையாக ஒரு தங்குமிட விடுதி அமைக்கப்படவேண்டுமாயின் அதற்கென்று பிரத்தியேகமாகச் சில நடைமுறைகள் பின்பற்றப்பட்டு உரிய அதிகாரிகளின் அனுமதியின் பின்னரே அவை செயற்படத்தொடங்கவேண்டும். ஆனால் அவையெல்லாமே தூக்கி எறியப்பட்டு இத்தகைய விடுதிகளின் பெருக்கம் தன்பாட்டில் நிகழ்ந்தது. இதனால் குறித்த வீடுகளிலேயே வாடகைக்குக் குடியிருந்தோர் ஒரே நாளிலேயே நடுத்தெருவில் நிற்க வேண்டிய அவலம்கூட எழுந்தது. எங்கிருந்தோ வந்தவர்கள் தங்குவதற்காக இங்கேயே இருந்தவர்கள் இருப்பிழந்து போனார்கள்.

சரி வந்தவர்கள் தான் சௌகரியமாக இங்கே - 'லொட்ஜ்'களில் - தங்குகிறார்களா என்று கேட்டால் அதற்குகூட இல்லையென்ற எதிர்மறையான பதிலையே பெறவேண்டியிருக்கிறது. கையில் கிடைத்த வீட்டை ஒப்புக்காக 'பெயின்ற்' அடித்து விட்டு, ஒரு சில ஒப்பனை வேலைகளைச் செய்துவிட்டு பெரிதாகத் தங்குமிட விடுதி என்ற பெயர்ப்பலகையைத் தொங்கவிடுகிறார்கள். "சிங்காரக்கொண்டையாம் ஆனால் உள்ளே ஈரும் பேனுமாம்" என்ற பழமொழியை நிரூபிக்கும் வகையில், பஸ்கணக்கில் வந்து இறங்குகிற பயணிகளுக்கு இவை போதாமையையே உண்டு பண்ணுகின்றன. இதனால் தங்குமிட விடுதிகளில் பணத்தைக் கட்டி விட்டு பஸ்களிலேயே உறங்குகின்ற பயணி களைச் சர்வசாதாரணமாகக் காணமுடியும். "உண்மையில் இவை தங்குமிட விடுதிகள் இல்லை. ஒரு வகையில் மிகப் பெரிய கட்டணக்கழிப்பிடங்கள் என்றே இவைகளைச் சொல்லலாம்" என்று இத்தகைய தங்குமிட விடுதியொன்றில் சில நாள்கள் இருந்த தென்னிலங்கைப் பயணி ஒருவர் கூறினார்.

இத்தகைய எல்லா அவலங்களுக்கும் அதிகாரிகள் நினைத்தால் விடிவுபிறக்கும். ஆனாலும் பூனைக்கு யார் மணிகட்டுவது?

-இளங்கன்-



# நாடாளுமன்றத் தேர்தல் - 2010

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)

இன்றைய தேர்தலுக்காக அல்ல...
அன்றைய உண்மையான சேவை..!



சுனாமி நிவாரணப் பொருள்கள் உதயன் நிறுவனத்தினரால் சேகரிக்கப்பட்டு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் உள்ளவர்களுக்கு வழங்கும் காட்சி.



உதயன் நிர்வாக இயக்குநர்

தொழிலதிபர்

ஈ.சரவணபவன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X 6

…புள்ளடி வீட்டுக்கு நேரே! அடுத்த புள்ளடி 6 க்கு மேலே!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனை அபிவிருத்தி அலுவலகம் யாழ்ப்பாணக் குடாநாடு

## மக்பேட்டன் (பிரைவேட்)லிமிட்டெட்
## Macbertan (Private)Limited

**(மக்லரன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அலயன்ஸ் கொம்பனி பி.எல்.சி நிறுவனங்களுடன் இணைந்த ஒரு ஸ்தாபனம்)**

இலங்கையில் தேர்மல் இன்சுலேஷன் பொருள் உற்பத்தியில் முன்னோடி நிறுவனமான மக்பேட்டன் (பிரைவேற்)லிமிடெட் இல் மேற்படி பதவி வெற்றிடம் உள்ளது. பொருத்தமானவரை எமது விற்பனை அணியினருடன் இணைந்து யாழ்ப்பாண குடா நாட்டின் எமது உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்த அழைக்கின்றோம்.

தகுதியான விண்ணப்பதாரி கட்டடங்கள் அமைப்பவர்கள் மற்றும் பொறியியல் துறையினருக்கு பொருள்களைச் சந்தைப் படுத்துவதில் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் யாழ்ப்பாணத்தில் வசிப்பவராகவும், மோட்டார் சைக்கிள் உரிமம் பெற்றவராகவும் இருப்பதுடன் ஆங்கில மற்றும் தமிழ் மொழிகளில் சரளமான அறிவுடையவரா கவும் இருப்பது அவசியம்.

மக்பேட்டன் (தனியார்) நிறுவனம் கவர்ச்சிகரமான ஊதியப் பொதியொன்றை வழங்கத் தயாராய் உள்ளது. தொழில் துறையில் சவாலான சந்தர்ப்பங்களை எதிர்கொண்டு முன்னேற விரும்புபவர் களுக்கு அரிய சந்தர்ப்பம்.

உங்கள் CV (சுயவிவரம்) யை இந்த விளம்பரம் வெளிவந்த 7 நாள்களுக்குள் vacancies@macbertan.lk இணையதளத்துக்கு அல்லது அஞ்சல் மூலம் தயவுசெய்து அனுப்பிவையுங்கள்.

**The Director,**
**Macbertan (Private) Limited,**
**No.284, Vauxhall Street, Colombo 2**



# TECHNO WORLD
**Studies (Pvt) Ltd**

## கணினிப் பயிற்சி நிறுவனம்

**மகளிர் தின சிறப்பு**
**கட்டணச்சலுகை இன்னும் சில வாரங்களுக்கு மட்டுமே.**



எந்தவொரு கணினி
கற்கை நெறிக்கும் 1650/= pm

- Desktop Publishing
- Video Editing
- Accounting
- Graphic Design & many more...

**10 ஆண்டு கால அனுபவம்**

இச் சலுகை
எமது 16 பிராந்திய நிலையங்களிலும்
கிடைக்கும்

**யாழ் குடாநாட்டில்...**

| | | |
|---|---|---|
| 334,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4921124 | தினேஸ் வெதுப்பக மேல்மாடி, 182, யாழ் வீதி, மானிப்பாய். 4922400 | 142 பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. 4922401 |

**கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்**


## கூட்டம்

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் முதலாவது செயலமர்வுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கைதடி தெற்கு சன சமூகநிலைய மண்டபத்தில் நடைபெறஇருப்பதாகஒன்றியச் செயலாளர் வே.பேரம்பலம் அறிவித்துள்ளார்.

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் கைதடிப் பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாகக் கலந்துரையாடல் இருப்பதானால் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் கேட்டுள்ளார்.(201-2888)


## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும், விற்பனை செய்யப்படும். விலைக்கழிவு உண்டு.

தொடர்பு: மல்ரிபாம் சென்ரர்
*61, இராமநாதன் வீதி, கலட்டி. தொ.பே: 0217912783*



## பயிற்சி நெறிகள்

COMTEC

எமது நிறுவனத்தில் பின்வரும் பயிற்சி நெறிகள் 05.04.2010 அன்று ஆரம்பமாகவுள்ளன.

1. அலுமினியம் பொருத்துதல் தொழில்நுட்பம் (06 மாதங்கள்)
2. கணனி மென்பொருள் வகுப்புக்கள் (06 மாதங்கள்)
3. தையல் பயிற்சி வகுப்புக்கள் (06 மாதங்கள்)

வயதெல்லை: 16-35

அதிநவீன பயிற்சி உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு முழுநேர பயிற்சி வழங்கப்படுகின்றது. பயிற்சி நெறிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மேற்படி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பதாரிகள் 26.03.2010 வெள்ளிக்கிழமை ந.ப.12 மணிக்கு முன் நேரடியாக சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பயிற்சி முடிவில் சர்வதேச தராதரமுடைய சான்றிதழ் வழங்கப்படும்.

**குறிப்பு:** அரச அங்கீகாரம் பெற்ற NAITA பரீட்சை எழுதுவதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

இயக்குநர், கொம்ரெக், சுழிபுரம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

முப்பத்தாறாண்டுகளாய் அளப்பெரும்
சேவையாற்றி இளைப்பாறும்
பிரதி அதிபர் திரு.நடராசா நந்தகோபன்
அவர்களை எம் இனிய வாழ்த்துக்களால்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.



## திரு.நடராசா நந்தகோபன்

விசேடபயிற்சி- கணிதம், இலங்கை ஆசிரியர் சேவை தரம்-I

பிறப்பு: 1949-11-21 ஏழாலை

விலைகொடுக்க முடியா சேவை நல்கிய பாடசாலைகள்

01) 01-06-1973 - 31-05-1978 யா/மயிலிட்டி கலைமகள் ம.வி.
02) 01-06-1978 - 31-12-1978 யா/யூனியன் கல்லூரி.
01-01-1979 - 31-12-1981 பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
03) 01-01-1982 - 14-06-1987 ப/பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம்.
04) 01-01-1987 - 14-06-1990 கிளி/கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம்.
05) 15-06-1990 தொடக்கம் 14-03-2010 வரை யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

உன் சேவையின் விழுதுகளாய்த் தாங்கி வாழ்த்தும்

ஆசிரியர் கழகம்,
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

# 50 ஆவது திருமண நாள்




114/19, நாவலர் வீதியில் அமைந்திருக்கும் 'ஆனந்தபவனத்தில்' வசிக்கும் தேவி அச்சக ஸ்தாபகர் ப.கிருஷ்ணமூர்த்தி - விமலாதேவி தம்பதியினரின் 50 ஆவது திருமணநாள் 01.02.2010 இல் நடைபெறவிருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை திங்கட்கிழமை (15.03.2010) இல் கொண்டாடுகின்றனர்.

பொன்விழா நாயகனுக்கு இன்று பிறந்த நாள்

இவர்களை கி.நித்தியானந்தன் குடும்பத்தினர் (ஜேர்மனி)
மு.குகதாசன் (கணேஷ்) குடும்பத்தினர் (கொழும்பு)
கி.அகிலானந்தன் குடும்பத்தினர் (கனடா)
க.ஜீவா குடும்பத்தினர் (ஜேர்மனி)
கி.சர்வானந்தன் குடும்பத்தினர் (கொழும்பு)
கி.தயானந்தன் குடும்பத்தினர் (சுவிஸ்)
கி.முருகானந்தன் குடும்பத்தினர் (ஜேர்மனி)
கி.தேவானந்தன் (லண்டன்), ப.சம்பந்தர் குடும்பத்தினர்
எஸ்.முத்துக்கிருஷ்ணன் குடும்பத்தினர்
ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

தேவி அச்சக குடும்பத்தினர்
'ஆனந்தபவனம்', 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Phone: 8273, Hotline: 0776029727.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடக்கி வாசித்தல்!

தேர்தல் இன்னும் சூடு பிடிக்கவில்லை. இல்லையென்றால், அம்பாறை மாவட்டத்தில் இப்போதே ஆகக்குறைந்தது இரண்டு மூன்று வாள்வெட்டு, கத்திக்குத்து, கல்லெறிச் சம்பவங்கள் என்று - ஆட்டம் அழகாக ஆரம்பித்திருக்கும். வழமையாக தேர்தல் வன்முறைகள் அதிகமாக இடம்பெறும் மாவட்டங்களில் அம்பாறையும் ஒன்று என்பதால், காடைத்தனங்களுக்கு இங்கு பஞ்சமிருப்பதில்லை!

ஆனால், திடீரென இங்குள்ள அனைத்து அரசியல்வாதிகளும் காந்திகளாக மாறி விட்டார்களோ என்று சந்தேகப்படும்படியாக நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம், மாற்றுக் கட்சிக்காரர்களின் சுவரொட்டிகள் எங்காவது ஒட்டப்பட்டிருந்தால் கூட, அவைகளை - ஈரம் காய்வதற்குள் முகர்ந்து பிடித்துக் கிழித்தெறிந்து விடுவார்கள் மற்றைய தரப்புச் சண்டியர்கள். ஆனால், இப்போது பெரிதாகச் சேதாரங்கள் எதுவுமில்லாமல் - எல்லாத் தரப்பு வேட்பாளர்களும், சுவரொட்டிகளில் பல நாள்களாகச் சிரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அப்படியென்றால், இங்குள்ள அடாவடிக்காரர்கள் எல்லோரும் எங்கு போய்விட்டார்கள்? குறிப்பாக ஆளுந்தரப்புச் சண்டியர்களுக்கு என்னாயிற்று? திடீரென எல்லோரும் இரவோடு இரவாகக் கூடி முடிவெடுத்து - ஒட்டு மொத்தமாகத் திருந்தி விட்டார்களா?

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை!

அநேக வேட்பாளர்களுக்கு அவர்களின் வெற்றி குறித்து - சந்தேகமும், பயமும் எழுந்துள்ளது. அதனால், கொஞ்சம் அடக்கி வாசித்தால் நல்லது என்று அவர்களே ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

அத்தோடு, ஆளுந்தரப்பு வேட்பாளர்கள் பலருக்கு - எதிர்க்கட்சிக்காரர்களின் வாக்குகளையும் சேர்த்துப் பெற்றால்தான் வெற்றி பெற முடியும் என்கின்றதொரு நிலைவரம் இருக்கிறது. அதனால், அடிபிடியை இப்போதைக்கு ஒதுக்கி வைத்து விட்டு, எதிர்த்தரப்பினரோடு நட்புப் பாராட்டி அவர்களின் வாக்குகளைப் பெறுவதே புத்திசாலித்தனம் என்றும் அவர்கள் கணக்குப் போட்டிருக்கலாம்.

அதனால்தான், வழமையாக தேர்தல் காலங்களில் ரணகளப்பட்டுப் போய்க் கிடக்கும் அம்பாறை மாவட்டம், இப்போது சாந்த பூமியாக காட்சியளிக்கிறது.

**முள்ளை முள்ளால் எடுத்தல்!**

அம்பாறை மாவட்டத்தில் மு.காங்கிரஸ் காரர்கள் மீதான வன்முறைகள் - தேர்தல் காலங்களில் மிகக் கடுமையாகக் கட்டவிழ்த்து விடப்படுவது வழமை! இந்த வன்முறைகளில் அதிகமாக ஈடுபடுகின்றவர்கள் அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸைச் சேர்ந்தவர்கள்தான்.

மு.காங்கிரஸில் தீவிரமாக இயங்கும் தொண்டர்களைக் குறிவைத்து இந்த வன்முறைகள் நிகழும். அதுமட்டுமன்றி, இவர்களுக்கெதிராக ஒன்றன் பின் ஒன்றாக, பொலிஸில் ஏதாவதொரு குற்றச்சாட்டை முன்வைத்து தொடர்ந்து முறைப்பாடுகள் பதிவு செய்யப்படும்.

பிறகென்ன? பொலிஸ், வழக்கு, நீதிமன்றம், விளக்கமறியல் என்று முறைப்பாடு செய்யப்பட்டவர்கள் சாறு பிழியப்படுவார்கள். இந்த முறைப்பாடுகளையும், அவை தொடர்பான வழக்குகளையும் சந்திப்பதற்கே அவர்களுக்கு போதும் போதும் என்றாகி விடும்!

இப்படி அதாவுல்லா அணியினரால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட - முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் சிலர், இப்போது அம்பாறை மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுடன் இணைந்து வருகிறார்கள்.

காரணம், தற்காப்பு!

சரத் வீரசேகர - சிவில் பாதுகாப்புப் படையின் தளபதியாக இருந்தவர். தேர்தலில் போட்டியிடுவதற்காக அந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார். இவர் ஜனாதிபதியின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சகலன் முறையானவர் என்றும் கூறப்படுகிறது. இவர் 'மெத்தா சமாஜ' என்கிற அமைப்புக்கும் தலைவராக இருக்கின்றார்.

தேர்தலில் குதிக்கும் எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு, மேற்படி அமைப்பினூடாக அம்பாறை மாவட்டத்தில் சில அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொடுத்துள்ள சரத் வீரசேகர, சிவில் பாதுகாப்புப் படையினூடாக - இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பகுதிகளில் ஆளுந்தரப்பைச் சேர்ந்த முன்னணி முஸ்லிம் அரசியல்வாதிகள் பலர் இருக்கின்ற போதும், அவர்களையெல்லாம் கணக்கில் எடுக்காமல் நேரடியாகவே முஸ்லிம் பகுதிகளுக்குச் சென்று தனக்கான ஆதரவினைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் வீரசேகர! இந்த நடவடிக்கையானது அங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக, அதாவுல்லா அணியினருக்கு அறவே பிடிக்கவில்லை. எனவே, சரத் வீரசேகர தரப்பினரை வெட்டிக் கொடுத்தால் தின்னும் அளவுக்குக் கோபத்துடன் இருக்கிறது அதாவுல்லா அணி!

இவ்வாறானதொரு நிலையில்தான், அதாவுல்லா அணியினரின் வன்முறைகளால் பாதிப்படைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் இளைஞர்கள் சிலர், ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவோடு சேர்ந்திருக்கின்றார்கள்.

அதிகாரத்தை வைத்திருப்பவர்களினால் இம்சிக்கப்பட்ட எதிரணி இளைஞர்கள், அதே அதிகாரத்தின் மூலமாக இப்போது - தமக்குரிய பாதுகாப்பைத் தேடியுள்ளார்கள்.

**வெட்கப்பட வைக்கும் கதை!**

இந்தப் பொதுத் தேர்தலில் உருவாகியுள்ள, வாக்குச் சீட்டுகளின் நீளப் பிரச்சினை குறித்து, கடந்த வாரம் எழுதியிருந்தோம்.

வாக்குச் சீட்டுகளுக்கான கடதாசிக் கொள்வனவு, அச்சு நடவடிக்கை போன்றவைகளுக்காக பெருந்தொகைப் பணம் செலவாகிறது. இந்த லட்சணத்தில் வாக்குச் சீட்டின் நீளமும் அதிகரித்தால் செலவு இன்னும் எகிறும்.

சரி, செலவானால் நமக்கென்ன என்று சும்மா இருந்து விடலாம்தான். ஆனால், தேர்தல் முடிந்த மறுநாளே அந்தச் செலவுகளெல்லாம் மகாஜனங்களின் தலைகளில் கட்டப்பட்டு விடும். நமது குழந்தைகளுக்கான பால்மாவிலிருந்து மலசல கூடம் கழுவும் திரவம்வரை, அனைத்துப் பொருட்களுக்குமான விலைகளையும் உயர்த்தி, நம்மை உயிருடன் வைத்தே கொன்று விடுவார்கள் அரச தரப்பார்.

ஒரு தேர்தலை நடத்துவதென்றால், அந்தத் தேர்தலுக்குத் தேவையான வாக்குச் சீட்டுகளை மட்டும் அச்சிட்டால் போதும் என்றுதான் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், அப்படியல்ல! நடைபெறும் தேர்தல் - சில வேளைகளில் ஏதாகிலும் ஒரு காரணத்தால் ரத்துச் செய்யப்படவும் கூடுமல்லவா? அதன்போது, இன்னுமொரு தேர்தலை நடத்த வேண்டும். எனவே, அவ்வாறான தேர்தலொன்றை நடத்துவதற்கும் சேர்த்தே வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படுகின்றனவாம்!

அப்படியென்றால் இரட்டைச் செலவு!

ஆக, தேர்தலின்போது வாக்குச்சீட்டே இல்லையென்றால் இதற்கான மொத்தச் செலவும் மிச்சம்தானே?

வாக்குச் சீட்டில்லாமல் தேர்தலா - என்றுதானே ஆச்சரியப்படுகின்றீர்கள்?

நமது அண்டை நாடான இந்தியாவிலேயே இந்த வாக்குச் சீட்டு என்கிற சமாச்சாரம் இப்போது நடைமுறையில் இல்லை. இலத்திரனியல் உபகரணம் மூலமாகவே அங்கு வாக்களிக்கப்படுகிறது. அதாவது, வாக்குச்சீட்டில் இருக்கும் சின்னம், இலக்கங்கள் எல்லாமே அந்த உபகரணத்தில் இருக்கும். விருப்புக்குரிய சின்னத்தையும், இலக்கத்தையும் தேர்வு செய்து அழுத்தினால் முடிகிறது வேலை!

இந்த இலத்திரனியல் வாக்களிப்பு உபகரணத்தால் நல்ல பல நன்மைகள் உள்ளன.

அதில் முக்கியமான விடயம் என்ன தெரியுமா? வாக்களிப்பு நிறைவடைந்த - இரண்டாவது நிமிடங்களிலேயே, தேர்தல் முடிவுகளைச் சொல்லி விட முடியுமாம்!

சரி, தேர்தல் நடவடிக்கைகளை இலகுவாக்கக் கூடிய இவ்வாறானதொரு உபகரணம் இருக்கும்போது, நாம் - ஏன் இன்னும் வாக்குச் சீட்டுக்களோடு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று உங்களில் எவரேனும் கேட்க நினைக்கலாம்.

நமது நாட்டிலும் அந்த உபகரணத்தை அறிமுகப்படுத்த நினைத்து, சில காலங்களுக்கு முன்னர் நமது தேர்தல் திணைக்களம் அந்த உபகரணத்தை இறக்குமதி செய்தது! ஆனாலும் அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை! ஏன்?

அது வெட்கப்பட வைக்கும் ஒரு சோகக் கதை!

மேற்கூறப்பட்ட இலத்திரனியல் இயந்திரத்தை - இலங்கையில் பயன்படுத்துவதென்றால், தேர்தல் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.


அவ்வாறானதொரு சட்டத் திருத்தத்தைச் செய்வதற்கு முன்னர் - குறிப்பிட்ட உபகரணத்தை நமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்தல் வேண்டும். அந்த உபகரணத்தின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தல் வேண்டும். அந்த இயந்திரம் பற்றிய அபிப்பிராயத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

இப்படி - ஏராளமான பிரச்சினைகள் இருப்பதால், அந்த இலத்திரனியல் உபகரணத்தை தேர்தல் திணைக்களம் இறக்குமதி செய்து, அதை நாடாளுமன்றக் கட்டடத்தின் ஓர் அறையில் வைத்தது. பிறகு - நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அந்த உபகரணத்தை முதலில் பார்வையிட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் கேட்டும் கொண்டது.

ஆனால், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் - அந்த இலத்திரனியல் வாக்களிப்பு உபகரணத்தைப் பார்வையிட்டோர் எத்தனை பேர் தெரியுமா?

வெட்கம்!

- மப்றாக் -



ஒரேயொருவர் மட்டும்தானாம்!!

**வால் முளைப்பதைத் தடுப்பதற்கான வழி முறைகள்!**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை பத்துக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என்று அந்தக் கட்சியின் தலைவர் கூறுகிறார். செயலாளர் ஹஸனலியுடன் பேசும்போது 11 உறுப்பினர்களைப் பெறுவோம் என்று கணக்குக் காட்டுகின்றார். இதில் தேசியப் பட்டியலும் உள்ளடக்கம்.

அப்படிப் பெற்றுக் கொண்டால் முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் உயிர்த்தெழும், உற்சாகம் பெறும் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால், பெற்றுக் கொள்ளும் ஆசனங்களை எப்படி அந்தக் கட்சி கட்டிக் காக்கப்போகிறது என்பதை நினைக்கத்தான் கவலையாக இருக்கிறது என்கிறார் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரொருவர்.

கடந்த முறையும் முஸ்லிம் காங்கிரஸில் இதே தொகையளவு உறுப்பினர்கள் தெரிவாகினர். ஆனால், ஆன கதை என்னவென்று அறியும் - உலகு! முஸ்லிம் காங்கிரஸ் மூலமாகத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் - நல்ல விலை போனார்கள். ஹக்கீம், ஹஸனலி, பைஸல் காசிம் மற்றும் சபீக் ரஜாப்தீன் என்று நாலுபேர் மட்டுமே கடைசியில் - கட்சிக்கு மிஞ்சினார்கள்!

இந்த இழி நிலையானது, இனிவரும் காலங்களில் இடம்பெறக் கூடாது என்று அந்தக் கட்சியின் கடைநிலைத் தொண்டர்களே பேசிக் கொள்கின்றார்கள். அப்படியென்றால், இதைத் தடுத்து நிறுத்த, கட்சி காத்திரமான யோசனைகள் எதையாவது முன்வைக்க வேண்டும்.

ஐ.தே.கட்சி - தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு தாவிப் போவதைத் தடுக்க நடவடிக்கையொன்றை எடுத்துள்ளது எனக் கூறுகிறது. ஆனால், அந்த நடவடிக்கைக்கு சட்ட ரீதியாகவுள்ள வலு என்னவென்பதை இப்போது கூற முடியாது.

முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சியின் இதே பாணியைப் பின்பற்றி தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவதைத் தடுப்பதற்கான திட்டமொன்றை வகுக்கவுள்ளது என அந்தக் கட்சியின் செயலாளர் ஹஸனலி கூறுகிறார்.

ஆனால், இது எந்தளவு சாத்தியமோ தெரியவில்லை. மடியில் நெருப்பைக் கட்டி வைத்திருப்பது போல் எத்தனை நாள்களுக்குத்தான் கட்சிகள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டிக் காப்பது?

அப்படியென்றால், இதைத் தடுக்க என்னதான் வழி இருக்கிறது?

தமது பிரதிநிதிகளை மக்கள் தேர்வு செய்யும் போது - நல்ல பண்புள்ளவர்களையும், நாணயமுள்ளவர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பசீர் சேகுதாவூத் ஒரு நேர்காணலின் போது நம்மிடம் சொன்னமை ஞாபகத்துக்கு வருகிறது.

நாணயஸ்தர்கள் ஒருபோதும் விலை போக மாட்டார்கள்.

* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்பு தலைவர்களுடையதல்ல; அது மக்களின் அரசியல் சொத்து...!

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் சம்பந்தர் தலைமையிலான தமிழ்க்கூட்டமைப்புத்தான் என்று 2009 மே மாதத்தின் பின்னரும் சொல்லக் கூடியதாக - இருக்கிறதா? இதுதான் இன்று தமிழ் மக்களிடையே உள்ள கேள்வி.

இதற்கான காரணங்கள் பல. தமிழ் மக்களின் அழிவுக்கும் அவலங்களுக்கும் மகிந்தவின் அரசாங்கம்தான் காரணம் என்று சொல்வதைவிட இந்தியா தான் காரணம் என்று தமிழ் உள்ளங்கள் கொதிப்படைகிறதே! அது ஏன்? தமிழ் இன அழிப்புப் போருக்கு இந்தியா மாத்திரம் உதவவில்லை. சீனா, பாகிஸ்தான் என்று பட்டியல் நீண்டு கொண்டு செல்கின்றது. ஆனால் தமிழர்களின் கோபம் இந்தியா மீதுதான். காரணம் என்ன? அவர்கள்தான் போரை நடத்தினார்கள் என்பதால் மட்டுமல்ல. தமிழர்கள் இந்தியாவைத்தான் தமது தாய்நாடு என்று மனதில் பதித்து வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட இந்தியா (அதுவும் தமிழ்நாடு அரசாங்கமும் அதனைத் தடுக்காது பார்த்துக்கொண்டிருக்க) தமிழர்களைக் கொன்று குவிக்க இலங்கை அரசுக்கு உதவியது என்றால் எத்தனை வருடங்கள் சென்றாலும் தமிழ் நெஞ்சங்களால் அதனை மறக்க முடியுமா?

அப்படிப்பட்ட இந்தியாவுக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் காவடி எடுப்பதாகத் தமிழ் மக்கள் கருதினால் அது தமிழ் மக்களின் தவறு அல்ல, கூட்டமைப்புத் தலைவர்களின் தவறுதான் என்று சொல்ல வேண்டும்.

இந்தியா நமக்கு எவ்வளவு நம்பிக்கைத் துரோகம் செய்தாலும் நாம் இந்தியாவை ஒரேயடியாகப் புறம்தள்ளிவிட முடியாது. ஏனெனில் இந்தியாவை மீறி எமக்கு ஒரு தீர்வை யாரும் தந்துவிடப்போவதில்லை.

ஆகவே இந்தியா அழைக்கின்றது என்றால் ஏன் என்று கேளுங்கள்; என்ன சொல்கிறது என்று கேளுங்கள்; நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றதா என்று பாருங்கள்; இந்தியா சொல்கிறது என்பதற்காக தலையாட்டி விடாதீர்கள். தமிழ் மனங்கள் எதை எதிர்பார்க்கின்றன என்பதனை மனதில் நிறுத்திவைத்திருங்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் யார் விலை போனாலும், என்றும் விலை போகாத தமிழ் உள்ளங்கள் நிறைய இருக்கின்றன. அந்த உள்ளங்கள் தனி ஒரு மனிதனைத் தமிழ்க்கூட்டமைப்பாக நினைக்கவில்லை. ஒரு தலைவனை மட்டும் கூட்டமைப்பாக நினைக்கவில்லை. தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தமிழ்க்கூட்டமைப்பாக நினைக்க வில்லை.

அன்று பிள்ளையாருக்குக் கிடைத்த அபூர்வபழம் போன்று கூட்டமைப்பு என்பது தமிழருக்குக் கிடைத்த அபூர்வ சக்தி.

அதைத்தான் தமிழ் மக்கள் தங்களது சக்தியாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்களை அடிமையாக்க நினைப்போர் தமிழ்க்கூட்டமைப்பு என்று ஒன்று இல்லாமல் போனால் தமிழ் மக்களை அடிமைகளாக வைத்திருக்கலாம் என எண்ணுகிறார்கள்.

தமிழ்க்கூட்டமைப்பை உள்ளிருந்தும் வெளியிருந்தும் பல வழிகளாலும் உடைக்கப்பார்க்கிறார்கள்.

தமிழ்த் தலைவர்களுக்காக அல்ல தமிழ்க்கூட்டமைப்பு. தமிழ் மக்களுக்காகத்தான் தமிழ்க் கூட்டமைப்பு. இன்றைய கட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பைப் பலப்படுத்த ஒவ்வொரு தமிழனும் தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

- செந்தூரன்.

உரைகல்

# 2010 பொதுத் தேர்தல் தமிழரின் அரசியல் இருப்பை அழித்தொழிக்கும் முயற்சி

ஆயுதக் குழுக்கள் கொடிகட்டிப் பறந்த வேளையில் ஒதுங்கியிருந்தவர்கள், தற்போது ஜனநாயகம் என்ற போர்வையில் புத்தஜீவிகள், சட்டவாளர்கள் மற்றும் கல்விமான்கள் என பலதரப்பட்டவர்கள் 2010 பொதுத் தேர்தல் களத்தில் குதித்துள்ளார்கள். இவர்களில் ஒருசாரார் ஆளும் கட்சியின் வலைக்குள் அகப்பட்டு தமிழர்களின் அரசியல் இருப்பைச் சிதைப்பதற்கு ஏவி விடப்பட்டுள்ளார்கள். ஏனைய சுயேட்சைக் குழு வேட்பாளர்கள் எதுவித கொள்கைப்பற்றும் அற்று தாம் தமிழரின் உரிமையை வென்றெடுக்கும் தலைவர்கள் எனக் கூறிக்கொண்டு தேர்தலில் குதித்துள்ளார்கள். சிலர் தமது அரசியல் பொறுப்பை தகுதியாளர்களிடம் ஒப்படைக்கத் தயார் எனக் கூறிக் கொண்டு தேர்தலில் இறங்கியுள்ளார்கள். நாளுக்கு நாள் தேர்தல் விஞ்ஞாபனம் என்று வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி தன்னுடைய மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்படுத்த வேண்டும் என முயன்று வருகிறார்கள். தமிழினம் ஒற்றுமையாக வேண்டும் எனப் பல தரப்பினர்களும் கூறி வருகின்றார்கள். பூனைக்கு மணி கட்டுவது யார்? என்பதில் இழுபறி. ஆயுதப் போராட்டம், அரசியல் போராட்டம் எனப் பல வடிவங்கள் தோன்றி இன்று இந்நிலைக்கு வந்துள்ளமை வேதனைக் குரியது. தீர்க்கமான அரசியல் கொள்கையுமில்லாது மக்களைக் கூறு போட்டு வாக்குகளை சிதறடித்து தமிழரின் உரிமைக்குரலை மழுங்கடித்தால் சிறிலங்காவில் தமிழருக்கு ஒரு பிரச்சினையுமில்லை; எல்லா இடமும் போகலாம் வரலாம்; சந்தோசமாக வாழலாம் என்ற ஜனாதிபதியின் கூற்றை உறுதிப்படுத்துவதற்கு வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் வேட்பாளர்கள் ஒருகணம் சிந்திக்க வேண்டும். காலாகாலமாக வாழ்ந்துவரும் மலேசியா, சிங்கப்பூர், மொறிஸியஸ் நாட்டு தமிழர்களுக்கு இருக்கும் உணர்வு கூட எமது தமிழர்களுக்கு ஏற்படவில்லை. மலேசியா தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தமிழர்களின் உரிமையில்தான் தமது உரிமை தங்கியுள்ளது எனக் கூறுகின்றார்கள். இலங்கைத் தமிழர்கள் நிலையையிட்டு வெட்கித்தலை குனிய வேண்டியுள்ளது. தற்போது அபிவிருத்தி என்ற கோஷம் எழுப்பப்படுகின்றது. தற்போது அபிவிருத்தி என்று சொல்லும் போது வட பகுதி மக்கள் மிகவும் கடைநிலையில் கூலிகளாக மதிக்கப்படுகின்றார்கள். தமிழ்ப் பிரதேசங்கள் சர்வதேசத்துக்கும் சிறிலங்காவிற்கும் தேங்கி இருக்கும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் சந்தையாக மாறி உள்ளது. இங்கு எதுவித மூலப்பொருள் உற்பத்தியும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனைச் சர்வதேச வர்த்தக நிறுவணங்கள் தங்கள் சந்தைவாய்ப்புக்காக கிளைகளைத் திறந்து எமது மக்களின் பணங்களை வாரிஎடுக்கும் செய லாகவே கருத வேண்டியுள்ளது. ஒரு ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எந்த ஒரு நிறுவனத்தையும் உருவாக்க முடியாதவர்கள் அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு தேர்தலில் இறங்கியுள்ளார்கள். போருக்குப் பின் வலிகாமத்தில் இருக்கும் சிமெந்து ஆலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் அங்குள்ள மூலதனமான சுண்ணாம்புக்கல் பாரிய இயந்திரங்களின் மூலம் அகழ்ந்து எடுத்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. வலிகாமம் பிரதேசத்தின் பெரும்பகுதி பாலைவனமாக மாறியுள்ளது. இவ்வாறு எமது தாயக பூமியின் வளங்களைப் பற்றி சிறிதும் அக்கறையின்றி அபிவிருத்தி என்றும் உரிமை என்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் இறங்கித் தமிழரின் இருப்பை அழிக்கும் முயற்சியைக் கைவிடும்படி தேசத்தின் நலன் கருதி வேண்டுகின்றேன். - ம. இராசன், கொக்குவில்.

# விரலடி வாசிப்பு நுட்பத்தை வயலினில் புகுத்தி கச்சேரிகளைச் சிறப்புற வைத்த இசையாளர் வி.கே.

மனித வாழ்க்கை ''நீர்க்குமிழி'' போன்றது. அது எப்போது தோன்றும் எப்போது மறையும் என்பது எவராலும் கணிப்பிட முடியாதது. வாழ்வானது எந்த நேரத்திலும் அழிந்து விடக்கூடியது. எனினும் ஒரு மனிதன் தான் வாழ்ந்த காலத்தில் கால் பதித்துச் செல்லும் விடயங்கள் எப்போதும் காலத்தால் அழியாதவை. அவ்வாறு தமது சாதனைகள் மூலம் உலகில் கால பதித்துச் சென்றோர் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் கற்றோர், கற்காதோர் என்றில்லாது அனைத்துத் தரப்பினராலும் பேசப்படகூடிய சிறப்பை உடையவர்கள் கலைஞர்கள்.

அவ்வாறு தமது கலைத்துவத்தினால் கலை உலகில் கால் பதித்துச் சென்ற மூத்த கலைஞர்கள் பலர் எம்நாட்டிலும் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் ஈழத்தின் தலைசிறந்த வயலின் இசை விற்பன்னர்களுள் ஒருவராகத் திகழ்ந்த வயலின் வித்துவான் 'சங்கீத பூஷணம்' 'இசைப் பேரறிஞர்' வி.கே. குமாரசாமி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் 1925ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி பிறந்த இவர் சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இசைக் கச்சேரிகளில் வயலின் வாத்தியக் கலைஞராகக் கலந்துகொண்டதுடன் அதன் மூலம் இலங்கை அரசின் 'கலாபூஷணம்' விருதினையும் பெற்றுக்கொண்டவர்.




ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் தனது ஆரம்ப இசைப் பயிற்சியைத் தமது மாமனாரான வைத்தியலிங்கம் அவர்களிடம் பெற்று 1940 ஆம் ஆண்டில் இந்தியா சென்று வாய்ப்பாட்டுப் பயிற்சியையும், 1942இல் கும்பகோணம் ஸ்ரீராஜமாணிக்கம் பிள்ளையிடம் வயலின் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். பின்னர் 1945இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து அங்கு புகழ் பெற்ற இசை விற்பன்னர்களிடம் இசைபயின்று 'சங்கீத பூஷணம்' பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

1949இல் இலங்கை திரும்பிய இவர் கொழும்பு சைவமங்கையர் கழகம், இசைக் கலைமன்றம் ஆகிய நிறுவனங்களில் இசையாசிரியராக இணைந்து தமது இசைப்பணியை ஆரம்பித்தார். அதே காலகட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உயர் தகைமைசார் கலைஞராகச் சேவையாற்றிப் பல வானொலி இசை நிகழ்ச்சிகளுக்கு அணி சேர்த்துப் பெருமை பெற்றார். இவரின் திறமை காரணமாக 1952இல் இலங்கை வானொலி தமிழ்ப்பிரிவு வாத்தியக் குழுவின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர் அங்கு ஆற்றிய இசைப் பணிகள் சிறப்பிற்குரியன. அக்காலகட்டத்தில் இவரால் நடத்தப்பட்ட வயலின் இசைக்கச்சேரிகளின் ஒலிப்பதிவுகள் இன்றும் இலங்கை வானொலி தமிழ் சேவையில் ஒலிபரப்புச் செய்யப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

1959ஆம் ஆண்டில் தனது ஆசிரிய சேவையை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இணைந்து ஆரம்பித்த இவர் தொடர்ந்து கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலயம், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, பெரியபுலம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நற் பணியாற்றி 1985ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

இதேவேளை 1976ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரை யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவின் பகுதிநேர வயலின் விரிவுரையாளராக சிறப்புற இசைப்பணியாற்றினார்.

இலங்கையில் கர்நாடக இசை வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி வரும் வட இலங்கை சங்கீத சபையின் உறுப்பினராக விளங்கிய இவர் இச்சபையினால் நடத்தப்படும் உயர் பரீட்சைகளான ஐந்தாம், ஆறாம் அதாவது ஆசிரியர் தரப் பரீட்சைகளில் பரிசோதகராகக் கடமையாற்றி வந்துள்ளார். வீணை, வயலின், புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களில் விரலடி எனக் கூறப்படும் வாசிப்பு அம்சம் முக்கியமானது. அம் முறையை இசை யுலகில் புகுத்திச் சிறப்பித்த பெருமை வி.கே.குமாரசாமி அவர்களுக்கே உரியது. கச்சேரியில் வாசிப்பின்போது. உடல் அசைவு எதுவுமின்றி புன்சிரிப்புடன் தனது வாசிப்பை மிக இலகுவாக வெளிப்படுத்தும் இவர் விரல்களில் ஸ்வரங்கள் மிக எளிமையாகவும் லாவகமாகவும் நுழைந்துவிடும்.



சுமார் அரை நூற்றாண்டு காலமாக இசைப்பணியில் ஈடுபட்டுவந்த இவர் கர்நாடக சங்கீத உலகின் புகழ்பெற்ற பல வித்துவான்களுக்கு வயலின் வித்துவானாக இருந்து அவர்களின் பாராட்டைப் பெற்றவர். அவர்களுள் புகழ்பெற்ற இந்திய இசைக் கலைஞர்களான மகாராஜபுரம் சந்தானம், மதுரை சோமு, கல்யாண கிருஷ்ண பாகவதர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதே போன்று ஈழத்தின் கலைஞர்களான பரம் தில்லைராஜா, ராம் குமாரசாமி போன்ற கலைஞர்களின் இசைக் கச்சேரிகளிலும் அணியிசைக் கலைஞராகக் கலந்து கொண்ட பெருமையும் இவருக்குண்டு. மேலும் பொன். சுந்தரலிங்கம், சத்தியபாமா இராஜலிங்கம், நாகம்மா கதிர்காமர் ஆகியோருக்கு நீண்டகாலம் தொடர்ந்து பக்க வாத்தியக் கலைஞராக இசைப்பணியாற்றியுள்ளார்.

'வி.கே' எனச் சுருக்கமாக அன்புடன் அழைக்கப்பட்ட இவரின் இசைப்பணியைப்பாராட்டி அகில இலங்கைக் கம்பன் கழகம் 'இசைப்பேரறிஞர்' என்னும் விருதினை 1994இல் வழங்கிக் கௌரவித்தது.

1954ஆம் ஆண்டில் இல்லற வாழ்வில் இணைந்து கொண்ட இவர் அதன் பயனாக ஆறு நற்புதல்வர்களைப் பெற்று அவர்களின் மேன்மை கண்டு பெருமை கொண்டவர். தனது இல்லறப் பணிகளுடன் இசைப் பணியையும் இணைத்து சிறப்புப்பணியாற்றிய இவர் பல மாணவர்களுக்கு தனது வீட்டில் பிரத்தியேக வகுப்புக்களையும் நடத்தி நல்லாசானாகவும் திகழ்ந்தார்.

இவ்விதம் இசைத்துறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய வயலின் வித்துவான் வி.கே.குமாரசாமி கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி தமது 84 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தமை இசைத்துறைக்குப் பேரிழப்பாகும்.

******

- திருமதி குமுதா உமாகாந்தன், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகுவாக கொங்கிரீட் இடும் முறை

## டோக்கியோ சுப்பர் கலவை




கொங்கிரீட் இடுவதற்காக தற்பொழுது கல், மண், சீமெந்து என்பன வெவ்வேறாக தேடி அலையும் காலம் முடிந்து விட்டது.

இலங்கையின் பாரிய சீமெந்து உற்பத்தியாளரான டோக்கியோ சீமெந்து நிறுவனத்தினால் ஆற்றுமண், ஏற்றுக் கொள்ளப்பட்ட தரத்திலான கருங்கற்கள், OPC சீமெந்து இட்டு 50 கிலோ நிறையுள்ள கொங்கிரீட் கலவை பொதியொன்று சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தரம் பிரபல நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் சேர்க்க வேண்டியது தண்ணீர் மட்டுமே. விஷேடமாக கல், மண் போன்ற மூலப்பொருட்களை தேடிக் கொள்வதற்கு முடியாதிருக்கும் பிரதேசங்களில் கொங்கிரீட் இடுவதற்கு உங்களுக்கு மிகவும் பிரயோசனமாக அமைவதோடு, மலிவான விலைக்கு இதனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**HOTLINE: 0777-179272, 077-7776055**




### எங்கள் விற்பனை முகவர்கள்


- நாராயண ஹாட் வெயர் - யாழ்ப்பாணம்
- ஸ்ரீ குமரன் ஹாட் வெயர் - யாழ்ப்பாணம்
- நல்லை குமரன் ஹாட் வெயர் - யாழ்ப்பாணம்
- எம்.பி.சி.எஸ் பரந்தன் மற்றும் கிளைகள் - கிளிநொச்சி
- கஜமுகன் ஹாட் வெயர் - யாழ்ப்பாணம்
- சிற்றி ஹாட் வெயர் - யாழ்ப்பாணம்
- எம்.பி.சி.எஸ் லிமிடெட் மற்றும் கிளைகள் - யாழ்ப்பாணம்

TOKYO SUPER NIPPON CEMENT SUPER

உற்பத்தி செய்து விநியோகிப்போர்

**டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) PLC**

உற்பத்தி ஆலை: இல: 77B, புதிய நுகே வீதி, பேலியகொடை, தொலைபேசி: 2945865




Himani

# Navratna

*Cool Talc*

**வெயில் காலத்திலும்**

**குளிர்மையுடன் புதுப்பித்துக் கொள்ளுங்கள் உங்களை, எங்கேயும் எப்போதும்.**

சந்தைப்படுத்துவோர்:
ஹார்கோட்ஸ் (பிரைவேட்) லிமிடட், (கன்சியுமர் டிவிஷன்),
இல.14 புகையிரத நிலைய வீதி, தெகிவளை தொ: 011-2740580, 011-2740586
* யாழ் விநியோகஸ்தர்: மயூரா அன்பளிப்பகம் 021-2229151, Web: www.emamiltd.in

# Nature's Secrets

மொய்ஸ்சரைசிங் லோஷன்




100% மூலிகை இயற்கை எண்ணெய்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# புதுப்பட்டிக் கிராமத்துக்கு கடைசி டிக்கட்



1960களில் ஈழத்துப் புனைகதைத் துறையில் தன்னை இணைத்துக்கொண்ட பஹார்டீன் ஆப்டீன் நாவலப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முஸ்லிம் சமூகத்தின் மலாய் இனத்தைச் சேர்ந்தவர். ஆரம்பத்தில் தேயிலைத் தோட்டங்களில் எழுது வினைஞனாகக் கடமையாற்றிய இவர், பின்னர் ஆசிரியராக நியமனம் பெற்று நாட்டின் பல பாகங்களிலும் கற்பித்தல் பணியை மேற்கொண்டவர். இவரது முதலாவது சிறுகதை 1962 ஆம் ஆண்டில் 'தமிழின்பம்' மாத சஞ்சிகையில் பிரசுரமாகியது. இவரது பெரும்பாலான சிறுகதைகள் 'மல்லிகை' சஞ்சிகையிலேயே பிரசுரமாகியுள்ளன. இவரது சிறுகதைத் தொகுதிகள் 'இரவின் ராகங்கள்' (1987), நாம் 'பயணித்த புகைவண்டி' (2003). இவரது நாவல் 'கருக்கொண்ட மேகங்கள்' (1999).

இவரது 'இரவின் ராகங்கள்' சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'புதுப்பட்டிக் கிராமத்துக்கு கடைசி டிக்கட்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

"போய்த்தான் ஆகனும், ஆபிஸ்ல சொல்லிட்டாக நாளைக்கு காலையிலேயே காம்பராவைப் பூட்டி, சாவிய தலைவர் கிட்டே ஒப்படைச்சிடனும், பெரிய தொரெ கிளாக்கர் ஐயா மூலமா தெரிவிச்சுட்டாரு......"

"போகல்லேனா இவங்க என்ன செஞ்சிப்புடுவாங்களாம் வேணும்னு 'பை போஸா' லயக் காம்பராவ எடுத்துக்கு வாங்க..... எடு."

சிந்தனை வயப்பட்ட சின்னையா தோட்ட அலுவலகத்திலிருந்து குறுக்குப் பாதை வழியாக இறங்கிக் கொண்டிருந்தான்.

"அதுக்கு முந்தி இன்னக்கே தோட்டக்கத்தி மம்பெட்டி சாமான் இருந்தா ஆயுதக்காரர்கிட்டே குடுத்துடு."

"அப்புறம் எனக்கு என்னத்துக்கு ஐயா அந்த தேஞ்ச கத்தியும் மம்பெட்டியும்! அதான் எங்கள உசுரோட வெட்டிக் குழி தோண்டிப் புதைச்சிட்டியே.....ம்...."

குறுக்குப் பாதை வழியாக இறங்கிய சின்னையாவுக்கு கால்கள் உளைச்சல் எடுத்தன- மனமும் தான். வயதும் ஐம்பத்தைந்து பிந்தியிட்டது. அரசாங்கத் தொழிலாளியாக இருந்தா பென்சனுக்கு எழுதிப்போட்டுச் செவனெண்டு வீட்டுல கெடப்பானுக.

இறங்கியவன் "அகஸ்மாத்தாக' ஒரு தடவை வந்த வழியை அண்ணாந்து பார்த்தான்.

'இனி நாம எப்ப இதெல்லாம் பார்க்கப் போறோம்.'

மேகம் சூழ்ந்த அத்தப் பெரிய மலையே அமுங்குவது போல்- உள்ளம் கனத்துப் போயிருந்தது.

வழிநெடுகச் சந்திப்புக்கள்.

விசாரிப்புக்கள்-

"ஆபிஸ்ல ஒனக்கு என்ன சொன்னாங்க"

"கேள்வி கேட்டுக்கேட்டு உசுர எடுத்துட்டாங்க."

அவனுக்கும் சொல்லிச் சொல்லி அலுத்துப்போய் நடந்தது என்னமோ இதுதான்-

"அந்தச் சின்னையாவ ஆபிசுக்கு வரச் சொல்லுங்க; அவன் விசயத்த முடிச்சுடனும்!"

'பெரிய கிளாக்கர் ஐயா' பீல்ட் ஆபிசருக்கு உத்தியோக பூர்வமாக டெலிபோன் பண்ணியிருக்கிறார். அவரும் சம்பிரதாயச் சுவடு மாறாமல் 'லேபர் டயறியில்' முதல் ஆளாக அவன் பெயர் காரணம் எல்லாம் எழுதி அனுப்பிவிட்டார். அதன் பிரகாரம் இன்று-

"திங்கட் கிழமை- லேபர்டே"

தோட்டப் பிரட்டு சின்னையா-

"இப்ப எதையும் பேசிப் பிரயோசனம் இல்ல, ஒன்றும் பலிக்காது." என்று அவனுக்குத் தெரியும். இருந்தாலும் 'நப்பாசை' யாரை விட்டது.

"என்னதான் சொல்லப் போறாங்கன்னு பாப்பமே!"

மாலை மூன்று மணிக்கே முதல் ஆளாக தோட்ட அலுவலக முன்றிலில் உள்ள மாமர நிழலில் வந்து நின்றான். அந்த நிழலில் நிற்பதில் அவனுக்கு ஒரு பெருமை. அது எத்தனையோ வருடங்களுக்கு முன்- இளமை வேகத்தில் அவன் கைபட நாட்டிய மரம்தான். அதை வளைத்துச் செல்லும் தார் ரோட்டில் இருமருங்கிலும் வானைத் தொட்டு புதுப்பட்டி கிராமத்துக்கு ஒரு புதுச்செய்தியை சொல்லிப் போவது போல், உயரச் செல்லும் சடை சவுக்கு மரத்தடியிலும் ஒவ்வொருவராக வந்து சேரத் தொடங்கினர். ஆட்கள் வந்து சேரச்சேர அங்கு நிலவிய அமைதி சோர்வடைந்தது.

வாரத்தின்முதல்நாள்- திங்கள் மாலை தோட்டத் தொழிலாளர் துரையோடு தத்தம் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேச ஒரு சிறு சந்தர்ப்பம்.

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 141**

சின்னையாதோட்டத்துக்கு பழைய ஆள், காலதாமதம் செய்யாமல் அவருடைய விவகாரத்தை 'சட்புட்'டென்று முடித்துவிட்டு எவ்வளவு சீக்கிரத்தில் அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவாக அனுப்பிவிட வேண்டும் என்ற கங்கணமோ!

"ஆமா மரியாதயா புதுப்பட்டிக்குப் போன்னு சொல்லி விட்டாங்க..... இந்தப் புதுப்பட்டிக் கிராமம் இந்தியாவில் எங்கே இருக்கு? அதுதான் சொந்த ஊருன்னு கேள்விப் பட்டிருக்கேன்... ஆனால் இலங்கைக்கு எப்ப வந்தேன்? தலைமுறை வழிவாரம் ஒன்றும் தெரியலியே.....'

தொரே வந்ததும் மர நிழலில் எழுந்து ராஜ மரியாதை- என்னப் பார்த்து சிரிச்சிக்கிட்டே உள்ளே போனார் தொரெ........'

'அப்பிறம் பெரிய கிளாக்கர் ஐயா பம்பரம் போல ஆடினார். ஜன்னல்கள் திறக்கப்பட்டதும் போய் நிற்கின்றோம். எடுத்த எடுப்பிலேயே 'தோட்டப்பிரட்டி சின்னையா வரலாம்.'

பெரிய தொர டெலிபோனை அணச்சி ஒறயாடிக்கிட்டே இருந்தார்.

பெரிய கிளாக்கர் ஐயாவின் அடித் தொண்டையிலிருந்து பீரங்கி வெடித்தது.

"அட சின்னையா விசயந்தான் எல்லாருக்கும் தெரியுமே, அவன் தலைவிதியத்தான் சட்டம் நிர்ணயிச்சிருக்கே. அப்புறம் விசயமில்லாம வந்து ஆபீஸ்ல மாநாடு போடாம.... சின்னையாகிட்ட ஏதும் பேச இருந்தா லயத்தில போய் பேசிக்கலாம்."

கூட்டம் சிதறியது-

ஆபீஸ் விசயம் சீராக நடந்தன.

கொடுக்க வேண்டிய பற்றுச்சீட்டு இதர தஸ்தாவேஜுகள், கையொப்பங்கள் சகலதுக்கும் பத்து நிமிடங்கள்.

'தொரே' கைக் கடிகாரத்தைப் பார்த்தார். றக்கர் விளையாட 'அவுட்' ஆகிவிடலாம். சின்னையாவுக்கு துரை வாழ்த்தினார். "விஸ் யூ ஆல் தி பெஸ்ட்"

சின்னையாவும் கம்பீரமாக நிமிர்ந்து, சிப்பாயைப்போல -சலாமுங்க!- இறுதி 'சலுட்' அடித்துவிட்டு குறுக்குப் பாதை வழியாக நடந்து வந்தான்.

எதிரே தான் சார்ந்த யூனியன் பிரதிநிதி ஒருவர் சின்னையாவைச் சந்திப்பதற்காகவே வந்தவர்-

"என்னப்பா நடந்தது! அவ்வளவு சுருக்கமா ஆபீஸிலிருந்து வந்துட்டியாப்பா... என்ன விசயம்?"

"அப்புறம் என்ன சொல்லக் கெடக்குது"

சின்னையா நடந்ததை ஒன்றும் விடாமல் சொல்லி அனுப்பினான்.

"பெரிய கிளாக்கர் ஐயா வீட்டு வேலைக்காரன் செல்வராஜ்" எதிரே வந்துகொண்டிருந்தான்.

"டேய் செல்வராஜ் மாப்பிள, என்னடா அது சாக்குல கொண்டு போரே?"

"பூனை"......பெரிய தொல்லையாயிருக்குண்ணு, பத்துக் கட்டைக்கி அங்கால விட்டாலும் மோப்பம் புடிச்சி வந்துடுங்க. ஐயா சொன்னாருங்க சாக்குல கட்டிக் கொண்டு போய் நம்ப ஆத்துக்கு அக்கரையில விட்டுட்டுவர சொன்னாருங்க பூனையைக் கொல்லக் கூடாதாம், பாவம்...."

"ஆ.....அப்படியா......!"

சின்னையா ஒரு பெரிய சிரிப்பு சிரித்தான். அது நீண்ட நிமிடங்களாயின. அப்பொழுதும் முற்றாக ஓயவில்லை.

"ஹ ஹ ஹ ஹி ஹி ஹி...."

"அப்படியா சங்கதி, அப்படினா நாளைக்கி காலையில இந்தியாவுக்கு போறன்... வேனும்னா அதுக்கும் சேர்த்து புதுப்பட்டி கிராமத்துக்கு ஒரு டிக்கட் எடுக்கிறேன்.

செல்வராஜ் சிரித்து மறைந்துவிட்டான்.

'அவனுக்கு அடுத்த தையில கல்யாணமாம், அப்புறம் அவனுக்கு ஒரு லயக்காம்பரா வேனும். அதுக்குத் தான் ஐயா நம்ப லயத்துக்கு 'பிளான்' பண்ணிட்டாரே... பாவம் பௌச்சிட்டு போறான். பய.....'

'அந்தப் பூனைய கொல்லக் கூடாதாம்.... பூனைப்பாவம் பெரும்பாவமாம்.... அப்ப அதக் கொண்டு போய் ஆற்றுக்கு அக்கரையில விட்டுட்டா, அங்க வீடுவாசல் இல்ல, மியா மியான்னு மலைப்பிரதேசத்தில அலைஞ்சி திரியுமே.,. அது பாவமில்லையா.....?

சின்னையாவுக்கு தலை வெடிக்கிற மாதிரி ஒரு யோசனை புதுப்பட்டி?

'சரி சரி லயத்துக்கு போய்- புதுப்பட்டி ஆளுங்க் இங்கே இருக்கிறாங்கதானே! பூரா விசாரிச்சா போகுது. இல்லாட்டி கண்ணக் கட்டி காட்டுல வுட்டா நா எங்கே போறது? யார சந்திக்கிறது? என்ன செய்யிறது?

'பொறந்த ஊராம் அப்படின்னா

[18 ஆம்பக்கம் பார்க்க]

# கள்வனோ என் கணவன்?

பெண்மையின் பேராற்றலைச் சிறப்பாக எடுத்துக் காட்ட எழுந்த பேரிலக்கியம் சிலப்பதிகாரம். கண்ணகியைக் காவியத்தலைவியாக இளங்கோ உருவாக்கம் செய்யத் துன்பமாலையில் அவளைத் தகுதிப்படுத்துகின்றார். குலப்பெண்ணாக இருந்து புகாரில் கோவலனோடு மனையறம் செய்த கண்ணகி வெளியுலகத் தொடர்பு அற்றவளாகவே இருக்கின்றாள். புகார் நகரத்திலே ஆண்டுதோறும் நடைபெறும் இந்திரவிழாவைக் கூட அவள் பார்க்கச் செல்லவில்லை. இருமுதுகுரவரைப் பேணும் இனிய இல்லறத்தைச் செய்யும் இல்லாளாகவே இருந்தாள் 'வீட்டு வாழ்விலே திளைத்திருந்தாள்'

மதுரைப் பயணமே அவள் மேற்கொண்ட நீண்ட தூரப் பயணமாக உள்ளது. சோழநாட்டை விட்டுப் பாண்டி நாட்டிற்கு வந்ததும் தன்னுடைய நீண்டகாலத் துன்பம் நீங்கிவிட்டதெனக் கண்ணகி எண்ணினாள். ஆனால் அவள் எண்ணம் நிறைவேறவில்லை. தன் அன்புக் கணவனை இழந்து அவல வாழ்வை ஏற்க நேரிட்டது. கண்ணகி என்னும் பாத்திரத்தின் சித்திரிப்பில் ஒரு மாற்றத்தை இளங்கோ துன்ப மாலை என்னும் பகுதியில் ஏற்படுத்துகிறார்.

பேசாத பெண்ணாக வாழ்ந்த கண்ணகி இப்பகுதியில் பேசுகின்றாள். ஆனால் அவள் பேச்சு சோக உரையாகவே அமைகின்றது. ஆயர் பெண்கள் மத்தியில் அவள் படும் அவலம் இளங்கோவின் இலக்கியப் புனைதிறனில் துன்பத்தின் உச்சத்தைப் புலப்படுத்தும் காட்சியாக உள்ளது. இனிமேல் தன்னுடைய வாழ்க்கை எப்படி அமையப் போகின்றது என்பதை எடுத்துக் கூறிப் புலம்புகின்றாள். அந்த வாழ்வியலை மூன்று வகையாக எடுத்துக் காட்டுகின்றாள். கோவலனுடைய இறப்புக் கண்ணகியின் கோலத்தை எவ்வாறு மாற்றும் என்பதை நினைத்து அழுகிறாள். கணவனை இழந்த பெண்கள் நிலை அவள் நினைவிற்கு வருகின்றது.

இன்ப வாழ்க்கைக்குத் துணையாக இருந்த கணவன் இறப்பால் எரியிலே மூழ்க மனைவி துன்பத்துடன் நோன்பு நோற்று வாழும் துயரமான வாழ்வு ஒன்று. மற்றது தமது இளம் கணவனை இழந்த பெண் பல்வேறு புண்ணிய தீர்த்தங்களிலே நீராடி துயரோடு வாழும் வாழ்வு. இன்னொன்று கணவன் இறந்தபின் கைம்மை நோன்பை நோற்று வாழும் கைம்பெண்டிரின் அவல வாழ்வு. இத்தகைய அவல வாழ்வு தனக்கும் வந்ததே எனத் துன்பப்படுகின்றாள். அத்தகைய வாழ்வைத் தான் அடைவதற்குக் காரணமாக இருந்த சோழ மன்னன் தவறை எல்லோருக்கும் எடுத்துரைக்கும் துணிவு பெறுகிறாள். அவளுடைய உள்ளத்தில் உண்மையை எல்லோரும் அறியச் சொல்ல வேண்டும் என்ற முனைப்பு ஏற்படுகின்றது. அவளுடைய வாய்மொழியை இளங்கோ மூன்று பாடல்களில் அமைத்துள்ளார். அப்பாடல்களில் குறிப்பாக 3 அடிகள் கண்ணகியின் பேச்சாற்றலையும் உள்ளத்துணிவையும் காட்டுகின்றன.

**"மன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறிழைப்ப"**

**"மறனொடு திரியுங்கோல் ம[illegible]"**

**"செம்மையின் இகந்தகோல் [illegible]"**

பாண்டிய மன்னனின் ஆட்சியின் நீதி தவறியதைத் துணிவோடு எல்லோரும் அறியக் கூறுகின்றாள். வீட்டு வாழ்க்கையில் வெளியுலகத்தைப் பற்றி எதுவும் அறியாமல் இருந்த கண்ணகி இப்போது அரசனுடைய பெரிய தவறையோ சுட்டிக் காட்டும் ஆற்றல் படைத்தவளாகி விடுகின்றாள். அவளுடைய சொல்லாற்றலையும் அறிவுத்திறனையும் முதன் முதலாகத் துன்ப மாலையில் இளங்கோ வெளிப்படுத்தி உள்ளார். ஊரவர் பழி தூற்றுவதற்குக் கோவலன் காரணம் அல்ல. மன்னன் தவறே காரணம் எனக் கூறி அழுகின்றாள். அவளைப் பார்ப்பவருக்கு இது வியப்பைத் தருகின்றது. வேற்று நாட்டுப் பெண்ணொருத்தி இவ்வாறு தமது மன்னன் மீது பழி கூறுவது எங்ஙனம் எனத் திகைத்து நிற்கின்றனர்.

மன்னனை மறம் செய்யும் அறமற்ற செங்கோலையுடையவன் என்றும் செம்மையான செயற்பாட்டினிறும் நீங்கிய செங் கோலையுடை யவன் என்றும் பகிரங்கமாகப்

**இலக்கியக் காட்சி 32**

பழித்துரைக்கின்றாள். தன்னுடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதும் துன்பப்பட அவனுடைய செயலே காரணம் என்பது கண்ணகிக்குத் தெளிவாகத் தெரியும். கோவலன் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கும் சான்றான ஒற்றைச் சிலம்பு கண்ணகியிடம் இருந்தமையால் அவள் அச்சமின்றிப் பேசுகின்றாள். ஆனால் [illegible] மத்தியில் மன்னன் தவறை எடுத்துச் சொல்லக்கூடிய அஞ்சாமையும் துணிவும் துன்பத்தால் கண்ணகிக்கு வந்து சேருகின்றன. பழி தீர்க்கும் இயல்புடன் சூரியனை அழைத்து எல்லாப் பெண்களும் கேட்கும் வண்ணம் ஒரு கேள்வியைக் கேட்கிறாள். குரவை முடித்து வந்த ஆயப் பெண்கள் எல்லோரும் சூழ்ந்திருக்கப் பேசுகிறாள்.

**"பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி**
**காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்"**

பரந்த உலகமெல்லாம் நடைபெறும் நிகழ்வுகளை யெல்லாம் அறிந்திருக்கும் கதிரவனிடம் கோவலன் கள்வனோ எனக் கேட்பது உடனடியாகக் கணவன் மீதுள்ள பழியை துடைக்க வேண்டுமென்ற வேகத்தை புலப்படுத்துகின்றது. அவள் கேள்விக்கு உடனடியாகவே அசரீதியால் பதில் கிடைக்கிறது.

**"கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்**
**ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்"**

கோவலன் கள்வன் அல்லவென்றும் அவன் மீது பழி சுமத்தியதால் இவ்வூரானது எரியால் உண்ணப்பட்டுப் பெருந்துன்பம் அடையும் என்ற அசரீதி கண்ணகியின் தெய்வீக ஆற்றலைப் புலப்படுத்துகின்றது. கோவலன் மனைவியாகக் குலப்பெண்ணாக இதுவரை இருந்த கண்ணகி துன்பமாலை என்னும் பகுதியில் தெய்வப் பெண்ணாக இளங்கோவால் உயர்த்தப்படுகிறாள். பெண்மையின் பேராற்றலை இளங்கோ இங்கு எடுத்துக் காட்டுகிறார். அரசனோடு வழக்காடும் துணிவு கண்ணகியிடம் இருப்பது துன்பமாலையிலேயே உணர்த்தப்பட்டுவிடுகின்றது. குலமகளிரின் கற்பு நெறியை அனைவரும் அறியச் செய்யும் இளங்கோவின் இலக்கும் இங்கு நிறைவேறுகிறது. புதுமைக் கவிஞனின் புதுமைப் பெண் பற்றிய கருத்தின் மூல ஊற்றான திமிர்ந்த ஞானச் செருக்கின் தோற்றமாக இளங்கோ கண்ணகியை முன்னரே காட்டியுள்ளார். ✱✱✱✱



காலநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றைப்பெற நினைத்து... ...இன்னொன்றை இழக்கும் நிலை

இயற்கையில் நடந்ததை பயனுள்ளதாக ஆக்கியிருக்கிறது உயிர்தொழில் நுட்பம் என்பதனைச் சென்ற கட்டுரையிலே விரிவாகப் பார்த்தோம். 'அக்றோபக்றீயம் ரியூமிபேசியன்சு' என்னும் பக்றீறியாவுடன் தாவரத்தில் ஏற்படுத்தப்பட்ட விரும்பத்தகாத இணைப்பு, கழலை போன்றதொரு அமைப்பு உருவாகக் காரணமெனவும் பார்த்தோமல்லவா? இது இந்த பக்றீறியாவுக்குரிய சிறப்பியல்பு. தாவரத்தில் தொற்று ஏற்படுத்தி அதிலுள்ள கலங்களை எண்ணிலடங்காதவாறு புதிய கலங்களாக உருவாக்கும் இந்தத் தன்மையை உயிர் தொழில் நுட்பம் சாதுரிமாகப் பயன்படுத்திக் கொண்டது எனலாம். நன்மையான விடயமெனின் அது எங்கிருந்தாலும், எப்படியிருந்தாலும் அதனைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறேதுமில்லையே. தாவரத்தில் நோயை ஏற்படுத்திய இந்தப் பக்றீறியாவை- 'அக்ரோபக்றீறிய'த்தை பின்னாளில் மரபணு மாற்ற பொறிமுறையினுள் சிறப்பாகவே உள்வாங்கியிருந்தார்கள். இது இயற்கையின் பொறிமுறை; பரிசு. இப்படி எத்தனையோ இருந்தபோதும், இதனைக் கண்டுபிடித்ததென்பது தொழில்நுட்பத்துக்கான பரிசு எனவே விளிக்க வேண்டும்.

## விவசாயத்துறையில்நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களும் எதிர்கொள்ளும் சவால்களும் 4

### புதிய மரபணுவைக் காவிச் செல்ல ஒரு வாகனம்


இதற்கு முன்பே விலாவாரியாகப் பார்த்த விடயங்களில் அதிக விளைச்சலுக்காக குறி வைத்தபோது, பீடை எதிர்ப்புத் தன்மையைப் பயிர்கள் இழந்ததை வேளாண் விஞ்ஞானிகள் கவனிக்கத் தவறிவிட்டனர் எனக் குறிப்பிட்டிருந்தேன். அதுவே உண்மை; தவறுகள் யாருக்கும் ஏற்படலாம் அல்லவா? ஆனால் இது மாபெருந்தவறு. ஒன்றைத் தேடி இன்னொன்றை இழந்த கதை. ஆனாலும் இந்தத் தவறை இன்னொருவகையில் நிவர்த்தி செய்ய எடுத்த முயற்சி வீண் போகவில்லை. அதனால் கண்டுபிடிக்கப்பட்டது மரபணுப் பொறிமுறையியல் (Genetic Engineering) என்னும் சக்தி வாய்ந்த தொழில்நுட்பம். பீடை எதிர்ப்புப் பொறிமுறையை பி.ரி. (B.t.) எனும் 'பசிலசு துரொன்சியென்சிசு' என்னும் விவசாயியின், சூழலின் நண்பனான பக்றீறியாவிலிருந்து பிரித்தெடுத்து, எடுத்ததை வாகனமொன்றினுள் ஏற்றும் நடைமுறை இது. வாகனமாக இங்கே பயன்பட்டது தாவரத்தில் கழலையை உருவாக்கிய அதே 'அக்ரோபக்றீறியம் ரியூமிபேசியன்சு' என்னும் பக்றீறியாவினது 'பிளாஸ்மிட்டு' (Plasmid) ஆகும்.

### 'பிளாஸ்மிட்டு' வாகனத்தின் சிறப்பு

இப்போதெல்லாம் சிறிய வாகனங்களுக்கே மதிப்பு அதிகம். நெரிசலைத் தவிர்க்க, இருக்கின்ற இடத்துக்குள் அடக்கி வாழ அதிகம் பேர் ஆசைப்படுகிறார்களே, அதுபோல வட்டவடிவிலான சிறிய ஈரிழை கொண்ட டி.என்.ஏ.(DNA) மூலக்கூறு தான் இந்த வாகனம். சிறியதென்றாலும் இதனது பயன்பாடு என்னவோ அதிகம் தான். பி.ரி. பக்றீறியாவிலிருந்து பீடைகளைக் கட்டுப்படுத்தும் காரணிக்குப் பொறுப்பான மரபணுவைத் தெரிந்தெடுத்து, அதனைப் பிரித்தும் எடுத்து பிளாஸ்மிட்டினுள்ளே ஏற்றினார்கள். விடயம் என்னவோ சிறியதென்றாலும் மிகவும் இலகுவான காரியமல்லவே? 'அக்ரோபக்றீறியத்தின்' பிளாஸ்மிட்டு'வை அந்த வட்ட வடிவமான வாகனத்தின் ஒரு பக்கத்தில் வெட்டி- (வெட்டுவதற்கு டி.என்.ஏ பொலிமறேசு என்னுமொரு நொதியத்தை கத்தரிக்கோலாக்கி வெட்டி) பின்பு அதனுள் பி.ரி. பக்றீறியாவினது தெரிந்து பிரித்தெடுத்த மரபணுவைச் செருகி, உட்புகுத்தி பின் 'லிகேசு' (Ligase) என்னுமொரு நொதியத்தைப் பயன்படுத்தி ஒட்டிவிட்டார்கள். ஆக மொத்தத்தில் பீடைகளுக்கான எதிர்ப்புத் தன்மைக்குரிய மரபணுவை பி.ரி.பக்றீறியாவிலிருந்து அக்ரோபக்றீறியம் பிளாஸ்மிட்டுக்குள்- அந்த சிறிய வாகனத்துள்- ஏற்றி விட்டார்கள். மரபணு ஏற்றம் பெற்ற 'பிளாஸ்மிட்டு'வை அதன்து பக்றீறிய உடலினுள்ளே வைத்து அந்த பக்றீறியாவைத் தாவரத்திலே தொற்று ஏற்று ஏற்பட வைத்துவிட்டார்கள். பிறகென்ன, தாவரத்தினுள் பக்றீறியா தனது வேலையை ஆரம்பித்துவிடும். வேறொன்றுமில்லை! வழக்கம் போல பல்கிப் பெருகி தாவரக்கலங்களைப் பெருக்கமடைய வைத்துவிடும். பெருகுவதுடன் மட்டுமல்லாது, தாவரக் கலங்களிலுள்ள கருவுக்குள் புதிய மரபணுவையும் சேர்த்தும் விட்டுவிடும். புதிய மரபணுவைக் கலங்கள் பெற்றுவிட்டால் அக்கலங்கள் பீடைகளின் தாக்கத்திற்கு உட்படுவது தவிர்க்கப்பட்டுவிடும். நடந்தது மேலே கூறிய கதைபோல நன்றாகவே நடந்தது. எதிர்பார்த்த பலனும் கிடைத்தது.

### மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பயிர்கள்

உயிர்தொழில்நுட்பத்தினூடாக, மரபணு பொறியியல் மூலமாக மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பல பயிர்கள் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கு அவற்றின் பெயருடன் மரபணு பெறப்பட்ட நுண்ணங்கியின் பெயரைச் சேர்த்தே அழைத்தார்கள். இத்தொழில் நுட்பத்திற்காக பயன்படுத்தப்பட்ட நுண்ணங்கியான பி.ரி.பக்றீறியா தனித்துவமானது என்பதனாலும், இதனைப் பயன்படுத்தி மரபணுபாக்கம் செய்யப்பட்ட பயிர்கள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுத்ததனாலும், பி.ரி என்னும் பெயரோடு அனேகமான மரபணுபாக்கம் செய்யப்பட்ட பயிர்கள் வேளாண் உலகத்தில் பவனி வரலாயின.



- 'எகமிப்தீரா' வகைப் பூச்சிப்பீடைகளும் அவற்றைப் பிடித்துண்டு இயற்கையாகவே கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகளும் -

சரி, நன்மைகளும் எதிர்விளைவுகளும் இருக்கத்தானே செய்யும். நன்மைகளை முன்னிலைப்படுத்தியே இங்கே இந்தத் தொழில்நுட்பமும் பிரயோகப்படுத்தப் பட்டது. ஆனால் எதிர்பாராத எதிர்விளைவுகள் இத் தொழில்நுட்பத்தை மேலும் விரிவாக்கச் சவாலாக அமைந்தன.

**பிரச்சினை 01**

பி.ரி. மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட பயிர்களை ஆங்கிலத்தில் Transgenic

## மரபணு மாற்றத்தினால் பாதகமே அதிகம்

பி.ரி.சோளம் (B.t. Maize), பி.ரி. பருத்தி (B.t. Cotton) என்பன ஆரம்பத்தில் உலாவந்த மரபணு மாற்றஞ்செய்யப்பட்ட பயிர்களாகும். இங்கே B.t. என்பது Bacillus thuringiensis என்ற இரு சொற் பெயரீட்டில் இந்த பக்றீறியாவினது B சாதிப் பெயரான Bacillus இலிருந்தும் T இனப்பெயரான thuringisis இலிருந்தும் பெறப்பட்ட முதலெழுத்துக்களைக் குறிப்படுவதை அவதானியுங்கள்.

மரபணு மாற்றஞ் செய்யப்பட்ட இப்பயிர்கள் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளான வருணம் கொலியொப்தீரா (Coleoptera) டிப்தீரா (Diptera) மற்றும் லெப்டிடொப்தீரா (Lepidoptera) ஆகியனவற்றின் வெட்டி உணவுண்ணும் பருவமான புழுப்பருவத்தினை எதிர்க்கக் கூடியனவாகும். இதனால் இவ்வாறு உருவாக்கப்பட்ட, பயிர்கள் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளை எதிர்க்கும் வல்லமையுடையதாதலினால் இப்பயிர்களில் மேலே கூறிய வருணங்களுள் உள்ளடங்கும் பூச்சிப் பீடைகளின் தாக்கம் அறவே இருக்காது. அதனால் அவற்றைக் கட்டுப் படுத்துவதற்காக எதுவிதமான பூச்சிநாசினியும் plants என அழைத்தனர். இப்பயிர்கள் வெட்டியுண்ணும் (Biting and Chewing) வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளுக்கு மட்டுமே எதிர்ப்புடை யவனவாக இருப்பது - அதாவது குறித்ததொரு வகைப் பீடைகளுக் கெதிராக மட்டும் இருப்பது, இத்தொழில்நுட்பத்திற்கான பின்னடைவாகவே கொள்ள வேண்டும். ஏனெனில் பொதுவாக பயிர்களில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சிப் பீடைகளுள் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகளைத் தவிர குத்திச் சாறு உறுஞ்சும் பூச்சிப் பீடைகளும் (Piercing and Sucking) இருக்கின்றன. அவையும், அவற்றினது சேதங்களும் முக்கியமானவை. இவ் வகைப் பூச்சிப்பீடைகள் தமது வாயுறுப்பை குத்தும் உறுப்பாகத் திரிபாக்கி அதனுடன் இணைத்து உறிஞ்சுவதற்கான அமைப்புக்களையும் கொண்டிருக்கும். இவ்வகைப் பூச்சிப் பீடை கள் கெமிப்தீரா (Hemiptera) என்னும் பூச்சி வருணத்துள் உள்ளடக்கப்படு கின்றன. குத்திச் சாறு உறுஞ்சும் பூச்சிப் பீடைகளுள் நெல்மூட்டுப் பூச்சி (Paddy bug), மாவுப்பூச்சி, செதில் பூச்சி, தத்திகள், வெள்ளைப்பூச்சி, [illegible] போன்றன முக்கிய [illegible] சாறு உறுஞ்சும் பூச்சிகளின் உணவுப் பழக்க முறைக்கேற்ப இவ்வித மான பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்த தேவைப்படாது. இதனால் ஒரு பக்கத்தில் வெட்டியுண்ணும் பூச்சிப் பீடைகளிலிருந்து பயிர்கள் தப்பித்துக் கொள்ளவும் முடியும்; மறுபக்கத்தில் அவற்றுக்காகப் பயன்படுத்தும் அசேதன பீடைநாசினிகளைத் தவிர்க்கவும் முடியும். இந்த நன்மைகளை மையப்படுத்தியதாக உருவாக்கப்பட்ட பி.ரி. பயிர்களுள் இவ்வளவு நன்மைகளிருந்தும் பிரச்சினையும் இருந்தது. நல்ல விடயமெது நடந்தாலும் அதனுடன் பிரச்சினையும் தானாகவே சேர்ந்து வரும் என்பார்கள்.

### பி.ரி. மரபணு மாற்றஞ்செய்த பயிர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள்

எந்த வகை தொழில்நுட்பமாயினுஞ் ஊடு புகுந்து பரவும் பூச்சிநாசினிகள் (Systemic insecticides) தேவை என்பதாலும் இவற்றைக் கட்டுப்படுத்த பி.ரி. பக்றீறியாவினால் முடியவில்லை என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாயத்துறை விஞ்ஞானி களின் கண்டுபிடிப்புக்கு எழுந்ததொரு பின்னடைவாகவோ, சவாலாகவோ இதனைக் கருதலாம்.

**பிரச்சினை 02**

பி.ரி. மாற்றஞ் செய்யப்பட்ட பயிர்களில் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சிப் பீடைகள் சேதத்தை ஏற்படுத்தாது என்பதனை மேலே பார்த்தோமல்லவா? அப்படியாயின் இந்தப் பயிர்களில் இவ்விதமான பூச்சிப்பீடைகள் பெருகமாட்டாது. ஏனெனில் ஏற்ற உணவு இல்லை, பயிர்கள் பொருத்தப்பாடாக இல்லை என்பதுதான். ஆயின், இந்தப் பூச்சிப் பீடைகளை உண வாக்கும் இயற்கையாயுள்ள இரை கௌவிகள் ஒட்டுண்ணிகள் என்பனவற்றுக்கு பூச்சிப்பீடை இல்லாததனால் இதற்கு மேலும் உணவு கிடையாது. அதனால் அவற்றின் எண்ணிக்கையும் கணிசமான அளவு குறைந்து அந்தச் சூழல் தொகுதியிலேயே காணாமற் போய்விடுகின்றன. பூச்சிப்பீடைகளை இயற்கையாகவே கட்டுப்படுத்த அவற்றைப் பிடித்து உணவாக்கும் இரைகௌவிகளையும் (Predators), பீடைகளில் ஒட்டுண்ணிகளாக இருக்கும் (Parasites)ம் பூச்சி மற்றும் பூச்சியல் லாதவையின் தேவை நிறையவே விவசாயத்திற்கு உண்டு. அந்த வகையில் விவசாயிகளுக்கு நன்மை தருவனவாதலால் இவற்றை இயற்கை எதிரிகள் - இயற்கையிலுள்ள பீடைகளுக்கு எதிரிகள் (NATURAL ENEMIES) என அழைப்பர்.


இங்கே இருந்த இயற்கை வளமான இரைகௌவிகளையும் ஒட்டுண்ணி களையும் வருந்தியழைத்த தொழில் நுட்பத்தின்பால் இழந்து விடும் நிலை வந்ததே. இங்கும் ஒன்றைப் பெற நினைத்து இன்னொன்றை இழந்து விடுகின்றதை அவதானியுங்களேன். தொடர்ந்து பார்ப்போம். *(வளரும்)*



-கலாநிதி: கு.மிகுந்தன்-
*தலைவர், விவசாய உயிரியற்றுறை, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரலிப்பு அல்லது நீர்க்கசிவு காரணமாக உங்கள் வீட்டின் சுவர்களும் இப்படியா?



### குளியலறை

குளியலறையின் உட்புறமாக காணப்படும் ஈரலிப்பு காரணமாக வெளிச்சுவர்களில் ஈரக்கசிவேற்பட்டு வெளிர்தன்மை, கறைகள் ஏற்படல் மற்றும் பெயிண்ட் படலம் பாதிப்படைதல் நீங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினையா? பொருத்தமான முறையில் நீர்க்கசிவைத்தடுப்பதற்கேற்ற வகையில் அமைக்கப்படாத (வோட்டர் புருபிங் அற்ற) சுவர்களின் மேல் டைல் பதித்தல் காரணமாக டைல்களுக்கு இடையில் (கிரவுட்) சுவர்களுக்கு ஊடுருவும் ஈரலிப்பு அதற்கான காரணமாகும். டைல் பதிப்பதற்கு முன்பாக குளியலறையின் உட்புற, வெளிப்புற சுவர்கள் மற்றும் தரையில் மல்டிலக் வோட்டர் புருபிங் சீலரை இரண்டு தடவைகள் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் பூசுவதன் மூலமாக குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காணலாம்.





குளியலறையின் வெளிப்புற சுவர், நிலம் மற்றும் சொ:.பிட் ஆகிய பகுதிகளில் ஈரலிப்பை தடுப்பதற்கு டைல் பதிக்குமுன் உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் இருமுறை பூசுங்கள்.



செயல் முறை 1
சுவரை பூசுங்கள்



செயல் முறை 2
மல்டிலெக் வோட்டர் புரு:.பிங் சீலரை இரு முறை பூசுங்கள்



செயல் முறை 3
டைல் பதியுங்கள்

### ஈரலிப்பான சுவர்கள் / வெளிப்புற சுவர்கள் (பிளைண்ட் வோல்)

எங்களது ஆய்வொன்றின் பிரகாரம் அனைத்து இல்லங்களிலும் ஏதாவது ஒரு வகையான ஈரக்கசிவு காரணமாக உண்டான கறைகள், வெளிறலான சுவர்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் அத்திவாரங்களில் காணப்படும் வெடிப்புகள், கொங்கிறீட் பலகை, பிளைண்ட் வோல், அஸ்பெஸ்டஸ் சீலிங் என்பவற்றினூடாக நிகழும் ஈரக்கசிவு பெரும்பாலான வீடுகளில் தீர்வு காணமுடியாத பிரச்சினையாக மாறியுள்ளது.

இப்போது அதற்கென அறிமுகப்படுத்தப்படும் மல்டிலக் வோட்டர் புருபிங் சீலர் ஐ இரண்டு தடவைகள் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் பூசுவதன் மூலமாக அப்பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க முடியும்.





### கடலோரப் பிரதேச நிர்மாணங்களுக்காக

கடலோரப் பிரதேசங்களில் வீசும் கடும் கடல் காற்று காரணமாக கொங்கிறீட் ஊடாக நிகழும் உப்புத்தன்மையான ஈரக்கசிவின் மூலம் கொங்கிறீட் மட்டுமன்றி அதன் உள்ளேயிருக்கும் இரும்பும் உக்கிப்போகும், அதன் மூலமாக கட்டிடத்தின் ஆயுட்காலம் குறையும். மல்டிலக் வோட்டர் புருபிங் சீலரை உங்கள் வீட்டின் அல்லது கட்டிடத்தின் வெளிச்சுவரின் மீது இரண்டு தடவைகள் பூசுவதன் மூலமாக கடல் காற்றின் உப்புத்தன்மையான ஈரம் சுவர்களில் ஊடுருவு-வதைத் தடுத்து கட்டிடத்தின் ஆயுட்காலத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.





### நீர்த்தாங்கிகள்.

சீமெந்தினால் கட்டப்பட்ட நீர்த்தாங்கிகள் இலங்கையில் பரவலாகக் காணப்படுகின்றன. அதில் காணப்படும் பிரதான பிரச்சினை யாதெனில் தாங்கியின் சுவர் ஊடாக நிகழும் ஈரக்கசிவினால் வெளிச்சுவர் ஈரலிப்புடன் காணப்படுதலாகும்.அதன் காரணமாக பூஞ்சணம் மற்றும் நீர்த்தாவரங்களின் வளர்ச்சியும் நிகழ்கின்றது. தாங்கியானது கொங்கிறீட் பலகையொன்றின் மீது அமைக்கப்பட்டிருக்குமாயின் அதன் ஊடாகவும் உட்புற சீலிங் மற்றும் சுவர்களில் ஈரக்கசிவு உண்டாகின்றது.

அதற்கான பொருத்தமான தீர்வு யாதெனில், மல்டிலக் வோட்டர் புருபிங் சீலர் ஐ இரண்டு தடவைகள் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தாங்கியின் உட்புறச்சுவர் மற்றும் வெளிப்புறச்சுவர்களில் பூசுவதாகும். அதனை மூன்று நாட்கள் (72 மணித்தியாலங்கள்) உலர விடுமாறு பரிந்துரைப்பதுடன், இது நச்சுத்தன்மையற்றது என்பதனால் தாங்கியின் உட்புறச்சுவர்களுக்குப் பூசுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டது.





### மல்டிலக் வோட்டர் புருபிங் சீலரின் தனித்தன்மைகள்.

- ஈரச்சுவரின் மீதும் பூசலாம்.
- நீடித்து உழைக்கக்கூடியது.
- பூசப்படும் பரப்பை ஊடுருவி பாதுகாப்பளிக்கக்கூடியது.
- நச்சுத்தன்மையற்ற, சூழலுக்கு இயைபானதோர் தயாரிப்பு
- உறுதியானதும், இறுகியதுமான படலம்




லீட்டர் 1,2,4,5 மற்றும் 20 லீட்டர் கொள்கலன்களில் கிடைக்கும்

MACKSONS PAINTS WORLDWIDE

HOT LINE - 077 2222555

Multilac®
SUPREME LIFE
Water Proofing
Sealer
Solvent base

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMW வாகனச் சந்தை யாழ்ப்பாணத்திற்கு வருகிறது

AMW Auto Fair

**2010 மார்ச் 16 முதல் 18 வரை**

துரையப்பா விளையாட்டரங்கில் (யாழ்நகர்)

காலை 9.00 முதல் மாலை 6.00 வரை

- புத்தம்புதிய கார்கள் (சுசூக்கி மாருதி, சுசூக்கி, நிஸான்), மோட்டோர் சைக்கிள்கள், படகு மோட்டோர்கள் (யமஹா), திறீ வீலர்கள் (பியாகியோ), திறாக்டர்கள் மற்றும் பஸ்களை (ஐஷர்) கொள்வனவு செய்யுங்கள்.
- சுசூக்கி மாருதி, சுசூக்கி மற்றும் நிஸான் கார்களுக்கு இலவச பரிசோதனை அறிக்கைகள்.
- சுசூக்கி மாருதி கார்களுக்கான விசேட பரிமாற்ற வசதி.

மற்றும்

- புதிய வாகனங்களின் கொள்வனவுக்கு விசேட லீசிங் வசதி.
- டயர்கள் மற்றும் ஒயில் வகைகள் விசேட கழிவு விலைகளில் வழங்கப்படும்.
- உத்தரவாதம் கொண்ட பதிவு செய்யப்பட்ட வாகனம்
- இன்னும் பல

## புதிய வாகனம்

வாங்கும் உங்கள் கனவு நனவாக இருக்கிறது

இலவசமாக

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும்

இன்றே பதிவு செய்யவும்

* நிபந்தனைகளுக்கு உட்படும்

www.cpm.lk

SUZUKI MARUTI Counts on us · SUZUKI · NISSAN · RENAULT · EICHER · YAMAHA · bp · Pitstop · Castrol · GOODYEAR · PIAGGIO · AMW CAPITAL LEASING · AMW automall

அழையுங்கள்

விராஜ் 077 2245719

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

Web : www.amwltd.lk

E mail : maruti@amwltd.com

For Trade-in offer login to : www.amwtradein.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெற்றோரிடம் இருந்து குழந்தைக்குத் தாவும் மனஅழுத்தம்

மனஅழுத்தம் ஒரு தொற்றுநோய். வாழ்க்கையின் சூழல் பலருக்கும் மன அழுத்தத்தை தரலாம். ஆனால் அது குழந்தைகளுக்கும் பெற்றோர்கள் மூலம் பரவுகிறது என்கிறது புதிய ஆய்வு.

பின்லாந்து கல்வி அமைப்பு ஒரு ஆய்வை நடத்தியது. டீன்ஏஜ் சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் 500 பேரை பரிசோதித்தது. அதில் அவர்களுக்கு இடையே உள்ள தொடர்பால் குழந்தைகளுக்கு மனஅழுத்தம் தொற்றுவது தெரியவந்துள்ளது.



குறிப்பாக வேலை செய்யும் பெற்றோர்களின் அனுபவமே அவர்களின் குழந்தைக்கு மன அழுத்தம் தொற்ற அடிப்படையாக உள்ளது. ஒருவர் தனது அலுவலகத்தில் மேலதிகாரி மற்றும் ஊழியர்களுடன் மனக்கசப்பான அனுபவங்களைப் பெறலாம். அதனால் ஏற்படும் மனச்சோர்வுடன் அவர் வீட்டை அடைகிறார். அந்தச் சோர்வு குறையும் முன்பே வீட்டில் குழந்தைகள் தொல்லை செய்ய கோபம் தலைக்கேறி கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள் பெற்றோர்கள். இதனால் குழந்தைகளின் கவனம் சிதறுகிறது.

அத்துடன் நிற்காமல் மறுநாள் பாடசாலையிலும் எதிரொலிக்கிறது. வீட்டுப்பாடம் முடிக்காவிட்டால் அல்லது தவறு செய்திருந்தால் ஆசிரியர்களிடம் அவமானப்பட வேண்டி இருக்கிறது. அதே மனநிலையுடன் செயற்படுவதால் நண்பர்களுடனும் சரியாக ஒத்துழைக்க முடிவதில்லை. நாளடைவில் இது மனஅழுத்த நோயாகப் பரிணமித்துவிடுகிறது.

பெற்றோர்கள் சண்டையிட்டுக் கொள்வதால் குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள் என்பது ஏற்கனவே தெரிந்ததுதான். சண்டை கூட வேண்டாம், ஏதோ வெறுப்பில் பேசினால்கூட குழந்தைகளை மனஅழுத்தம் தொற்றிக் கொள்கிறது என்பது பெற்றோர்கள் அறிய வேண்டிய செய்தி. ★★★★★★




# திக்கு வாய் வியாதி தீர்கிறது!

மனிதனின் சிறப்புகளில் மொழி வழக்கும் ஒன்று. பேச முடிந்தாலும் மனிதர்களில் பலருக்கு சரளமாகப் பேச்சு வராது. சிலருக்குத் திக்கித்திக்கிப் பேச வரும். இது ஒரு வித நோய். உலகில் ஒரு சதவீதம் பேர் திக்குவாய் வியாதியால் அவதிப்படுகிறார்கள்.

இவர்கள் பேசும்போது வார்த்தைகள் அரைகுறையாக வெளிவருவதோ, ஒரே வார்த்தைகள் திரும்பத் திரும்ப வருவதோ, சில வார்த்தைகள் வராமலோ இருக்கலாம். இதுபோன்ற பாதிப்புகளுக்கு காரணமான ஜீன்கள் சமீபத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



அமெரிக்காவின் காது கேளாமை மற்றும் உடலியல் தொடர்பு கோளாறுகள் ஆராய்ச்சி மையம் இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டது. பாகிஸ்தானைச் சேர்ந்த 123 பேர் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்தைச் சேர்ந்த 550 பேர் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் குறிப்பட்ட அளவில் சாதாரணமாக பேசும் திறனுடையவர்களும் அடங்குவர்.

அவர்களை ஒப்பிட்டு ஆய்வு செய்ததில் 3 சதவீத ஜீன்கள் திக்கிப் பேசுவதில் தொடர்புடையது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஜீன்கள்தான் ஒருவர் திக்குவாய், திக்காமல் பேசுவது, சரளமாகப் பேசுவது என ஒவ்வொன்றிலும் தொடர்பு கொண்டுள்ளது. இவற்றின் செயற்படும் விதத்தில் மாறுபாடு ஏற்பட்டால் பேச்சுத்திறனிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. வேறுசில வளர்ச்சி மாற்றத்திலும் இவை பங்காற்றுகின்றன.

இதுவரையில் திக்கு வாய் நோய் உடையவர்களுக்கு கவலையை குறைப்பதற்கான பயிற்சியும், தெளிவாகப் பேசுவதற்கு மின்னியக்கக் கருவியுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இனிமேல் இந்த ஜீன்களைப் பயன்படுத்தி புதிய மருந்தை உருவாக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். ★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விட்டுவிடப் போகுது உயிர்!



லண்டனுக்குச் சென்றிருந்த இந்துமதத் தவர் ஒருவர் காலையில் குளித்து விட்டு நெற்றியில் பட்டை பட்டையாக வீபூதி பூசினார். அதைக் கண்ட ஆங்கிலே யரொருவர் "ஏன் இப்படிச் சாம்பலை அள்ளி நெற்றியில் பூசுகிறீர்கள்" என்று கேட்டார். இந்த உடம்பு என்றாவது ஒரு நாள் சாம்பராகப் போகிறது என்பதை இவ்விதம் தினமும் நாம் நினைவுபடுத்திக் கொள்கிறோம்" என்றாராம் அந்த இந்து மதத்தவர். அது குறித்து ஆழ்ந்து சிந்தித்த அந்த ஆங்கிலேயர் பின்னாளில் இந்துமதம் குறித்த ஆய்வில் ஆர்வம் காட்டிச் செயற்பட்டாராம்.

என்றோ ஒரு நாள் மரணம் வந்தே யாகும் என்பதை உணர்ந்து அதுவரை வாழ்க்கையை நேர்மையாக நடத்தச் செய்வதற்கே 'யாக்கை நிலையாமை' பற்றி இந்து மத தத்துவ ஞானிகள் அடிக்கடி கூறி உணர்த்தி வந்துள்ளனர். "விட்டு விடப்போகுதுயிர்; விட்டவுடனே உடலைச் சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார். என பட்டினத்தார் இந்த உண்மையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒருத்தரின் மரணச் சடங்கொன்றில் கலந்துகொள்ளும் போது "நாமும் இப்படி ஒருநாள் இறக்கத்தானே போகிறோம்?" என்ற எண்ணம் வருகிறது. இதனையே சுடலை ஞானம் எனக் கூறுகின்றோம்.

இந்து மத தத்துவங்கள் நமது வாழ்க்கையோடு இணைந்தவை; முறைப்படி வாழத்தூண்டுபவை. மனித வாழ்க்கையின் அர்த்தத்தை உணர்த்துபவை.

பு.ஜெயசோதி, ஆனைக்கோட்டை.

# நவீன உலகோடு ஒன்றித்துப் போய்விட்ட மின்சாரம்



லண்டன் நகரத்து 'ரோயல்' சங்கத்தில் விஞ்ஞானியொருவர் ஒரு கம்பிச் சுருளுக்குள் காந்தத்தை நுழைத்தால் கம்பிச் சுருளில் மின்னோட்டம் தோன்றும் என்பதைத் தாம் கண்டு பிடித்துள்ளதாக விபரிக்கிறார். அவருடைய அந்தப் பேச்சு கூட்டத்தினரைக் கவராத போதிலும் நாகரிகம் கருதி கூட்டத்தினர் வேண்டாவெறுப்பாக அவரது உரையைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அவர் தமது உரையை முடித்ததும் கூட்டத்திலிருந்த ஒரு பெண்மணி "நீங்கள் கூறியது உண்மையாக இருக்கலாம்; ஆனால் அதனால் பெரிதாக என்ன பயன் கிட்டிவிடப் போகின்றது?" எனக் கேட்டார்.

"அம்மணி! புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையால் மக்களுக்கு என்ன உபயோகம் எனத் தங்களால் கூற முடியுமா? என அந்த விஞ்ஞானி திருப்பிக் கேட்டார்.

அந்தக் கூட்டத்தில் அப்போதைய இங்கிலாந்துப் பிரதமர் கிளாட்ஸ்ரனும் [1809-1898] உட்கார்ந்து அந்த விஞ்ஞானியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்.

கேள்வி நேரத்தின் போது அவர்கூட அந்த விஞ்ஞானியைப் பார்த்து "உண்மையில் உங்களது கண்டுபிடிப்புக்குப் பலன் கிட்டுமா?" எனக் கேட்டார்.

பிரதமரின் அந்த அலட்சியமான கேள்விக்கு அந்த விஞ்ஞானி அமைதியாகக் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார். "ஏனில்லை, மின்சாரத்தை விநியோகிப்பதற்காக வரி விதித்து வருமானம் பெறக்கூடிய காலம் சீக்கிரத்தில் வரக்கூடும்" என்பதுதான் அந்த விஞ்ஞானப் பேராசிரியர் மைக்கல் பாரடே அன்று பிரதமருக்கு தெரிவித்த பதில்.

அவரது அந்த வாக்கு அப்படியே பலித்தது. இன்று உலகின் சகல நாடுகளும் மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு மூல காரணமாய் அமைந்தது பேராசியர் மைக்கல் பரடேயின் அந்தவேளைய கண்டுபிடிப்பேயாகும்.

ஜெ. தமிழ், பாசையூர்.



# பஞ்சாமிர்தம்

## இந்துக்களின் புண்ணிய தலம் - காசி



வாரணாசி என்று அழைக்கப்படும் (பனாரஸ்) புனித காசிநகர், கங்கை நதியின் கரையில் அமைந்துள்ளது. மிகப் புராதன காலத்திலிருந்தே புனித கங்கை இந்துக்களால் போற்றிப் பேணப்பட்டு வரும் ஒரு நதியாகும்.

கங்கை நதியில் ஒரு தடவை மூழ்கி எழுந்தால் ஒரு மனிதன் தனது வாழ் நாளில் செய்த பாவங்களையெல்லாம் போக்கிக்கொள்ள முடியும் என்பது இந்துக்களது நம்பிக்கை. வாழ்நாளில் ஒரு தடவையாகுதல் காசிக்கு யாத்திரை சென்று கங்கையில் நீராடி விட வேண்டும் என்று எந்தவொரு இந்து சமயியும் விரும்புவது வழக்கம்.

- [illegible]

# சிக்கனம் வாழ்வில் உயர்வு தரும்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒருமுறை லண்டனில் பிரபல மானதொரு பத்திரிகையின் நிருபரொருவர், லண்டனில் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான தொழிலதிபர் ஒருவரைத் தான் பணியாற்றிய பத்திரிகைக்காகப் பேட்டி காணச் சென்றிருந்தார்.

குறித்த அந்தத் தொழிலதிபர் எவ்விதம் வாழ்க்கையில் உயர்ந்து செல்வந்தரானார் என்பதை அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்து அதனைத் தாம் கடமையாற்றிய பத்திரிகையில் சுவாரஸ்யமாக அமையுமாறு வெளியிடுவதே அந்த நிருபரின் நோக்கமாக அமைந்திருந்தது.

அது இரவு வேளை. அந்தச் செல்வந்தரின் வீட்டின் முன்புறமுள்ள பூந்தோட்டத்தில் இருவரும் அமர்ந்து கொண்டனர். நல்ல நிலாக்காலம் அது. அவர்களின் அருகிலிருந்த சிறிய மேசையில் மெழுகுவர்த்தியொன்று எரிந்து கொண்டிருந்தது.


தாம் அறிய விரும்பிய அந்தத் தகவல் குறித்து நிருபர் கேள்வி எழுப்பியபோது, அந்தச் செல்வந்தரோ "நான் எவ்வாறு இத்தனை செல்வங்களையும் சேர்த்தேன் என்பது ஒரு பெரியகதை. அதனை விளக்கமாக உமக்குச் சொல்கின்றேன். அது வரையிலும் எதற்கு வீணாக இந்த மெழுகுவர்த்தி எரிய வேண்டும். அதனை முதலில் அணைத்துவிடும். அதன் பின்னர் நான் எனது கதையைச் சொல்கின்றேன்" என்றாராம்.

நிருபரோ, "வேண்டாம் ஐயா, நீங்கள் எவ்வாறு செல்வந்தர் ஆகியிருப்பீர்கள் என்பதை நான் இப்போது தெளிவாகப் புரிந்து கொண்டேன்" எனக் கூறினாராம்.

அவசிய தேவைகளின்றி அனாவசியமாக எதனையும் செலவிடாமல் சிக்கனமாக வாழத் தெரிந்தால் வாழ்க்கையில் உயர முடியும் என்பது யதார்த்த உண்மையல்லவா?

பி. சரண்யா, உடுப்பிட்டி.

# மானே! மானே! அழகுநிறை மானே....!



காட்டில் வாழும் சிங்கம், புலி, சிறுத்தை இனங்களுக்கு விருப்பமான இறைச்சி மான் இறைச்சியே. அதனாற்றான் மானைக் கண்டால் அதனை வேட்டையாடி உண்பதில் இவை அதிக ஆர்வம் காட்டுகின்றன.

மான், போவிடே (Bovidae) இனத்தைச் சேர்ந்தது. மான்களில் பல வகைகள் உள்ளன. இவற்றில் ஹங்குல்மான் வகை அழிந்துவரும் சொத்தாக ஆகி வருகின்றது.

அடர் காடுகள் இருட்டாக இருப்பதால் அங்குள்ள மான்களுக்கு காது கேட்கும் திறன் மிகுந் திருக்கும். திறந்த வெளியில் மான்களால் துல்லியமாகப் பார்க்க முடியும். எங்காவது தூரத்தில் எதிரி மிருகங்களைக் கண்டுவிட்டால் கடும் வேகத்தில் ஓடித் தப்பித்துவிடும் வலிமை இவற்றுக்கு உண்டு.

சகல மான்களுக்கும் பின்னங் கால்களில் வாசனைச் சுரப்பிகள் உள்ளன. எனவே இவை போகும் பாதையை அந்த மணம் எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்து விடும்.

மான்களின் விஷேட அம்சம் அவற்றின் கொம்புகள்தான். ஒரு மானினது கொம்பை வைத்து அது எந்த இனத்தைச் சேர்ந்ததெனக் கண்டு பிடித்துவிட முடியும்.

இளமையில் சிறிதாக இருக்கும் கொம்பில் வயது கூடக்கூட கிளைகளும் கூடிக்கொண்டிருக்கும். ஆண்டுக்கொரு முறை இவற்றைப் புதுப்பித்துக் கொள்ளும் திறனை இயற்கை இவற்றுக்கு வழங்கியுள்ளது. மான்கள் பெரும்பாலும் கூட்டமாகவே நடமாடும். கருவுற்ற பெண்மான் குட்டி ஈனுவதற்கு இரண்டொரு தினங்களின் முன்பே தனிமையாகப் பாதுகாப்பான இடத்தில் தங்கிக் கொள்ளும். பிறந்த மான்குட்டி சுமார் ஐந்து நாள்களுக்கு அதே இடத்தில் படுத்திருக்கும். தாய்மான் காலை மாலை இரு வேளையும் குட்டிக்குப் பாலூட்டும்.

மனிதர்களால் இறைச்சிக்காக வேட்டையாடப்படும் மானின் கொம்புகளும் தோலும் பெறுமதி மிக்கவை. மான் இனம் அழிந்து போவதைத் தடுப்பதற்காக அவை வேட்டையாடப்படுவது சட்ட விரோதச் செயற்பாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. - து.ஜெயரூபன், கந்தரோடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 104

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| | ■ | 11 | | ■ | 12 | | 13 |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | ■ | 19 | 20 | ■ | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:....................................................

விலாசம்:....................................................

....................................................

கையொப்பம்:....................................................

### இடமிருந்து வலம்

1. மிதவாதி அல்லன்.
5. அதிக/ மிகு.
7. திரவத்துக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட களிம்பு நிலையில் உள்ளது.
8. சமுத்திரத்தில் பிடிப்பது; இங்கிருந்து ஏற்றுமதியாவது.
9. வாழும் ஸ்தானம்.
11. எங்களிற் பலர்.
12. சர்ப்பம்.
14. சுத்தமான/ பரிசுத்த.
15. ஒளி/ தீப்பிழம்பு வடிவம்.
16. தாமரை.
17. இது இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்...
18. இல்லாமல் அழித்தொழி.
19. இது வந்திடப் பத்தும் பறந்திடுமாமே!
21. முற்கால ஆயுதம்.
22. வலிமை மிக்கவன்.

### மேலிருந்து கீழ்

1. இந்துக்களின் திருநாள்களில் ஒன்று.
2. பகுபத உறுப்பில் ஒன்று.
3. மருந்து/ மருத்துவம் (வைத்தியம்).
4. உறுதி.
5. நாணம்.
6. மழை/ வெயில் இரு காலத்திலும் உதவும்.
10. பிள்ளையார்.
12. அரைவாசி.
13. மகன்.
14. உறங்கல் / தொங்கல்
15. இதைவிட்டு சுறுசுறுப்பாய் இரு.
16. அரசியல்வாதியின் கண் எப்போதும் இதன்மீதுதான்.
20. பல அல்லவே!

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 102 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சாசுவதம். (5) நாகு. (7) கட்டளை. (8) பட்டி. (9) சடுதி. (10) சுண்டல். (11) சைவம். (14) சமாதி. (17) தங்கம். (19) மிதம். (21) மகம். (22) ஈர்ப்பு. (23) தும்பிக்கை. (24) புலி.

**மேலிருந்து கீழ்**

(1) சாகசம். (2) சுட்டு. (3) வடதிசை. (4) தளை. (5) நாட்டம். (6) குடில். (8) பண். (10) சும்மா. (12) வசம். (13) சிங்கம். (15) திமிர். (16) அம்புலி. (17) தமது. (18) கம்பி. (20) தப்பு. (22) ஈகை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 102 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ஜெ.வைஸ்ணவி, மாலிகாவத்தை, சங்கானை.

**2 ஆம் பரிசு** செல்வி. ம.விஜிதா, கலட்டி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**3 ஆம் பரிசு** செல்வன் தி.கவிச்சரன், இல.61, உடுவில் வீதி, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு** சோ.தவநடராசா, பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி, கோப்பாய்.

**5 ஆம் பரிசு** செல்வன் செல்வநாயகம் ரவிசாந் குறிஞ்சிக்குமரன் வீதி, விரமனை, குப்பிளான்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **சிவதர்சினி ரமேஸ்,** Laurenzenvor Stadt 59 CH 5000, AA RAU, Switzerland.

(2) **இ.நவமணிதேவி, 'மிதிலை'** ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(3) **அ.சுசிலாதேவி,** நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
5. *வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 104**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 24.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

7. *சொற்சிலம்பம் போட்டி இல.104 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28.03.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

## புதுப்பட்டிக் கிராமத்துக்கு......

*[11 ஆம்பக்கத் தொடர்ச்சி]*

*கொழந்தயா இருக்கும் போது வந்திருப்பேனோ? அப்பாவும் ஆயா தோள்ல ஏறித்தான் வந்திருப்பேனோ? அப்பாவும் ஆயாவும் இங்கேயே உசுர உட்டுட்டாங்க. அப்றம் கட்டிகிட்ட பெஞ்சாதி முதல் பிரசவத்திலேயே தாயும் புள்ளயுமா.....'*

*ஐயோ....... எல்லோரும் இந்த மண்ணுக்குத் தானே உரமானுங்க.... அப்புறம் தூரத்து உறவுக்காரங்க புதுப்பட்டியிலதானா இருக்காங்க....... நா மட்டும் என் கடசி மூச்ச அங்கதானாம் வுடனும்.'*

*'அக்கரை மலையில அந்தப் பூனை மியாவ் மியாவ்னு அழுகிற சத்தம் பரிதாபமாகக் கேட்குதே!'*

*'லயம் லயம்னு சாகப்போறாங்க, நா ஒண்டிக்கட்டயா இந்த லயத்தில இருக்கிறது பெரிய பங்களாவில் இருக்கிற மாதிரியாம்; எல்லார் கண்ணிலயும் இப்ப அதுதான் குத்துது!'*

*லயத்துக்கு வந்து சேர்ந்தபோது மாலை இருளாக ஆயத்தம்.*

*"அட சின்னையா ஆபிசிலிருந்து வந்துட்டா, என்ன ஆச்சோ தெரியாது. வாங்கடா போய்க் கேப்போம்."*

*இனி அக்கம் பக்கத்தவர்கள் காம்பராவுக்கு படையெடுக்க ஆரம்பம்.*

*சின்னையாவுக்கு ஒரு பக்கம் வெறுப்பும், சலிப்பும் சஞ்சலமும். அதன் மறுபக்கம் அன்புத் தொல்லை.*

*தோட்டத்தின் அறுநூறு சொச்சம் பேரும் தரிசிக்கத் தான் போகிறார்கள்.*

*அந்தப் படையெடுப்புக்கு முன்-*

*அவன் அவசரப்படுகின்றான்- வந்ததும் வராததுமாக*

*"ஏ பாப்பம்மா.... வாளிய அடுப்பில வச்சிட்டு, தண்ணிமொண்டு ஊத்துவியா புள்ள."*

*அவன் குரலில் என்றுமில்லாத சோகம் கவிந்திருப்பதை அந்தப் பதின்மூன்று வயதுப் பாப்பாவுக்கு என்ன தெரியப் போகிறது. அவள் வாய்க்கு வார்த்தைகளைக் கொடுக்கிறாள்.*

*"ஊத்து வியான்னா நீ மட்டும் இங்கே ராஜா மாதிரி குந்திக்கிட்டு இருக்கே. தண்ணி சுடவைக்க, தேத்தண்ணி ஊத்த அப்பப்பா எல்லாத்துக்கும் பாப்பம்மாதானே ஒனக்கு வேலக்காரி. கொஞ்ச நேரம் சும்மா இருக்க விடுவியா?"*

*உடம்பெல்லாம் துளிர்த்த வியர்வையில் ஒட்டிக்கொண்டிருந்த செம்மண் புழுதியைக் கழுவி, இந்த மண்ணுக்கே இறைத்துவிட எண்ணினான்.*

*"அட கோவிச்சுக்காத புள்ள, இன்னிக்கு மட்டுந்தானே, உன்னோட தங்கக் கையினால தண்ணி சுடவைச்சி குளிக்கப்போறேன். அப்புறம்....."*

*நெஞ்சம் விம்மி, கண்களில் நீர் முட்டியது.*

*அவனால் பேச முடியவில்லை. தொண்டையை அடைத்துக்கொண்டது. சிரமப்பட்டுச் சொன்னான்-*

*"பாப்பம்மா காலங்காத்தாலே புதுப்பட்டிக்கு பொறப்படப்போறேன்.*

*சின்னையாவின் தேம்பிய சொற்கள் அவன் மீது பாப்பம்மாவின் இள மனதில் வளர்ந்திருந்த காரணமில்லாத வெறுப்பைத் தகர்த்துவிட்டன.*

*"பாப்பம்மா நானும் ஊருக்குப் போகப் போகின்றேன்" இந்த நான்கு சொற்கள், அவள் கண்களையும் பொலபொல வென்று பனிக்கச் செய்து விட்டன. அவள் காட்டிக் கொள்ளவில்லை.*

*"பாப்பு என்ன இன்னும் நின்னுகிட்டு இருக்கே- சட்டுபுட்டுன்னு போய் ரெண்டு கட்டையை எடுத்து வச்சிட்டு, மண்டி எண்ணையை ஊத்தி எரிச்சிவிடு. நல்லா தண்ணி சுடட்டும். நா இன்னும் கொஞ்சம் மாறு பொறுக்கிக்கிட்டு வாறேன்."*

*"அடி பாப்பம்மா அங்க என்னடி, தாத்தாவோட வாய் குடுத்துக்கிட்டு இருக்கே?"*

*அவளின் தாய் தனலெட்சுமி திண்ணையில் இருந்து கொண்டே இரைகிறாள்-*

*அவளுக்கு இன்னும் விசயம் எட்டவில்லையோ!*

*சின்னையாவின் லயத்திற்கு வலப் பக்கம் மூன்றாவது காம்பிராவில் குடியிருக்கும் கார்மேகனின் மகள் தான் பாப்பம்மா.*

*சின்னையாவுக்கு அங்கே தான் சாப்பாடு, தண்ணி வெண்ணி எல்லாம். காசு, 'ரேஷன் சாமான்' எல்லாம் கொடுப்பான்.*

*சின்னையாவுக்கு அவர்கள் கிட்டத்திலோ தூரத்திலோ உறவுக்காரர்கள் அல்ல. அதைவிட தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்தவர்கள். அந்தப் பலம் வாய்ந்த இணைப்பில், ஒருவருக்கொருவர் பரஸ்பர ஒற்றுமையுடையவர்கள்.*

*இரவு ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததைப்போல அடுப்பில் ஏற்றிய நீரும் சூடேறிக்கொண்டிருந்தது. புகை சூழ அவன் அள்ளி அள்ளி ஊற்றிக் கொண்டான்.*

*குளிப்பு முடிந்து விட்டது.*

*உடம்பெல்லாம் ஒரு வகைக்கூதல், சுள், சுள் என்று குத்த கருங்கம்பளியால் போர்த்துக் கொண்டான். அப்படியும் உதடுகள் கிளாக்கர் ஐயா 'டைப்' அடிப்பதுபோல இருந்தது. ஒரு நிமிடத்தில் மூன்று சொற்கள்-*

*இனிமே... எங்க குளிக்கிறது.*

*திண்ணையில் ஒரு மூலையில், முதுகைச் சுவரில் சாய்த்து சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான்.*

*சக தொழிலாளர் வருவதும் போவதும் விசாரிப்பதுமாக இருந்தார்கள்...*

*சின்னையா இந்தியாவுக்குப் போகப் போகிறான் என்னும் தீ தோட்டமெங்கும் பரவி அதன் ஜுவாலை இனிய நெஞ்சங்களைச் சுட்டுக்கொண்டிருந்தது.*

*இந்த லயம் நாளைக்கோ மறுநாளைக்கோ செல்வராஜ் பயலுக்கு சொந்தமாகப்போகுது. அவனை நினைக்கும் போது கூடவே அந்தப் பூனையின் நெனப்பும் வருகுதே..... பாவம் அது இந்த நேரம் அக்கரைமலைக் காட்டில் என்ன பாடு படுமோ! அல்லது, ரும்பவும்.....*

*சென்ற சில வருடங்களுக்கு முன், இனி எஞ்சியுள்ள வாழ்க்கைப் போராட்டம் இலங்கையிலா? இந்தியாவிலா? என்ற பிரச்சினை அவன் வாழ்க்கையிலும் புகுந்து ஊஞ்சலாடிக்கொண்டிருந்தது. நடுவிலே மனிதனைப் பிரிக்கும் ஆழ நீலக்கடல்.*

*இங்கேயா? அங்கேயா?*

*அவன் ஒரு முடிவு செய்யாமலே இருந்துவிட்டான். ஊஞ்சலும் ஆடி ஆடி அறுத்துவிடும் நிலைக்கு வந்து விட்டது.*

*கார்மேகன் வீட்டில் இராப் போசன விருந்துக்கு ஏற்பாடாகி இருந்தது. கோழிக்கறியும் சோறும். எப்போதும் போல் மேல் வருத்தத்துக்கு' என்று அளவோடு எடுக்கும் மருந்து பரிமாறப்பட்டதும் சின்னையாவின் குளிர் பறந்து விட்டது.*

*தலைவர் நல்லையாவின் தலைமையில் சின்னையாவின் சகாக்கள் கூடியிருந்தார்கள்.*

*புதுப்பட்டிக் கிராமத்தைப் பற்றி ஒரு மகாநாடு நடந்து முடிந்து விட்டது.*

*சின்னையாவுக்குச் சொந்தமாயிருந்த ஒரேயொரு 'டிறங்குப் பெட்டி' அதைத் தூக்கிக் கொண்டு போக சிரமம். அதைப் பாப்பம்மாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டு ஓர் அளவான கைப்பை, அற்புதமாக இருந்தது. ஒரு கனமான காகித உறையில் பிரயாணத்தின் போது தேவைப்படும் முக்கிய தஸ்தாவேஜுகள்- திறந்ததும் எடுக்குமாப் போல.....*

*நான்கு வயதில் இலங்கைக்கு வந்திருந்தாலும் ஐம்பத்தொரு வருடங்களுக்குப் பின் பழக்கமே இல்லாத ஊருக்குப் போகும் போது உழைத்துக் கொண்டுபோகும் சொத்தெல்லாம் ஒரு சிறு கைப்பைக்குள்தானே அடங்கும்.*

*சொல்லவேண்டியவர்களுக்கு எல்லாம் சொல்லியாயிற்று. கறுப்புக்கோட், சட்டை, வேட்டி, உடுத்து பிரயாணத்துக்கு வாங்கி வைத்திருந்த புதுச் செருப்பையும் மாட்டிக் கொண்டு, கைப்பையையும் தோளில் தொங்விட்டுக் கொண்டு, காம்பரா சாவியை தலைவரிடம் ஒப்படைத்தாயிற்று....*

*அப்புறம் இந்த மண்ணுக்கும் அவனுக்கும் எந்த பந்தமும் இல்லை.*

*"புதுப்பட்டி கிராமத்தில் தான் போய் சாகணும்னு, மரண தண்டனையா?*

*ஆறரை மணிக்கு பயணம் சொல்லியும்... கூட்டம். பஸ்ஸில் ஏறியதும் அதில் நால்வாசிப்பேர் 'ஸ்டேசன் வரைக்கும் வர்றேம்னு' ஏறினாங்க.... அப்புறம் நாவலப் பிட்டி ஸ்டேசனில் அவுகளும் நின்னுட்டாக-*

*"தலைமன்னாருக்கு போக- கோச்சி ரெண்டு மணிநேரம் சொனங்களாம்......."*

*"அப்படியா... அதுவும் நல்லதுக்குதான், அப்ப நீங்களாம் இங்க நிண்டு ஒங்க வேலை வெட்டிகளைக் கெடுக்காம எல்லாரும் போங்க. கோச்சி வந்ததும் நா ஏறிக்குவேன் சரிங்களா"*

*வழியனுப்ப வந்து நின்றுகொண்டிருப்பவர்களுக்கும், அதுதான் சரியாகப்பட்டது.*

*அவர்கள் அனைவரும்-*

*"அப்ப போட்டு வாங்க, போய்ட்டு வாங்க" என்று அன்பு கனிந்து, கையசைத்து விடைபெத்து சென்றுமறைந்தனர்.*

*போறதாவது....வாறதாவது... அப்புறம் போய்ட்டு வரணுமாக்கும். கோச்சே போறதுக்கு சொனங்குதாம். நா மட்டும் சொனங்கினா என்ன? ரெண்டு மணி நேரம் சொனங்கட்டுமே, கண் காணாத புதுப்பட்டிக் கிராமத்துக்கு கடசி ஆளா இருந்துவிட்டுப் போறனே. என் ஒருத்தனால யாருக்கும் குறைஞ்சிடப் போவுதா.....*

*காலச் சக்கர ஓட்டத்தில். ஒரு நாள் காலைப் பொழுது தோட்டமெங்கும் ஒரே பரபரப்பு. 'லயக்காட்டில' உள்ள புதிய தலைமுறையினர் புதினம் பார்க்க ஓடோடி வந்தனர்.*

*யாரோ ஒரு புள்ள புடிக்கிற சாமியார் வந்திருக்காராம் போய்ப்பாப்பம்.*

*கற்றை கற்றையாக நீண்ட வெள்ளைத்தாடி, புழுதி படிந்ததால் நிறம் மாறி கசங்கிப்போன கோட், வெண்மை வெளுத்துப்போன வேட்டி சகிதம்.....*

*"சாமியார் நீங்க யாரு?"*

*என்ன கேட்டாலும் ஓர் ஊமைச் சிரிப்பு. 'இந்த ஆள் அக்கரை காட்டிலிருந்து வாரத கண்டிருக்கேன்.*

*'சாமியார் பாப்பம்மா லயப்பக்கம் எட்டி எட்டிப் பாக்கிறத பாத்திருக்கேன்.....'*

*'செல்வராஜ் லயத்தையே உத்துப் பார்த்துக்கிட்டு இருப்பாரு.'*

*'ஆபிசுக்கு முன்னால் மாமர நிழலிலும் குந்திக்கிட்டு இருப்பாரு.*

*'யாரோ எவரோ, ஆள் இந்தப் பக்கத்துக்கு புதுசு... புள்ள குட்டிங்க கண்டமாதிரி ஓடித் திரியாதீங்க.... அக்கரை மலைக்கு அப்பால் பாலம் கட்டுராங்காளாம்.... அப்புறம் சாமியார் 'பெலி' குடுக்க புடிச்சிட்டுப் போயிடுவாரு!*

*குழந்தைகள் எல்லாம் மிரண்டு ஓடி ஒளிந்து கொள்கின்றனர்.*

*"அட ராமு, லதா, பாண்டியா! சொல்றது கேக்குதா. எல்லாம் உள்ளுக்கு வந்து விளையாடுங்க புள்ளகளா...."*

*பாப்பம்மா தன் அன்புக் குஞ்சுகளை அரவணைத்துக் கொள்கிறாள்.*

*அதற்குப் பின்னர் நடந்த சம்பவங்களால் மனம் புண்பட்டுப் போனவனுக்கு மண்ணின் மீதே வெறுப்பேற்பட்டிருக்க வேண்டும்.*

*கொஞ்ச நாளாக-*

*'சாமியார் தலைமன்னார் கோச்சியில ஏறினார்." என்று ஒரு புதுச் செய்தி அடிபட்டு ஓய்ந்தது.* ★★★★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் 2010
# யாழ் மாவட்டம்

X 1

அன்பான தமிழ் மக்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்!

அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தமது வீடுகளையும் விவசாய நிலங்களையும் இழந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு பாராளுமன்றத் தேர்தலின் பின் முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தமது வீடுகள், விவசாய நிலங்களை இழந்த மக்களுக்கு அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர், மேன்மை தங்கிய பசில் ராஜபக்ஷ அவர்களுடன் கலந்தாலோசித்து இவ் நிலங்களை கட்டம் கட்டமாக மீளப்பெற்றுக் கொள்வதவற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உங்கள் பெயர் விபரங்களை கிராம சேவகர் மூலம் உறுதிப்படுத்தி இலக்கம் 195 – 197 கோவில் வீதியில் அமைந்துள்ள எனது யாழ் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு

இ அங்கஜன்

அங்கஜன் இராமநாதன்




இளமை-துடிப்பு-செயற்றிறன்

www.angajanramanathan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவப் பிரதிநிதிகள்
## (வட மாகாணம் - யாழ்ப்பாணம்)

இலங்கையின் பழம்பெரும் வர்த்தக நிறுவனத்தின் துணை நிறுவனமும், மருத்துவ, சத்திரசிகிச்சை மற்றும் நோயைக் கண்டறியும் தயாரிப்புகளை சந்தைப்படுத்தலிலும் விநியோகித்தலிலும் விரைவாக வளர்ந்துவருவதும், உலகம் முழுதும் பிரபலமான கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுமான ஜோர்ஜ் ஸ்ருவர்ட் ஏஜென்சீஸ் (ப்றைவேட்) லிமிட்டெட் நிறுவனம் மேற்குறிப்பிட்ட பதவிக்கு உடனடி வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

எமது மருந்தகப் பிரிவை வளப்படுத்துவதற்காக, சிறந்த ஆளுமையும், பற்றுறுதியும் கொண்ட தனிநபர்களை எதிர்பார்க்கின்றோம்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- க.பொ.த. (சா.த) பரீட்சையில் விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் அடங்கலாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- பெயர்பெற்ற மருந்தகக் கம்பனி ஒன்றின் மருத்துவ விடயங்களில் ஆகக்குறைந்தது 2 – 3 வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- 35 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- பொருத்தமான விண்ணப்பதாரிகள் வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.
- சந்தைப்படுத்தல் தொடர்பில் தொழில்சார் தகைமை, ஆங்கிலத்தில் புலமையும் மேலதிக மொழி அறிவும் கொண்டிருத்தல் என்பன மேலதிக நன்மையாகும்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளமும், சிறந்த வேலைச் சூழலும், முன்னேற்றகரமான தொழில்வாய்ப்பும் காத்திருக்கின்றன.

தற்போதைய மற்றும் முன்னைய தொழில் பற்றிய விபரங்களையும், ஒரு அண்மைக்கால கடவுச்சீட்டு அளவு புகைப்படத்தையும், கல்வி மற்றும் தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகளையும், உறவினரல்லாத இருவரின் பெயர் விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுய விபரக் கோவையினை பத்து நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

The Senior Director
**GEORGE STEUART AGENCIES (PVT) LTD**
7 E, Post Masters Place,
Off Templers Road, Mt. Lavinia
Website :www.gsagn.com

SINCE 1835
GEORGE STEUARTS
GROUP

STEUART CREATIONS

GEORGE 1835 175 Years Celebrating OUR LEGACY "Inspiring Our Future" 2010 STEUARTS

# விற்பனைப் பிரதிநிதிகள்
## (வட மாகாணம் - யாழ்ப்பாணம்)

இலங்கையின் பழம்பெரும் வர்த்தக நிறுவனத்தின் துணை நிறுவனமும், மருத்துவ, சத்திரசிகிச்சை மற்றும் நோயைக் கண்டறியும் தயாரிப்புகளை சந்தைப்படுத்தலிலும் விநியோகித்தலிலும் விரைவாக வளர்ந்துவருவதும், உலகம் முழுதும் பிரபலமான கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுமான ஜோர்ஜ் ஸ்ருவர்ட் ஏஜென்சீஸ் (ப்றைவேட்) லிமிட்டெட் நிறுவனம் மேற்குறிப்பிட்ட பதவிக்கு உடனடி வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

எமது மருந்தகப் பிரிவை வளப்படுத்துவதற்காக, சிறந்த ஆளுமையும், பற்றுறுதியும் கொண்ட தனிநபர்களை எதிர்பார்க்கின்றோம்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- க.பொ.த. (சா.த) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் அடங்கலாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- பெயர்பெற்ற மருந்தகக் கம்பனி ஒன்றில் பொதுவான மற்றும் வியாபாரக் குறியிடப்பட்ட தயாரிப்புகளை விற்றலில் ஆகக்குறைந்தது 2 வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- 35 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- பொருத்தமான விண்ணப்பதாரிகள் வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.
- சந்தைப்படுத்தல் தொடர்பில் தொழில்சார் தகைமை, ஆங்கிலத்தில் புலமையும் மேலதிக மொழி அறிவும் கொண்டிருத்தல் என்பன மேலதிக நன்மையாகும்.

கவர்ச்சிகரமான மற்றும் பேசித்தீர்மானிக்கக்கூடிய சம்பளப்பொதி வழங்கப்படும்.

தற்போதைய மற்றும் முன்னைய தொழில் பற்றிய விபரங்களையும், ஒரு அண்மைக்கால கடவுச்சீட்டு அளவு புகைப்படத்தையும், கல்வி மற்றும் தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகளையும், உறவினரல்லாத இருவரின் பெயர் விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுய விபரக் கோவையினை பத்து நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

The Senior Director
**GEORGE STEUART AGENCIES (PVT) LTD**
7 E, Post Masters Place,
Off Templers Road, Mt. Lavinia
Website :www.gsagn.com

SINCE 1835
GEORGE STEUARTS
GROUP

STEUART CREATIONS

GEORGE 1835 175 Years Celebrating OUR LEGACY "Inspiring Our Future" 2010 STEUARTS

வசீகரத் தோற்றத்திற்கு!
# சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், நங்நமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
(சி/555203)
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

## வீடு, காணி விற்பனைக்கு
6 பரப்பு வெறுங்காணியும், 6 பரப்பு வீடு வளவும் (4 அறை வீடு) விற்பனைக்கு உண்டு.
சோடாக்கொம்பனி லேன்,
குளமங்கால்,
மல்லாகம்.
**T.P : 0777-877843**

## தேவை
அநுராதபுரத்தில் இருந்து கொழும்புக்குப் பொருள்கள் கொண்டு செல்வதற்கு கென்ரெய்னர் (10 wheel or 6 wheel) பாரவூர்த்தி உடன் தேவை.
தொடர்பு: 0755508114
(யாழ்ப்பாணத்தில் பொருள்களை இறக்கிவிட்டு கொழும்பு செல்லும் வாகனங்கள் விரும்பத்தக்கது)




# GREAT OPPORTUNITY

Grab job opportunities abroad with Australian qualification at minimum bearable cost

Study
## AUSTRALIAN JOB COURSES
(Skilled Education) in PHILIPPINES



- Diploma of Accounting
- Automotive Technology
- Refrigeration and Air Conditioning
- Electrical and Instrumentation
- Information (IT) Systems
- Hospitality Restaurant Operations
- Hospitality Commercial Cookery

AITMG
AUSTRALIAN INTERNATIONAL TRAINING AND MANAGEMENT GROUP
PO Box 423, Hindmarsh, South Australia 5007 Australia.
Web : www.aitmg.com.au

- Food Processing Retail Baking
- Aged Care work
- Sport and Recreation / Golf Management
- Carpentry and Joinery
- Bricklaying and Block Laying
- Wall and Floor Tiling
- Plumbing
- Beauty Therapy

## Free Seminar
Conducted by Australian Representative
**Ms. Sonia Smits**
Business Development Manager
AIMTG Australia



**JAFFNA**
TILKO HOTEL
Saturday 10.00 am to 1.00 pm
27th March 2010

**BATTICALLOA**
Sunday 10.00 am to 1.00 pm
28th March 2010
(Location to be announced)

**HORIZON COLLEGE INTERNATIONAL (HCI)**
**HCBT CAMPUS**
No. 482 / B, Millennium Drive,
Chandrika Kumaranathunga Mawatha, Malabe, Colombo
Tel: + 94 11 2412209, 2412035, 5748468 Fax : +94 11 2556116
Web : www.horizoncollegeinternational.com

**Clark Education City**
Clark Special Economic Zone
Pampanga 2023
Philippines
Web : www.aitmg.com.au

Appointments
**Call : Geethan**
**0773 484 467**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செ லி ங் கோ லை .ﹰ. ப்

## உங்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு மென்மேலும் முன்னோக்கிச் செல்கின்றது!




செலிங்கோ லை.'.ப் நிறுவனத்திற்கு உரிய கட்டிடங்கள்


அனுராதபுரக் கிளை


களுத்துறை கிளை


திஸ்ஸமஹாராம கிளை


காலி கிளை


இரத்தினபுரி கிளை

செலிங்கோ லை.'.ப் தனது செயற்பாடுகளை 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள தனது புதிய சொந்த தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பித்துள்ளது. இங்கே வாகனம் நிறுத்துவதற்கான விசாலமான இடவசதி, வாடிக்கையாளர்களுக்கென பாரிய கூடம், நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் வசதிக்கென மண்டபம் என அனைத்து வசதிகளும் காணப்படுகின்றன. செலிங்கோ லை.'.ப் நிறுவனத்திற்கே உரிய கட்டிடங்கள் மற்றும் கிளை காரியாலயங்களுடன் இப்புதிய கட்டிடமும் இணைகின்றது. இது நிறுவனத்தின் உறுதியான மற்றும் நிலையான தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

செ லி ங் கோ லை .ﹰ. ப்

செ... வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இ... இணையத்தளம்: www.ceylincolife.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 13 ★ 01 ★ 1927



மறைவு 19 ★ 02 ★ 2010

அமரர்

### சின்னத்தம்பி பொன்னுத்துரை

(இரசாயனவியல் பட்டதாரி ஆசிரியர் - ஓய்வு நிலை)

19.02.2010 அன்று எமது குடும்பத்தலைவர் எம்மை விட்டு பிரிந்த செய்தி கேட்ட உடனேயே நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்னாரது மறைவையொட்டிப் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன்,

21.03.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'செல்வமாணிக்கம்',*
*பதிவுகாரர் ஒழுங்கை,*
*தலங்காவற்பிள்ளையார் கோயிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

(95776)

## நெற்காணி விற்பனைக்கு

நவாலியில் அராலி-கொத்துக்கட்டி வீதியில் கேணி மடத்துக்கு அருகாமையில் பனைப்பிட்டியுடன் கூடிய 6பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0779590534

## வீடு, வளவு விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் இல. 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, அடைக்கலமாதா கோவிலுக்கு அண்மையாக 10அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடும்,
* திருநெல்வேலிச் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் Front Lane இல் 50M தூரத்தில் 2½பரப்புக் காணியில் அமைந்துள்ள புதிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776146434

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாண நகரத்தில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளுடன்வாகனம்நிறுத்தி வைக்க இடவசதியுடனான இடம் அல்லது திருத்தி அமைக்கக் கூடிய பழைய வீடு சுற்றுலா விடுதிக்கு வாடகைக்குத் தேவை.

தொ.பே.இல: 0729011811, 0716807035

(95750)

## நெஞ்சைவிட்டகலாத 4ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 24 ★ 12 ★ 1942



உதிர்வு 30 ★ 03 ★ 2006

அமரர்

### நாகலிங்கம் றெங்கநாதன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.A), நீர்ப்பாசனத் திணைக்களம்)

*திதி: பிரதமை 16.03.2010*

அத்தியடிப்பிள்ளையார் அழகுத் திருவடியில் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

*அத்தியடிப்பிள்ளையார்*
*கோயிலடி,*
*அம்பலவாணர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/565596)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஸ்ரீலங்காவின் முன்னணி டைல்ஸ் தயாரிப்பாளர்களுக்கு யாழ்நகரில் ஒரு காணித்துண்டு தேவை.

உலகத்தரத்திலான டைல்ஸ் மற்றும் குளியலறை சாதன தயாரிப்பாளர்களுக்கு யாழ்நகரின் விற்பனை நிலையமொன்றினை அமைத்துக்கொள்ள யாழ் மாநகர சபை எல்லைக்குள் ஒரு காணித்துண்டொன்று கொள்வனவு செய்வதற்காக தேவைப்படுகின்றது. குறிப்பிட்ட இடம் சகல வசதிகளுடனும் கிட்டத்தட்ட 20 - 25 பர்சஸ் விஸ்தீரணம் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

உங்கள் விபரங்களையும் தகமைகளையும் அனுப்பிவையுங்கள்.

விற்பனை நிர்வாக தலைவர்
இல. 10 ஆர். ஏ. டி மெல் மாவத்தை
கொழும்பு 03
அல்லது தொலைநகல் 0114720077
அல்லது தொலைபேசி 0114799400

தயவுசெய்து இவ்விளம்பரம் கண்ட 14 நாட்களுக்குள் பதிலளிக்கவும்.



## STUDY IN UK

USA, AUSTRALIA, MALAYSIA & SINGAPORE

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்! NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
(A Subsidiary of Flex Graphic)

www.flexinstitute.lk

## IPM இப்போது யாழ்ப்பாணத்தில்



### மனிதவள முகாமை துறையில் சான்றிதழ் கற்கை நெறி.

உங்கள் திறமைக்கு நாம் உரமூட்டுவோம்

**அனுமதிக்கான தகுதிகள்:**

- IPM அடிப்படைக் கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்கள், அல்லது
- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று சித்திகளும் ஏதேனும் ஒரு துறையில் மேற்பார்வை மட்டத்தில் குறைந்த பட்சம் 2 வருட அனுபவமும் பெற்றவர்கள், அல்லது
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி.

| | |
|---|---|
| கற்கை நெறிக் கட்டணம் | ரூ.23,000/- (+3% NBT + 12% VAT) = ரூ.26,532.80 |
| காலம் | 3 மாதங்கள் |
| ஆரம்பம் | 2010 மார்ச் 20ஆம் திகதி |
| ஊடகம் | ஆங்கிலம் |

தொடர்புகொள்ளவும் : இணைப்பாளர் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண்ஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொலைபேசி – 021-2223374 / 021-4922000
கொழும்பில் – 4542467 என்ற இலக்கத்தில் தினேஷ்

IPM Sri Lanka

**இலங்கை ஆளணி முகாமை நிலையம் (INC.)**

IPM, ஆசிய பசிபிக் மனிதவள முகாமைச் சம்மேளனம் (APFHRM), ஆளணி முகாமைச் சங்கங்களின் உலகச் சம்மேளனம் (WFPMA) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. APFHRM தலைவராகவும் WFPMA சபை அங்கத்தவராகவும் அது முன்னர் பணியாற்றியுள்ளது.

"HR இல்லம்" இல.43, விஜய குமாரதுங்க மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.
தொலைபேசி: 011 4 511138 பெக்ஸ்: 011 4 511107 ஈ-மெயில்: businessschool@ipmlk.org
இணையத்தளம்: www.ipmlk.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில், K.K.S. Roadஇல் இருந்து, பிரபல்யமான இடம், 4ஆவது வீடு, பெரியபாதையுடன் அமைந்துள்ள பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

வீடு entrance gate, exit gate, porch, 2 குசினி, முன் விறாந்தை, நடு hall, , உள் hall, , 5அறைகள், 3 கழிவு கூடங்கள், பின்புறமாக இன்னுமொரு வீடு அமைக்கலாம். வருவாய் தரும் மரங்கள், கிணறு pipe உண்டு, K.K.S. Road 40 அடியாகப் பெருப்பிக்கப் படுகின்றது.

**Tel: 0776326345, 94-112715028**
**Email: nalariyam@gmail.com**




## நன்றி நவிலலும் ஞாபகார்த்த ஆராதனை அழைப்பும்



### டானியல் சின்னையா தம்பியையா

தோற்றம் 31.05.1920 மறைவு 12.02.2010

கடந்த 12.02.2010 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில்வந்தும், தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வாழ்வுக்கும் பணிக்குமான நன்றிசெலுத்தும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

## விபத்தில் வயோதிபர் காயம்

முச்சக்கர வண்டியும்- மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது.

பிரதேச செயலகத் துக்கு அருகில் உள்ள வீதியில் வந்த முச்சக்கர வண்டி ஏ-9வீதிக்குள் சென்ற வேளை அவ் வழியே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதாக விபத்தினை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கி காயமடைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் என்னும் வயோதிபருக்கு கால் முறிந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

(201-207)

## காலத்தே....

சாத்தானின் சபையிலே நடைபெற்ற மந்தராலோசனை பற்றிய கற்பனைக் கதை யொன்று உண்டு. மனிதன் தனது தீய முறைகளில் இருந்து மீளாமல் தொடர்ந்தும் பாவத்திலேயே நிலைத்திருக்க என்ன செய்யலாம் என்பதுதான் வினா. பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. உண்மையை அவனிடமிருந்து மறைத்துவிடலாம் என்பது ஒரு ஆலோசனை. ஆனால் சாத்தானின் தலைவனுக்கு திருப்தியில்லை. அவன் எப்படியும் அதைக் கண்டுபிடித்து விடுவான் என்பது அவனது கருத்து.தீமையை இன்னும் கவர்ச்சியானதாக்குவோம் என்பது வேறொரு கருத்து. அதிலும் திருப்தியில்லை. ஏனெனில் எவ் வளவு கவர்ச்சியானதானாலும் அது சலித்துப் போய்விடும் என்பது தலைவனின் கருத்து. இறுதியாக ஒரு ஆலோசனை முன்வைக்கப்பட்டது. தீய நெறிகளின் தீமையை அவன் அறிய விட்டுவிடுவோம். அதை விட்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தையும் அவனிடம் தோன்ற அனுமதிப்போம். ஆனால் நாளைக்கு திருந்துவோம். நாளை எமது வழியை மாற்றுவோம் என்ற மனப்பாங்கை ஒழுங்குபடுத்துவோம் என்ற ஆலோசனைதான் அது. இந்த ஆலோசனை

### தவக்காலச் சிந்தனை



சாத்தானின் தலைவனுக்கு மிகவும் பிடித்துப்போனது. இந்த வலையில் மட்டும் ஒருவனை விழுத்தி விட்டால் அவன் ஒருபோதும் மீளமாட்டான் என அவன் உறுதியாக நம்பினான்.

காலத்தே பயிர் செய்ய வேண்டும் என்று எமது முன்னோர்கள் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். உரிய விடயங்களை உரிய நேரத் தில் செய்யத்தவறுவது, தீய பழக்க வழக்கங்களில் இருந்து விடுபடும் எண்ணத்தைப் பிற்போடுவது, நல்லது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தள்ளி வைப்பது அல்லது விடயங்களைப் பிற்போடப் பழகுவது நிச்சயமாகத் தோல்வியையும்,விரக்தியையும் நோக்கி எம்மை நடத்திச்செல்லும்.

எமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு கணமும்,ஒவ்வொரு நாளும் மீளவும் பெற முடியாத அருமையான பொக்கிஷமாகும். படகில் பயணம் செய்யும் போது ஆழ்கடலில் கைவிடப் படும் ஒரு பொருளைப்போல அது எமது கண்முன்னே என்றென்றுக்குமாக இல்லாமல் போய் விடும். இழக்கும் பலவற்றை நாம் மீளப்பெற்றுவிடலாம். ஆனால் காலத்தை ஒருபோதுமே திரும்பப் பெறமுடியாது.

எமக்குத் தரப்பட்டிருக்கும் ஒவ்வொரு நாளும் நாம் பலன் கொடுக்க இறைவன் தந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இயேசு அழகான ஒரு உவமை சொன்னார். தன்னுடைய தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைக்கும் ஒருவன் மூன்று ஆண்டுகளாக வந்து பழம் தேடுகிறான். ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் வெறுப்படைந்த அவன் அதை வெட்டிவிட எண்ணுகிறான். அதை தொழிலாளியிடம் சொன்னபோது அவன் சொல்கிறான் ''ஐயா இந்த ஆண்டும் எருப்போடுவோம், பராமரிப்போம், காய்த்தால் சரி இல்லையேல் வெட்டிவிடுவோம்''. அத்திமரத்துக்கு கனிகொடுக்க ஒரு ஆண்டு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது போல எமக்கும் வழங்கப்பட்டிருக்கும் அவகாசக் காலமாக எமது ஒவ்வொரு நாளையும் கருதி வாழ்வோமானால் நாம் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவராவோம்: வாழ்வோமா?

அருள்பணி எம்.பி.ஈ.இரவிச்சந்திரன்

## விற்பனைக்கு

நிசான் சுப்பர்சலூன் கார் 301XXX விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774002265

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983, அவிட்ட நட்சத்திரம், முதலாம் பாதத்தில் பிறந்த சொந்த புத்தக வியாபாரம் செய்யும் மணமகனுக்கு பெற்றோர் தகுதியான மணமகளைத் தேடுகிறார்கள். படம், ஜாதகக் குறிப்பு, தொலைபேசி, விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.
குறிப்பு: திருமணத் தரகர்கள் தேவையில்லை.
C/O 35997 உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் ஐந்து பரப்புக் காணியுடன் கூடிய கல்வீடு, வளவு விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: முருகன் நகை மாளிகை,
சாவகச்சேரி (இலங்கைவங்கி முன்பாக), தொ.பே: 0775369798

## வீடு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் இராச வீதியில் தோப்பு என்னும் இடத்தில் மூன்று பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளையும் உள்ளடக்கிய விசாலமான மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0774312560

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, ஸ்டேசன் வீதியில் , பாடசாலை வீதியில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 071 5288969, 024 3241803

## விற்பனைக்கு

புத்தம் புதிய Tusker Super லொறி விற்பனைக்குண்டு. (LJ- 8 XXX)

தொ.பே. 0776090926, 0775250996

## விற்பனைக்கு

சாவகச்சேரியில் உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு. (பெட்டியுடன்)

தொடர்பு : 077 7765342, 077 7374925

## சாரதிகள் தேவை

சொகுசு பஸ் ஓட்டக்கூடிய அனுபவம் வாய்ந்த சாரதிகள் தேவை.

தொடர்புகட்கு:071 5288969, 024 3241803

## விற்றுத் தீர்த்தல் அதிரடிக்கழிவு விலை

| | |
|---|---|
| 01. Ceiling Fan | 2,350.00 |
| 02. D.V.D Player | 4,250.00 |
| 03. Computer Casing | 2,350.00 |
| 04. Stand Fan | 3,400.00 |
| 05. Table Fan | 2,400.00 |
| 06. Refrigerater (Double Door) | 30,500.00 |

தொடர்பு: சிங்கல் எலக்ரோனிக்ஸ்,
11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0212225857

(95773)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

கசிப்பு வைத்திருந்த வரணி இடைக்குறிச்சி வாசிக்கு கிழக்கு சாவக்சேரி நீதிமன்றில் 30 ஆயிரம் ரூபா அபராதமும் 2மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் இந்நபருக்கு மேற்படி தீர்ப்பு வழங்கி அபராதத் தொகை செலுத்தத்தவறின் 6 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (201-207)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். கனடியன் சிற்றிசன். படித்தவர், வசதியானவர், நிரந்தரவேலை. விவாகரத்துப் பெற்றவர், பொறுப்புக்களற்றவர், 43 வயது, 5'8 ½", கவர்ச்சியான தோற்றம், உத்தராடம் 4, பொருத்தமான மணமகள் தேவை. வயது (38-42) விதவைகள், விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். மணமகளின் குடும்ப விவரம், படம், குறிப்பு,தொலைபேசி எண், விலாசத்துடன் விண்ணப்பிக்கவும்.
C/O NEW UTHAYAN 3996,369, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவி தெ.இனோதாரணி
அவர்களின் அன்புத்தந்தை

### இ.தெய்வபுலேந்திரா

அவர்களின் திடீர்பிரிவால் துயருற்றிருக்கும் எமது நண்பிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விடுகை வருட பொறியியற் பீட மாணவர்கள் (E/05),
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 11 * 10 * 1928



இறப்பு 12 * 02 * 2010

### திருமதி தியாகராசா ஞானம்மா

நெஞ்சம் மறக்குமோ அம்மா
உங்கள் பாசத்தை மறக்க முடியுமோ அம்மம்மா!
ஞான தியாகமாய் எங்கள் குடும்பத்திற்கு
ஞான விளக்கேற்றிய ஞானம்மா!
சிவன் இராத்திரியில் சிவன் பாதத்திற்கு
விளக்கேற்றச் சென்று விட்டீரோ........

இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இலத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் கட்டை, மானிப்பாய் வீதி,
உடுவில்.

குடும்பத்தினர்.

(95853)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்த, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் குடும்ப வைத்தியராகப் பணிபுரியும் சகோதரர், தனது 29 வயது நிரம்பிய பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரியும் 5'6" உயரமுடைய சகோதரிக்கு கனடாவுடன் இணைந்து அல்லது தனியாகப் பணிபுரிய விரும்பும் தகுதியுள்ள மணமகனைத் தேடுகிறார். ஜாதகத்தில் செவ்வாய், ராகு, கேது, தோஷமுடையவர்கள் விரும்பப்படுகின்றனர்.

விளம்பர இல: 3992 மே/பா உதயன்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### சண்முகராசா சந்திரமோகன்

தோற்றம் 02★01 ★1980

மறைவு 13★02 ★2010

கடந்த 13.02.2010 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் சண்முகராசா சந்திரமோகன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.03.2010) திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
கோகுல வீதி, இளைஞர் சனசமூக நிலைய
அருகாமை, அன்னங்கை, உரும்பிராய் மேற்கு.

*தற்காலிக முகவரி:*
8 ஆம் வட்டாரம்,
மந்துவில்,
புதுக்குடியிருப்பு.

தகவல்
சண்முகராசா-செல்வராணி, (தந்தை)-(தாய்)
கோமலதா (மனைவி), சுபிதரன் (மகன்),
செல்வராசா-அன்னமேரி (மாமன், மாமி).

(92184)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை அன்னலட்சுமி



பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அன்னலட்சுமி 11.03.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச, கோண்டாவில்) அன்பு மனைவியும் அருட்செல்வன் (லண்டன்), சிவச்செல்வன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற தவச்செல்வன் ஆகியோரின் அன்புத்தாயும், ராஜி (லண்டன்), சியாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கீத், பவுத்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துரைசிங்கம், ஜெகசோதி மலர், சண்முகலிங்கம், இரத்தினசிங்கம் (ஜேர்மனி), சிவராசா (லண்டன்), சுந்தரலிங்கம், அன்னலிங்கம் (லண்டன்), ஜெயலட்சுமி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலாதேவி, வரதலட்சுமி, கேதீஸ்வரி, சயாநிதி, பிருந்தா, சத்தியமூர்த்தி ஆகியோரின் மைத்து னியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னையா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (95867)

தகவல் :
செல்லத்துரை (கணவர்)

### செல்வி விஜயநாகேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(ஆங்கில பகுதித் தலைவர், காலி/திரு இருதயக்கன்னியர்மடம்வித்தியாலயம், இளைப்பாறிய உப அதிபர், யா/இந்து மகளிர் கல்லூரி)



வண்ணார்பண்ணை, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கையில் வசித்தவரும் தற்போது லண்டனை வதிவிடமாகக் கொண்டவருமாகிய செல்வி விஜயநாகேஸ்வரி பாலசுப்பிரமணியம் (11.03.2010) வியாழக்கிழமை லண்டனில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற எஸ்.பாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி, இளைப்பாறிய காரியதரிசி, யாழ்.மாநகரசபை)-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், மகா பாலேஸ்வரியின்(U.K) பாசமிகு சகோதரியும், கணேசலிங்கம் (முன்னாள் யாழ்.மாவட்ட பொறியியலாளர், கட்டட அமைப்பாளர், A.C.M.E Group Company -நைஜீரியா) அவர்களின் மைத்துனியும், கேசவன் (Canada), கோமதி(U.K) ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும், Dr.நவநீதம் (U.K), கிருபானந்தி (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நந்தகிருஷ்ணா, சத்யநாராயணா (U.K) கோகுலன், கிருத்திகா(Canada) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2010)ஞாயிற்றுக்கிழமை லண்டனில் உள்ள Hendon Crematorium Holders Hill Road, Mill Hill,Nw 7 1 NB யில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல,74,இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (95862)

தகவல்:
இசக்கி ஆசாரி குடும்பத்தினர்.

## மெய்வன்மைப் போட்டிகள்

கல்வியங்காடு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்திலுள்ள ஞானபாஸ்கரோதய முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மை போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மாதர் சங்கத் தலைவி திருமதி ரஜனி மால் மருகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு முன்பள்ளி நிர்வாக உத்தியோகத்தர் திருமதி விசாஜினி பிரபாகரனும் கலந்து கொள்வர். (201-14)

* * *

யாழ். சென் சார்ள்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எம்.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவரும் மாநகரசபை உறுப்பினருமாகிய எஸ்.விஜயகாந்தும் சிறப்பு விருந்தினராக நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் வி.பரமநாயகமும் கலந்து கொள்வர். (201-16)


## காணி விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சமீபமாக, நல்ல சுற்றாடலில், சங்கிலியன் வீதியில், 10 அடி பாதையுடன் கூடி 1 ½ பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. விலையை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். வேலை நாள்களில் பி.ப. 4.30 இன் பின்பும் பார்வையிடலாம். சனி, ஞாயிறு தினங்களிலும் முழுநேரமாகவும் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:-திரு T.பரமானந்தர்
15/5, சங்கிலியன் வீதி, நல்லூர் வடக்கு.

## 30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.



10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லாம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523

## "A Novel Concept In Home Building" Now In Jaffna
## Building Or Renovating Your Home In Your Own Land

**DWELLCO (PVT) LTD.**, a Leading Construction Company, with over 20 years of experience in Personalized Home Building and Multi Storied building construction, will shortly open its Branch Office in Jaffna.

We invite suitably qualified and experienced personnel to join our team to offer our clients a complete package in Home Building Services from design to completion of construction.

### Branch / Sales Manager

A Self motivated and results oriented **Team Leader**, with the ability to co-ordinate and organize the operations of a branch office, expanding on the firm foundations established by Dwellco in the Construction Industry over the last 20 years.

He should possess good communication skills with a minimum of 5 years experience in Sales and Marketing. Command of the English & Tamil languages and Computer Literacy are essential pre requisites, Whilst Professional qualifications will be an advantage.

Applicants between the ages of 30 to 40 years are preferred, whilst others confident of managing the challenges mentioned may also apply.

A rewarding remuneration package with good career prospects, awaits the suitable candidate.

### Sales/Marketing Representatives

Result oriented ambitious young persons with a hearty spirit and sales orientation to pursue a career in sales and marketing are encouraged to apply.

A good educational background and a minimum of 2 years experience are required, whilst command of the Tamil language and Computer literacy is mandatory.

### Site Engineers

Persons with good communication skills and the ability to co-ordinate and manage construction sites of varied nature ensuring High Quality Standards and meeting time schedules need apply.

B Sc. / NDT / City and Guilds in Civil Engineering with 3 years experience or NCT with 5 years experience are pre requisites, whilst Computer literacy is essential.

### Technical Officers

Persons with dedication to ensure achieve quality standards and time schedules need apply.

NCT (Civil) with minimum 3 years experience in construction and Computer literacy are essential.

### Asst. Quantity Surveyors

NCT (QS) with 2 years experience and Computer literacy are essential.

### Junior Secretary / Accounts Assistant

A personable young lady with a drive to manage general office responsibilities and duties with shorthand and typing is required.

Command of the English / Tamil languages and Computer literacy are essential.

***All the above positions will carry good remuneration packages in addition to career prospects for the suitable candidates.***

Please forward your complete resume to reach us within 10 days to:

**Dwellco (Pvt) Ltd**

1090, Sri Jayawardanepura Road, Rajagiriya.
Tel: +9411 2873471-3 Fax: +9411 2873475
E-mail: dwellco@sltnet.lk Web: www.dwellco.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தாலியின் பாதுவா நகரில் இருந்து இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட புனித அந்தோனியாரின் திருப்பண்டம் நேற்று கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்களின் வணக்கத்துக்காக வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஆனைக்கோட்டை புனித அன்னம்மாள் ஆலய முன்றிலில் இருந்து அந்தோனியார் திருப்பண்டம் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனியாக எடுத்து வருவதையும், பவனியில் பொதுமக்கள் கலந்துகொண்டு வணக்கம் செலுத்துவதையும் முதல் வரிசையில் உள்ள படங்களிலும்,

பவனியாக எடுத்துவரப்பட்ட திருப்பண்டம் மானிப்பாய் அந்தோனியார் ஆலய பீடத்தில் வைக்கப்பட்டிருப்பதையும் அருட்தந்தை கிருபாகரன் மறை உரையாற்றுவதையும் இரண்டாவது வரிசையில் உள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: ரட்ணம்)

**காணி விற்பனைக்கு**

நவாலி தெற்கில் பாதையோரமாக கிணற்றுடன் 5ப.6.6கு காணி விற்பனைக்குண்டு. தேவை ஏற்படின் துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும்.

தொடர்பு: 0779676128

## "ஸ்கிறீன் பிறிண்டிங்" பயிற்சி 22 முதல்

நல்லூர் விதாதா வள நிலையத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நான்குதினங்கள் "ஸ்கிறீன் பிறிண் டிங்" தொடர்பான பயிற்சிகள்நடைபெறவுள்ளன.

விஞ்ஞானதொழில் நுட்ப அமைச்சினால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளஇப்பயிற்சிநெறியில் கலந்து கொண்டுபயிற்சிபெற விரும்புபவர் கள் தமது பதிவுகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் பாக விதாதா வள நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ரி-111)

**மரண அறிவித்தல்**

திருமதி **இரத்தினேஸ்வரி கந்தசாமி**



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி கந்தசாமி அவர்கள் 11.03.2010 கொழும்பில் காலமானார்.

அன்னார் சபாபதி கந்தசாமி ஆசாரியாரின் அன்பு மனைவியும் அமரர்களான கந்தையா-குணவதி தம்பதியினரின் அருமை மகளும், பாலசுந் தரம், சுவாமிநாதன், அமரர் பால கிருஸ்ணன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் கமலசபாபதி துரைச்சாமியின் மைத்துனியும் கமலாதேவி இலங்கேசன், தயாளினிதேவி, இளங்கோவன் (கோபு), சாந்தினிதேவி, பத்மினிதேவி, இளங்கீரன் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ் வரன், உதயகுமார், குகநேசன், ராதிகா, சுதாஜினி, ரஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோஜ், ராமப்பிரியா, சஞ்சயன், சிந்துஜன், ஜாதவன், அமரர் நிதர்சன், கீர்த்தனன், சங்கர்சன், சௌமியா, சதுர்னா, கம்சிகா, மிருலின் ஆகியோரின் அருமைப் போத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.03.2010) ஞாயிற்றுக்கிழமை தெகிவளையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (15.03.2010) திங்கட்கிழமை மதியம் ஒரு மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று மாலை 3 மணியளவில் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

NO.7, Frazer Avenue
Dehiwala.
T.P: 0112737776

தகவல்:
சபாபதி கந்தசாமி
கந்தசாமி இளங்கோவன் (கோபு).

(சி/565472)

## இலட்சார்ச்சனை

சுழிபுரம் பறாளாய் சிவ சுப் பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை விசேடஅபிஷேகஆராதனைகள், நண்பகல் விசேட பூசை கருமங்கள், பிற்பகல் இலட்சார்ச்சனைஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தினமும் மாலை நடைபெறும் இலட்சார்ச்சனை முடிவின் போது யாவரும் ஒன்று சேர்ந்து கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல்களும் பாடி நிறைவு செய்வார்கள்.(1-28)

## யாழ்.கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.14

யாழ்.கோட்ட மட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் மறுநாளும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை உரிய நேரத்திற்கு அழைத்து வருமாறு அனைத்து அதிபர்களும் கேட்கப்பட்டுள்ளனர். (1)

STUDY IN THE UK

Anglia Ruskin University
Cambridge & Chelmsford



Advice & Career Guidance for School leavers

Admission for September 2010 Intake

Spot Admissions

by University Representative Mr. Bernie Ryder on

இலவச கல்விக் கருத்தரங்கு
16th March at
St. Johns College Auditorium, Jaffna.
10.00 am to 1.00 pm

We help you with:

- Course Selection and Career Advice
- Application Process/Visa Documentation
- Airport Pick-up/Part-time jobs
- Finding Accommodation

To book an appointment please call us on 2 555 243 ,2555245,0777209446

KMS offers you Two months free IELTS preparation class

KMS KNOWLEDGE MANAGEMENT SYSTEMS
LEADING EDUCATIONAL CONSULTANT AND TRAINING PROVIDERS
329, GALLE ROAD, MEEWELLA BUILDING, FIRST FLOOR, SOUTHERN WING, COLOMBO-04.
TEL: 011 2555243, 011 2555244, 011 2555245 www.kmsworldwide.com

**நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2010**

சுயேட்சைக் குழு 04

**வேலுப்பிள்ளை இராசரத்தினம் (குட்டி விதானை)**

சமாதான நீதிவான், சத்திய மொழிபெயர்ப்பாளர்
(தமிழ், ஆங்கிலம், சிங்களம்)
முன்னைநாள் நகராட்சி மன்ற உறுப்பினர்

X 9



எங்களின் கனவுகள் நனவாக்கி வாழ்விற்காய் கைகொடுக்க
எங்கள் பொன்னான வாக்குகளை இட்டு [illegible] கொடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 ★ 05 ★ 1938



விண்ணில் 14 ★ 03 ★ 2001

## திருமதி வல்லிபுரம் இராசமணி

அன்னையே நீ மறைந்து
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
உன்னையே தினம் நினைத்து
உள்ளத்தால் போற்றுகின்றோம்.

சாந்தை, பண்டத்தரிப்பு. (95876) க.வல்லிபுரம் குடும்பத்தினர்.

### நூல் வெளியீட்டு நிகழ்வு

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 2 ஆம் வருட பகல் நேர மாணவர்களின் நுட்பம் - 2 நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இ.வசீகரன் தலைமையில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வுக்கு நிறுவனத்தின்பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே. எம். சகாயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (201-ரி)

# Vacancy — English speaking driver

THE HALO TRUST

The HALO trust are looking for a driver to be based in Jaffna with occasional visits to Killinochchi. The role will also involve frequent liaising with English speaking international staff as well as logistical responsibilities. Previous experience of NGO work in Jaffna is useful though not essential.

A full valid driving licence (with no motoring convictions) and fluency in English are essential. Pay is variable dependent on experience. Only careful, professional drivers need apply.

Apply in writing no later than **Friday 19th March** with bio-data, contact details and a short CV to:

**The HALO Trust**
**12, Nallur Cross Road, Jaffna, SRI LANKA.**

# STUDY IN THE UK

Anglia Ruskin University
Cambridge & Chelmsford



Advice & Career Guidance for School leavers

Admission for September 2010 Intake

## Spot Admissions

by University Representative Mr. Bernie Ryder on

**17th March - at North Lanka IIT,**
**No. 113, Laxan Plaza, Navalar Road, Jaffna.**
**10.00 am to 12 Noon**

We help you with:

- Course Selection and Career Advice
- Airport Pick-up/Part-time jobs
- Application Process/Visa Documentation
- Finding Accommodation

To book an appointment please call us on 2 555 243


KMS offers you **Two months free IELTS** preparation class

KMS KNOWLEDGE MANAGEMENT SYSTEMS
LEADING EDUCATIONAL CONSULTANT AND TRAINING PROVIDERS

329, GALLE ROAD, MEEWELLA BUILDING, FIRST FLOOR, SOUTHERN WING, COLOMBO-04.
TEL: 011 2555243, 011 2555244, 011 2555245 www.kmsworldwide.com

# கண்ணீர் அஞ்சலி

அமரர்
## இராசையா தெய்வபுலேந்திரா



கந்தோர் கதிரையில் அருகிருந்து
நெஞ்சினிக்கக் கதைபேசி
எதிர்வாதம் செய்து ஓயாது உரையாடும்
உதடுகளின் அசைவெங்கே!
கூப்பிட்ட குரலுக்கு நேரம் காலம் பாராது
விடுமுறை நாள்கள் என்றும் பாராது
மழையோ, வெய்யிலோ, நோய்நொடி
- என்றும் பாராது
எமது ஒப்பந்த வேலையினை
- மேற்பார்வை செய்த உத்தமரே!
தேடுகின்றோம் உன் நிழலை .... எங்கு மறைந்தீர்
துன்பத்தில் வாடும் எமக்கும் தூயவரே உங்கள் குடும்பத்திற்கும்
ஆறுதல் மொழி சொல்லத் தெரியாது துடிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**வடமராட்சி ஒப்பந்தகாரர் சங்கம்.**

# இந்தியாவில் உயர்கல்வியைத் தொடர 2 A/L சித்திகள் போதுமானது....

- **Bangalore University** • **Annamalai University**
- **MS University** • **Thirunelveli** • **Visvesvaraya**
- **Technological University (VTU)** • **Rajiv Gandhi University**
- **Hindustan University** • **SRM University** • **Manipal University**

**B.E BSc B.A B.Ed B.C.A B.B.M**
**B.Com B.P.T M.Sc M.B.B.S M.B.A M.C.A**

## Sri Eshwar College of Engineering Coimbotore
(Anna University College)

**Mechanical Eng. ECE EEE It CSE**

*No. Donations*
*No admission charges*
*Only fees 2500 dollars per year*
*Hostel 750 dollars per year*

**Mobile :- 00919566177777**

***For admissions contact - Lakshya 00914442609159***

**LAKSHAYA EDUCATIONAL CONSULTANT**
**# 36D, Hampden Lane, Colombo - 06. Tel: 011 2366243**

# WANTED PROGRAMMER

Jaffna Based consulting company looking for visual basic programmers with knowledge in data base management and sql sever. interested applicants send your cv to nivas9 @sing net.com.sg

# நினைவு கூருகின்றோம்

7 ஆம் ஆண்டு நினைவு | முதலாம் ஆண்டு நினைவு



கதிர்காமு கிருஸ்ணன்
(முறிவு, நெரிவு வைத்தியர், மீசாலை)



திருமதி அன்னப்பிள்ளை கிருஸ்ணன்
(மீசாலை)

05.10.1924 ← மலர்வு → 02.06.1937
19.11.2003 ← உதிர்வு → 25.03.2009

மாநிலந் தன்னில் மனமொத்த தம்பதியாய்
மாண்புறு சேவைகள் மண்ணினிலாற்றி
மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றாலும்
மனதினில் வைத்துங்களை மனதாரப் போற்றுகின்றோம்.

பிள்ளைகள்: கி.பிரபாகரன் (ஹொலன்ட்),
சி.சின்னராசா (லண்டன்), தங்கராசா (பிரான்ஸ்),
திருமதி ராதா சிவபாதம் (பிரான்ஸ்),
திருமதி.பரமேஸ்வரி பாலேந்திரன், திருமதி ஈஸ்வரி சின்னராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உலக அதிசயமாக விளங்கும் இலங்கை

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய இலங்கைத் தீவின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விரைவில் இலங்கைத் தீவு ''தென்னாசியாவின் அதிசயம்'' ஆக மாறும் எனத் தெரிவித்திருக்கின்றார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குத் தமது 'மஹிந்த சிந்தனை' திட்டம் குறித்து விளக்கம் அளிக்கும் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி அடுத்த தசாப்தத்தில் இலங்கையை 'தென்னாசியாவின் அதிசயம்' ஆக மாற்றும் நிலைக்குத் தமது 'மஹிந்த சிந்தனை' இட்டுச் செல்லும் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். அதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஆறு ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் உறுதி தெரிவித்துள்ளார். தமது அடுத்த ஆறு ஆண்டுகாலப் பதவி உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் தான் இந்த ஆறு ஆண்டு இலக்கை அவர் குறிப்பிட்டாரோ என்னவோ..?

எது எப்படியென்றாலும், இலங்கைத்தீவை இனித்தான் தென்னாசியாவின் அதிசயமாக மாற்றுவது பற்றி அதிபர் மஹிந்த ராஜபக்ஷ பேசுகின்றார். ஆனால் வேறு பல விடயங்களில் தென்னாசியாவினது மட்டுமல்ல உலகில் அதிசயமாகவே இலங்கைத்தீவு மாறியிருக்கின்றமை மறைக்கப்படக் கூடியதல்ல.

பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்கின்றோம் - என்ற பெயரில் ஓர் இனக் கட்டமைப்பையே துவம்சம் செய்து சீரழித்து சின்னாபின்னமாக்கி நாசப்படுத்திய கொடூரம் அரச பயங்கரவாதமாக நவீன உலகில் அப்பட்டமாக - வெளிப்படையாக - வெளிவெளியாக கட்டவிழ்ந்தபோது அதைத் தடுக்க வழியின்றி சர்வதேசம் மௌனம் பேணி வாளாவிருந்து அடங்கிக் கிடந்த அதிசயம் இந்தத் தீவில்தான் அரங்கேறியது.

அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரக் கணக்கில் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்படும் இன வெறியாட்டம் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்குப்பட்டுள்ள லட்சக் கணக்கான சனக் கூட்டத்தின் மீது ஏவிவிடப்பட்ட போது, சர்வதேசமும் உலகப் பொதுமன்றமுமான ஐ.நாவும் திக்கற்று வாய்புதைத்து அடங்கிக் கிடந்த அதிசயம் நிகழ்த்திக் காட்டப்பட்டதும் இந்த இலங்கைத் தீவில்தான்

சிறுபான்மையினமான தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் செய்யப்படும் என்ற வாக்குறுதியை ஒரு புறம் அளித்தபடி, மறுபுறம் அதை நிறைவேற்றாமல்- தன்னிஷ்டப்படி -தன் விருப்பப்படி- சிங்கள பௌத்த மேலாண்மையைத் திணிக்கும் விதத்தில் தனது தென்கோடித் தீவில் இருக்கும் 'இந்துணூண்டு' அளவுடைய இலங்கைத்தீவு நடந்து கொள்ள, அதைத்தட்டிக் கேட்டு தனது தமிழகமாநிலத்துடன் தொப்புள்கொடி உறவுவைத்துள்ள ஈழத்தமிழர் களுக்கு நியாயம் செய்யும்படி வற்புறுத்துவதற்கு வகையின்றி அயல் நாடான இந்தியா விழிபிதுங்கி நிற்கும் அதிசயம் இங்குதான் நடக்கின்றது.

இலங்கை என்று ஒரு சிறிய தீவு, அயலில் வாழும் வல்லாதிக்க சக்தியாகத் திகழும் இந்தியாவிற்கு கண்ணில் விரலை விட்டு ஆட்டும் முறையில் - ராஜதந்திர ரீதியில் - நடந்துகொள்ளும் அதிசயம் இங்குதான் நடைபெறுகின்றது.

புலிகள் மீதான தாக்குதல் அல்லது இராணுவ நடவடிக்கை என்ற பேரில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மோசமான மனிதஉரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் ஆகியவை குறித்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குலக நாடுகள் நன்குணர்ந்துள்ள போதிலும்- அறிந்துள்ள போதிலும் - அந்த அட்டூழியங்கள் குறித்து ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கஇயலாத வக்கற்ற - வகையற்ற - திராணியற்ற நிலையில் அவை அல்லாடும் அதிசயம் இந்த இலங்கைத் தீவை ஒட்டித்தான் இடம்பெறுகின்றது. பெரும் மனிதப் பேரழிவுக்கும் வரலாறு காணாத இனத்துவச் சீரழிவுக்கும் ஒரு தனித் தேசியத்தின் கணிசமான சொத்து அழிவுக்கும் காரணமான கொடூரயுத்தத்தை - குரூரமான இராணுவ நடவடிக்கையை மனிதாபிமான நடவடிக்கை என்று விதந்து போற்றி, ஏத்தி மகிழும் உலக மகா அதிசயம் கூட இந்த இலங்கைத் தீவில்தான் அண்மைக் காலத்தில் நடந்தேறியது. பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்றொழித்த யுத்தத்தை நடத்தி முடித்துவிட்டு ஒரு தமிழ் மகனைக் கூடக் கொல்லாமல் வரும் அதிசய-மீட்பு முயற்சியொன்றை இலங்கை இராணுவம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து கொண்டது எனப் பீற்றிக் கொள்ளும் அதிசயமும் இங்குதான் இடம்பெற்றது.

ஓர் இனத்தின் நீதி, நியாயமான அபிலாசைகளை ஆயுத முனையில் அந்தத் தேசிய இனத்தை வெற்றி கொண்டு அடக்கி அதன் மூலம் மறுத்தபடி-அந்த இனத்தை பேரினவாத மேலாதிக்கத்தின் நிரந்தர அடிமைத் தனத்துக்குள் நிரந்தரமாக சங்கிலியிட்டுப் பிணைத்துக் கொண்டு - அந்த இனத்தை பயங்கரவூதப் பிடியில் இருந்து விடுவித்து சுதந்திரத்தையும் மீளப்பெற்றுக் கொடுத்துள்ளதாக ஆட்சித் தரப்பு-அதிகாரபீடம் - இலகுவாகப் புளுகக் கூடிய அதிசயச் சூழல் இந்தத் தேசத்தில்தான் நிலவுகின்றது.

இத்தகைய கொடூரங்கள், மேலாதிக்க அடக்கு முறைகள், கோர யுத்தங்கள், கற்பனை பண்ணியே பார்க்க முடியாத பேரழிவுகள் ஆகியவை திணிக்கப்பட்டு சின்னாபின்னமாகித் தமது இனம் சிதறிக் கிடக்கின்ற சூழ்நிலையிலும் எஞ்சிய இனத்தையாவது காப்பாற்றிப் பாதுகாத்து, இழந்த உரிமைகளை மீட்டெடுத்து, கௌரவ வாழ்வை ஈட்டுவதற்காக இச்சமயத்திலாவது ஐக்கியப் பட்டு ஒன்று திரண்டு நிற்க வேண்டிய தமிழினத்தின் தலைவர்கள் அதை மறந்து தமது இனத்தை மேன்மேலும் சீரழிக்கும் விதத்தில் பிளவு பட்டு, தமது இன ஐக்கியத்துக்கு வேட்டு வைத்து தமது மக்களை நலிவு படுத்துகின்றமை மட்டுமல்லாமல், அடிமைப்படுத்தும் பேரினவாதத்துக்கு கூஜாதூக்கி கால் பணிந்து, ஏவல் பணியாளர்கள் போல ஏளனமாக நடந்து கொள்ளும் அதிசயமும் இங்கு தான் நடக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடும் தென்னாசியாவின் அதிசயம் ஆக இலங்கை இனித்தான் மாற வேண்டும் என்பதல்ல. அது ஏற்கனவே பல விதங்களிலும் உலகத்தின் அதிசயமாக மாறிவிட்டது என்பது தெளிவாகும்.

# தெற்கிலிருந்து யாழ். வரும் பயணிகளுக்கு தங்குமிட வசதிசெய்ய இணைப்பு அலுவலகம்

## துரையப்பா விளையாட்டரங்கில் இனி அனுமதி இல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்14

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் பயணிகள் தங்குமிட வசதிகளை ஒருங்கிணைப்பதற்கு இணைப்பு அலுவலகம் அமைக்கப்படவிருக்கிறது. யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பயணிகளின் தங்குமிட வசதியினை ஒருங்கிணைப்பதற்கான இணைப்பு அலுவலகம் ஒன்றினை பிரதான வீதியிலுள்ள முன்னைய மாநகர சபையின் வளாகத்தில் புனரமைக்கப்பட்டிருக்கும் கட்டடத் தொகுதியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

தென்பகுதி யாத்திரிகர்கள் தங்குவதற்கு உகந்த இடங்களாக யாழ்ப்பாணம் ரயில் நிலைய மண்டபமும் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள உயர்நீதிமன்றக் கட்டடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக 16அறைகள் கொண்ட பொது மலசலகூடமும் குடிதண்ணீர் மற்றும் குளியல் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு ரயில் நிலைய வீதியும் நீண்ட காலத்துக்குப் பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளது.

பயணிகள் படுத்துறங்குவதற்கு ரயில் நிலைய முன் பகுதியும் உயர் நீதிமன்ற கட்டடத்தின் உள்ளேயுள்ள தரைப்பகுதியும் கழுவி சுத்தம் செய்யப்பட்டுள்ளன. எனவே யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் பயணிகள் மேற்படி இணைப்பு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இந்த நடைமுறை வெகுவிரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன் என்றுள்ளது.

அதேவேளை கடந்த சில நாள்களாக தென்பகுதியிலிருந்து வருகை தந்த பயணிகளில் பெரும்பாலானோர் துரையப்பா விளையாட்டரங்கில் தங்கியிருந்ததோடு தமது வாகனங்களையும் விளையாட்டு அரங்கினுள் நிறுத்தியிருந்தனர். இச்செயற்பாட்டினால் விளையாட்டரங்கும்,பார்வையாளர் மண்டபமும் விளையாட்டரங்கின் பாவனையாளர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிய வண்ணம் இருந்தனர்.

இதுவரை காலமும் தங்குமிடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த விளையாட்டரங்கு மற்றும் நாவலர் கலாசார மண்டபம் போன்றவை உரிய பாவனைக்காக மட்டுமே எதிர்காலத்தில் அனுமதிக்கப்படும். மாநகரசபையிடமிருந்து முன்னனுமதி பெற்றுக் கொள்ளாது எந்தவொரு நிறுவனமும் துரையப்பா விளையாட்டரங்கைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று மேயர் விடுத்துள்ள மற்றொரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

## மின் இணைப்பு, 'வெல்டிங்' பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்14

கைதடி - நுணாவில் அறவழி நிலையத்தினரும் கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினரும் இணைந்து இரு தொழிற் பயிற்சிகளை ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

அறவழிநிலையத்தின் பயிற்சி மையத்தில் வீட்டு மின் இணைப்பு, மின்வாயு ஒட்டு(வெல்டிங்) ஆகிய தொழிற்பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அறவழி செயலகத்தில் கையளிக்குமாறு அறவழிநிலையச் செயலாளர் எம்.கே. ஜீவகதாஸ் அறிவித்துள்ளார்.(ஒ-207)

## சண்டிலிப்பாய்,கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் நாளை ரூபா 25ஆயிரம் கொடுப்பனவுக் கடிதங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 14

இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு நிக்கொட் நிறுவனத்தினரால் வழங்கப்படும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக் கடிதங்கள் நாளை திங்கட்கிழமை கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் மீள்குடியேறியவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார். கோப்பாய் பிதேச செயலர் பிரிவில் 423குடும்பங்களுக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 778குடும்பங்களுக்கும் இந்த வாழ்வாதாரக் கொடுப்பனவுக் கடிதங்கள் குறித்த இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்,குடும்ப அட்டை மற்றும் வங்கி அனுமதிப் பத்திரம் என்பவற்றுடன் சென்று கொடுப்பனவுக்கான கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ -6)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

சாவகச்சேரி,மார்ச் 14

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1மணிக்கு நடைபெறவிருந்த கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் இயங்கும் எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அதிபர் சி.இராஜகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ -171)

## இந்திய இழுவைப் படகுகள் ஊடுருவல்; அமைச்சர் டக்ளஸிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்14

வடமராட்சி மற்றும் மயிலிட்டி பகுதி கடற்றொழிலாளர்கள் இந்திய இழுவைப் படகுகளின் செயற்பாடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்திய படகுகளின் ஊடுருவலால் வடமராட்சி பகுதி கடற்றொழிலாளர்களும் இடம்பெயர்ந்து வந்து அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுவரும் மயிலிட்டி பகுதி கடற்றொழிலாளர்களும் பல கோடி ரூபா நஷ்டமடைந்துள்ளதாகவும் -

இந்திய இழுவைப் படகுகள் வடமராட்சி கரையிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை மிக அண்மித்த நிலையில் அத்துமீறி புகுந்து தொழிலில் ஈடுபட்டு தாங்கள் வீசி வைத்திருந்த வலைகளை அறுத்துச் சென்றுள்ளதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

அப்பகுதிகளின் கடற்றொழிலாளர்கள் சார்பில் வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் அ.யோகராசா, டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து இழுவைப் படகுகளின் மூலம் தொழில்புரிந்து வருவதால் இவ்வாறான பிரச்சினைகளுக்கு எமது உள்ளூர் கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் முகங்கொடுத்து வருவதை தான் உணர்ந்துவருவதாகக் கூறிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவுடன் தான் விரிவாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவித்தார். (ஒ)

## தெற்கிலிருந்து கட்டடத் தொழிலாளர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வருகை

நாவற்குழி,மார்ச்14

தென்பகுதியைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். பாரிய கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களே இவ்விதம் வரவழைத்துள்ளனர். அரச ஒப்பந்தவேலைகளை விரைவாக முடித்துக்கொடுப்பதற்கு இவர்கள் மூலமாக வேலையை விரைவுபடுத்திக் கொள்ளலாமென கட்டட ஒப்பந்தக்காரர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மணலுக்கு நிலவும் பெரும் தட்டுப்பாடு நீக்கப்பட்டால் கட்டட நிர்மாணத் தொழில் வேகமாக முன்னெடுக்க முடியுமெனவும் கூறுகின்றனர். கடந்த 2002,2006 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் தென்பகுதி கட்டடத் தொழிலாளர்கள் நூற்றுக்கணக்கில் யாழ்ப்பாணம், வன்னிப் பெரு நிலப் பரப்புக்களில் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.(1-14)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 01 | 15 .03.2010 திங்கட்கிழமை |
| திதி: | அமாவாசை பி.இ. 02.52 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி முழுவதும் |
| சுபநேரம்: | 12.21-01.51 வரை |
| ராகுகாலம்: | 07.51-09.21 வரை |

## கைதடி பிரதேச சமூக செயற்பாட்டுக்கு புலம்பெயர்ந்தவர்களின் உதவிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்14

கைதடியிலுள்ள நான்கு சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கிவருகின்ற நான்கு முன்பள்ளிகளுக்கான ஆசிரியர் கொடுப்பனவு மற்றும் மாணவர்களின் செயற்பாட்டிற்கான நிதி போன்றவற்றை கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகம் தற்போது வழங்கிவருவதாக சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். லண்டன், சுவிஸ், டென்மார்க், கனடா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில் வசிக்கும் கைதடி வாழ் உறவுகள் இதற்கான நிதியினை வழங்கிவருவதாகவும் இச்செயற்பாடு மட்டுமன்றி வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவுதல், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவருக்கு புலமைப்பரிசில் வழங்கல், உயர்தர மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழகம் செல்லும் மாணவருக்கு உதவும் செயற்பாடுகளுடன் முதியோரைக் கௌரவித்தல், நோயாளர்களுக்கு உதவுதல் போன்ற சமூக சேவைகளை இந்நிறுவனம் தற்போது வழங்கி வருவதாகவும் சனசமூக பிரதிநிதிகள் கூறுகின்றனர். இந்நிறுவனத்தின் மேற்படி சேவைகளை கண்காணிக்கவும் மேலும் விஸ்தரிப்பதற்காகவும் வெளிநாட்டிலுள்ள பிரதிநிதிகள் தற்போது வருகை தந்துள்ளனர். (1-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர சபை, யாழ்ப்பாணம்

# வன்னிப் போரின் கொடுமைகள் மறக்கப்பட்டும் மறைந்தும் போய்விட்ட நிலையில்...........!

## சி.என்.என். ஊடகவியலாளர் சுட்டிக்காட்டுகிறார்

நியுயோர்க்,மார்ச் 14



கடந்தவருடம் முற்பகுதியில் மே மாதம் வரை நடைபெற்ற வன்னிப் போரின் போது, பொது மக்கள் அனுபவித்த அவலங்கள், அவஸ்தைகள் மற்றும் கொடுமையான சம் பங்கள் பலவும் மறைந்து போய் விட்டன. பலரும் தமக்கு நேர்ந்த வற்றை மறந்து போய்விட்டனர்.

இப்போதுஅவற்றை நினைவு படுத்திக் கூறமுடியாத அளவுக்குச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அவற்றை மறந்தும் மனநிலை பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

வன்னிப்போரின் அழிவுகளையும் பாதிப்புக்களையும் எடுத்துச் சொல்லும் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றைத் தொகுத்து சி.என்.என். தொலைக்காட்சியில் வழங்கிய ஊடகவியலாளர் சரா சின்டர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

போர் உக்கிரமடைந்த போது சிறிலங்கா அரசு சுயாதீன ஊடகவியலாளர்களை அங்கு அனுமதிக்கவில்லை. அதன் காரணமாக அங்கு நடைபெற்றவை தொடர்பில் பல கேள்விகள், சந்தேகங்கள் எழும்பியிருந்தன. அத்தோடு நடைபெற்ற பலசம்பவங்களை பொதுமக்கள் எடுத்து கூற முடியவில்லை அவை மறைந்து போய்விட்டன -என்று சரா சின்டர் கூறினார்.

வன்னியில் நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கதைகள் கண்ணீர் வெள்ளத்தையும் ஆத்திரத்தை யும் வெறுப்பையும் ஏற்படுத்தியது. தமது எதிர்காலத்தை தொலைத்துவிட்ட பலர் புதிய சூழ்நிலைகளுடன் இணைந்து வாழ முடியாதவர்களாக உள்ளனர் - என்றும் அவர் தெரிவித்தார் .

அவர் பேட்டி கண்ட ரவீந்திரன் ஜனதா என்ற 21 வயது யுவதி குறித்துப் பின் வருமாறு கூறியதாக சரா சின்டர் சொன்னார்.

இளமைக்கால இளம் வயதினரைப் போல எதிர்கால வாழ்வின் கனவுகள் ரவீந்திரன் ஜனதாவுக்கு கிடையாது. 21 வயதான அவர் தனது எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்ற நம்பிக்கையை கொண்டுள்ளாரா என்றால் 'எதுவுமில்லை' என மென்மை யாக பதில் தந்தார். தனக்கு எதிர்காலம் இல்லை என்பதில் அவர் நம்பிக்கை கொண்டுள்ளார். ஏனெனில் கடந்த காலம் அவருக்கு தந்த அனுபவம் அது.

என்னால் தற்போது எதுவுமே செய்ய முடியாது, அது தான் எனக்குள்ள பிரச்சினை எனக் கூறிய ஜனதாவின் மெல்லிய புன்னகை மெல்ல மறைந்து கண்களை கண்ணீர் நிறைத்துக்கொண்டது. அவரின் நம்பிக்கையான குரல் உடைந்து போனது. கன்னத்தில் கண்ணீர்வழிந்தது.எனக்கு எல்லாவற்றிற்கும் உதவிகள் தேவை என கண்ணீருக்கு மத்தியில் அவர் தெரிவித்தார்.

வன்னியில் நடைபெற்ற போரில் இறுதிப் பகுதியில் அங்கு வாழ்ந்த 280,000 மக்களில் ஜனதாவும் ஒருவர்.

சிறிலங்கா அரச படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் அங்கு கடும் சமர் நடைபெற்றிருந்தது. விடுத லைப்புலிகள் சுதந்திர தனிநாடுகோரி போராடி வந்தனர்.

இந்த மோதல்களில் இருந்து ஜனதா உயிர் தப்பியிருந்தார். ஆனால் அவர் தனது இரு கால்களையும், ஒரு கண்ணையும் இழந் திருந்தார்.

நாம் பதுங்குகுழியினுள் பாதுகாப்பு தேடி ஓடினோம். ஆனால் எறிகணை ஒன்று பதுங்கு குழிக்குள் வீழந்து வெடித்தது. எனது உறவினர் கொல்லப்பட்டார். நான் எனது இரு கால்களையும் இழந்தேன், தனது கதையை கூறும் போது இழந்துபோன தனது கண்ணை அவர் மறந்துவிட்டார்.

பின்னர் ஒரு நிமிட அமைதியின் பின் கூறினார், எனது ஒரு கண்ணையும் நான் இழந்தேன் என்று. ஜனதா தனது குடும்பத் துடன் வடபகுதியில் வசித்து வந்தார். அவர்களும் அங்கிருந்த ஏனைய குடும்பங்களும் போரின் கொடுமையை விபரித் தனர். பல மாதங்களாக தமது உயிர்களை காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் ஒவ்வொரு பதுங்கு குழியாக மாறி மாறி வாழ்ந்தனர் - என்றார். (அ)

---

### இடம்பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசிக்கும் இடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

நிராகரிக்கப்பட்ட வாக்காளர்கள் விரும்பினால் அவர்களின் சொந்த இடங்களில் வாக்களிக்க வசதிகள் செய்யப்படும் என்றார். (ஒ-1)

---

### தங்கத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வைகளும் அகற்றப்படுகின்றமை யால் சந்தையில் தங்கத்தின் விலைகளைக் குறைவடையச் செய்து நாட்டின் தங்க மற்றும் ஆபரணக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படுவதற்கு பங்களிக்கும். இதற்கமைய வர்த்தக வங்கிகளும் மற்றைய அதிகாரமளிக்கப்பட்ட ஆள்களும் கைத்தொழில் தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் விதத்தில் அவர்களது தங்க இறக்குமதிகளைத் தற்பொழுது அதிகரிக்க முடியும் - என்றுள்ளது.

---

### சுவரொட்டிகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயானந்த திஸநாயக்க பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். போக்கு வரத்துச்சபை பஸ்களில் சுவரொட்டிகளை ஒட்டியவர்களை கைதுசெய்யுமாறும் உத்தர விட்டுள்ளார். பொலிஸ்மா அதிபருக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலின் போது பதாதைகள் சுவரொட்டிகளை அகற்ற பொலிஸார் உரிய நடவடிக்கையினை எடுக்கவில்லை என்று தேர்தல் ஆணையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ -1)

---

### கிறிஸ்மஸ்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மற்றும் ஆப்கான் அகதிகள் தொடர்பாக சர்வதேச பாதுகாப்பு வழிகாட்டிகளை மீள ஆராயப் போவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரி வித்துள்ள நிலையிலேயே ஆஸ்திரேலிய அரசாங்கத் தின் இந்த முடிவு வெளியாகியுள்ளது.

---

### புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்குள் ஊருடுவியிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அவர்களில் சிலர் தாக்குதல் நடத்த இருந்தனர் ஆனால் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சியவர்கள் காணாமற் போய்விட்டனர் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்புக்குள் ஊருடுவியிருந்தவர்களுக்கு உத்தரவு வழங்குவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் தளபதிகள் கொல்லப்பட்டதால் உத்தரவு இடுவதற்கு ஆள்கள் இல்லாததால் தற்கொலைதாரிகள் காணாமற் போவிட்டனர் என்றும் -

"வெளிநாடுகளில் புலிகளுக்குச் சார்பாக செயற்படுபவர்களால் நாட்டுக்கு அச் சுறுத்தல் இல்லை. அவர்களுக்கு இராணுவ பலம் இல்லை. மீண்டும் விடுதலைப் புலிகள் எழுச்சி பெற்று வருவதற்கு வாய்ப்பு இல்லை'' என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பிரிவு அதிகாரி தெரிவித்தார். (ஒ -1)

---

### பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்சமயம் மலேசியாவில்தங்கியுள்ள அவரைமருத்துவ சிகிச்சைக்கு இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல அனுமதி தருமாறு இந்தியாவிடம் கோரப்பட்டுள்ளது. அதற்கான அனுமதிக்காகக் காத்திருக்கிறோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து சிங்கப்பூருக்கு அழைத்துச்சென்று அவரை அவரின் உறவினர்களிடம் கையளித்தேன். அவரை உறவினர்கள் மலேசியாவில் தங்க வைத்திருக்கின்றனர். கனடாவில் உள்ள அவரின் மகள் விநோதினி ராஜேந்திரனிடம் கையளிக்க விஸாவுக்கு விண்ணப்பித்தோம். விஸா கிடைக்க 2 அல்லது 3 மாதம் செல்லும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (1)

---

### டிங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிகள் மற்றும் பொருள்கள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கடற்படையினர் இந்த வெடிபொருள்களை மீட்டுள்ளதாக கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

---

### வாக்கு எண்ணும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு எண்ணும் நிலையங்களில் முறைகேடுகள், குளறுபடிகள் நடைபெற்றன என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது தெரிந்ததே.

வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை வாக்கு எண்ணும் நிலையங்களிலும் பணியாற்ற அனுமதிக்க வேண்டிய தன் அவசியத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் எடுத்துக் கூறினார், வலியுறுத்தினார்.

அதனைத் தேர்தல் ஆணையாளர் ஏற்றுக் கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் சில நிலையங்களுக்குள் தமது பிரதிநிதிகளைச் செல்ல அனுமதிக்கவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன.

தேர்தல் முடிவுகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியபோதும் முறையாகவே வாக்கு எண்ணும் பணிகள் இடம்பெற்றதாக தேர்தல் ஆணையாளர் அப்போது அறிவித்திருந்தார்.

இத்தகைய நிலை ஏற்படுவதைத் தவிர்க்க சகல வாக்கு எண்ணும் நிலையங்களிலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் பிரசன்னமாக இருக்கவேண்டும் என்று ஐ.தே.கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா, தேர்தல் ஆணையாளரிடம் கேட்டிருந்தார்.

இதுவரை காலமும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் மட்டுமே சர்வதேச கண்காணிப்பாளர்கள் பணியாற்றினர். எதிர்வரும் தேர்தலில் முதல் தடவையாக வாக்கு எண்ணும் நிலையங்களில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் பணியாற்ற உள்ளனர். (அ-1)

---

## மரண அறிவித்தல்

### திருமதி யூலன்பிள்ளை சிவமாலை அம்மா

பாஷையூரைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி யூலன்பிள்ளை சிவமாலை அம்மா நேற்று (13.03.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் யோன்பிள்ளை யூலன்பிள்ளையின் அன்பு மனைவியும்,சுவாம்பிள்ளை, யூட்டம்மா, யோகராசா, யேசுதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனிஸியர் (ஜேர்மனி), ஜெமிசியஸ் (பிரான்ஸ்), ஜசிந்தா, கசிந்தா, ஜெசிந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.03.2010) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4மணியளவில் கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/2, அன்னையார் வீதி,
பாஷையூர்.

தகவல்:
எமல் கொன்றி.




புதியபிரிவுகள் ஆரம்பம்

Advanced Dip. in Video mixing
- Morph
- Cool3d
- Project
- Premiere
- Soundfroge
- Combustion
- Power director
- Vcd and convertor
- Editing using Photoshop

Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→ 09வரை)
Group Classes

முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

Eisc EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

VACANCY NOTICE

OFFICE BOY
(அலுவலக உதவியாளர்)

காலம் :- 17-03-2010. (புதன்கிழமை)
நேரம் :- மு.ப. 10.00யிலிருந்து..

# 15, SIRAMBIYADI LANE, OFF STANLEY ROAD, JAFFNA.
HOTLINE :- 021-2224550. E-MAIL :- info@eisc.lk,
(COSY HOTELற்கு மேல் 2ம் மாடியில்)








இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org